■ ஹிஜ்ரி 1438 ■ ஜ.அவ்வல் பிறை 18 ■ பக்கங்கள் 12 ■ மணி 03 ■ ஒளி 028

2017 பெப்ரவரி 16
வியாழன்
விலை: 20/-

QD / 154 / NEWS / 2017

NAVAMANI DAILY
නවමණී දිනපතා
# நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுத ... ன குரல்







07» வரலாறு திரும்புமா?

ஒழுக்க சீர்கேடுகளும் துணைபோகும் மேற்குலகும் 09»

12» ஐ.பி.எல். ஏலத்தில் 21 இலங்கை வீரர்கள்

தம்புள்ளை விவகாரம்;

## பொலிஸ் ஆணைக்குழுவில் முஸ்லிம் கவுன்சில் முறைப்பாடு

கடந்த 08 ஆம் திகதி முதல் தம்புள்ளை நகரில் இடம் பெற்ற பதட்ட நிலைமை குறித்து முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீ லங்கா தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் இன்று முறைப்பாடு செய்துள்ளது.

கடந்த 08 ஆம் திகதி தம்புள்ளை நகரில் ரெஸ்டோரண்ட் ஒன்றில் ஏற்பட்ட சம்பவத்தை அடுத்து அதனை பயன்படுத்தி இனவாத நோக்கில் முஸ்லிம் வர்த்தக நிலையங்களை திறக்கவிடாமல் இருந்த சம்பவம் தொடர்பிலேயே

11 »»»»



# கிழக்கு மாகாண தேர்தலில் முஸ்லிம் கூட்டு முன்னணி

மு.கா. தவிர்ந்த ஏனைய கட்சிகளுடன் பஷீர் சேகுதாவூத் பேச்சு

இவ்வாண்டு இறுதியில் நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் கூட்டு முன்னணி ஒன்றை உருவாக்கி போட்டியிடுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்னாள் தவிசாளரும் முன்னாள் உற்பத்தி ஊக்குவிப்பு அமைச்சருமான பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட முன்னாள் தவிசாளரின் அடுத்த கட்ட முன்னெடுப்பு பற்றி கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

செப்டம்பர் மாதத்துடன் பதவிக்காலம் முடியும் கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்றுவதற்காக மூன்று மாவட்டங்களிலும் அபேட்சகர்களை நிறுத்துவதற்காக கூட்டு முன்னணி ஒன்றை அமைப்பதற்கான பேச்சு வார்த்தையை ஆரம்பித்துள்ளதனால் முஸ்லிம் காங்கிரஸ் தவிர்ந்த இதர கட்சிகளுடன் இந்த கூட்டு முன்னணியை உருவாக்கி கிழக்கின் ஆட்சியைக் கைப்பற்ற நடவடிக்கை எடுப்போம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பிரதிநிதித்துவ தேர்தல்களில் போட்டியிடுவதில்லை. தான் எடுத்துள்ள தீர்மானம் தொடர்ந்து அமுலிலிருக்கும் என்று தெரிவித்த

11 »»»»

## கேப்பாப்பிலவு மக்கள் போராட்டம்; ஒரே இரவில் தீர்வு சாத்தியமில்லை

அமைச்சரவை பேச்சாளர் ராஜித



■ அ.அருண் பிரசாந்த்

கேப்பாப்பிலவில் மக்கள் போராடுகிறார்கள் என்பதற்காக இவ்விவகாரத்தில் ஒரே இரவில் தீர்வு காண முடியாது என்று சுகாதார அமைச்சரும் அமைச்சரவை இணைப்பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அத்தோடு, கடந்த அரசில் நிலங்கள் விடுவிக்கப்படாமல் இருந்தபோது எந்தவொரு போராட்டத்தையும் மேற்கொள்ளாது, தற்போது காணிகள்

11 »»

அரச துஷ்பிரயோகம்;

## நாட்டுக்கு 5 ஆயிரம் கோடி ரூபா நஷ்டம்

மஹிந்தானந்த அளுத்கமகே



■ அ.அருண் பிரசாந்த்

அரசின் முக்கியஸ்தர்களால் மேற்கொள்ளப்பட்ட துஷ்பிரயோகத்தால் நாட்டுக்கு

11 »»

## மாகாண அதிகாரங்கள் பறிக்கப்படின் புரட்சிகர மாற்றங்கள் ஏற்படும்

முதலமைச்சர் இசுர தேவப்பிரிய

■ எம்.எஸ்.எம். முன்தஸீர்



நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் உள்ளூராட்சி மன்றங்களிடமிருந்து அதிகாரங்கள் பறிக்கப்பட்டமை தொடர்பில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் முறையான கவனம் செலுத்தல் வேண்டும். இதுவிடயத்தில் அமைச்சரின் கவனம் இடம்பெறாது போனால் மாகாண சபைகள் குறுகிய நியதிச் சட்ட மூலங்களை மாகாண சபையின்

11 »»»»

## பலஸ்தீனர்களை அகதிகளாக்கிய சப்டியின் நிகழ்வில் ஹக்கீம்

முஸ்லிம் முற்போக்கு முன்னணி விசனம்



பலஸ்தீன முஸ்லிம்களின் இருப்பிடங்களை தகர்த்து தரைமட்டமாக்கிவிட்டு, ஜெரூசலம் உட்பட அந்த புனித பூமியில் யூதர்களை பலவந்தமாக குடியமர்த்தக்கூடிய, பாரிய வீட்டுத்திட்டங்களை உருவாக்கக்கூடிய படுமோசமான செயலைச் செய்கின்ற மோசே சப்டி என்பவர் இலங்கைக்கு வந்து கலந்து கொண்ட இலங்கை கட்டட கலைஞர்களுடைய செயலமர்வில்

11 »»»»



## என்ணெய் வள ஆய்வுக்கு ஆஸி. அரசாங்கம் உதவி

இலங்கையில் எண்ணெய் வளம் அதிகமாக உள்ள இடங்களை ஆராய்வதற்கும் அதுதொடர்பில் வரைபடங்களைத் தயாரிப்பதற்கும் அவுஸ்திரேலிய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அவுஸ்திரேலிய வர்த்தக, புதிய உற்பத்திகள்

11 »»»»

## சசிகலா இளவரசி சரண்



சொத்துக் குவிப்பு வழக்கில் 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள சசிகலா நேற்று மாலை 5.15 மணியளவில் பெங்களூர், அக்ரஹா சிறைச்சாலையில் சரணடைந்தார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் சசிகலா, இளவரசி மற்றும் சுதாகரன் ஆகியோருக்கு பெங்களூர் சிறப்பு நீதி மன்றம் விதித்த 4 ஆண்டு சிறை தண்டனையை உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உறுதி செய்து இவர்கள் மூவரையும் பெங்களூர் சிவில் நீதிமன்றத்தில் சரணடைய வேண்டும் என உத்தரவிடப்பட்டிருந்தது.

சசிகலா தரப்பில் நீதிமன்றத்தில் சரணடைய கூடுதல் நேரம் கோரி உயர் நீதிமன்றத்தில் அவரது தரப்பு வழக்கறிஞர்கள் முறையிட்டனர். ஆனால், சசிகலாவின் கோரிக்கையை நீதிபதிகள் நிராகரித்ததையடுத்தே நேற்று அவர் சரணடைந்தார்.

## கண்டி வாகன விபத்தில் 25 பேர், காயம்



■ இக்பால் அலி

கண்டி- கொழும்பு பிரதான வீதியில் கெட்டம்பே பிரதேசத்தில்

11 »»»»

# சைடமுக்கு எதிராக வாகனப் பேரணி



■ பா.மலரம்பிகை

மாலபே சைடம் தனியார் மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கு எதிராக நாட்டிலுள்ள 5 மாவட்டங்களிலிருந்து கொழும்பு நோக்கிப் பாரிய வாகனப் பேரணியொன்று நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது. குறித்த பேரணியை அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்ததோடு, நேற்று காலை 10 மணியளவில் குறித்த 5 பிரதேசங்களிலிருந்தும் இந்தப் பேரணி ஆரம்பிக்கப்பட்டது. இதன்படி அநுராதபுரம், இரத்தினபுரி,

11 »»»»

## கொழும்பு பிரபல கல்லூரி மாணவர்களிடையே மோதல்

6 பேர் காயம், 15பேர் கைது

ஆனந்த, நாலந்த மற்றும் டி.எஸ். கல்லூரி மாணவர்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலை அடுத்து 15 மாணவர்கள் கைது

11 »»»»

சைடமுக்கு மாணவர்களை அனுமதிப்பதா?

## உயர்கல்வி அமைச்சருடனான பேச்சை அடுத்தே தீர்மானம்

■ ஆதில் அலி சப்ரி



தொழில்நுட்பம் மற்றும் மருத்துவத்துக்கான தெற்காசிய நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும்

11 »»»»

## மருதமுனை காரியப்பர் வீதிக்கு 13.5 மில்லியன் செலவில் காபட்

(ஜெஸ்மி எம்.மூஸா)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான றிஷாத் பதியுதீனின் விஷேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் மருதமுனை காரியப்பர் வீதியை காபட் வீதியாக மாற்ற 13.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக அமைச்சரின் இணைப்பாளரும் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான சட்டத்தரணி துல்கர் நஹீம் தெரிவித்தார்.

தான் மாகாண சபை உறுப்பினராக இருந்து போது மருதமுனையின் பல வீதிகளுக்கு கொங்றீட் இடப்பட்டதுடன் புதிய வீதிகளும் ஜெய்க்கா திட்டத்தின் ஊடாக போடப்பட்டன. அச்சந்தர்ப்பத்தில் பொதுநூலக வீதி-அல்ஹம்றா வீதி-பாக்கியத்தில் ஸாலிஹாத் வீதி-காரியப்பர் வீதி என்பவற்றை மீளமைக்க நடவடிக்கை எடுத்த போது பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸின் வேண்டுகோளுக்கேற்ப இவை போடப்படவுள்ளதாகக் கூறி மருதமுனை முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுவினர் தடுத்தனர்.

ஐந்து வருடங்கள் கழிந்தும் எவ்வித நடவடிக்கையம் எடுக்கப்படாமல் தடுக்கப்பட்ட வீதிகளில் ஒன்றான காரியப்பர் வீதியே தனது வேண்டுகோளின் பேரில் அமைச்சர் றிஷாத் பதியுதீனின் நிதியால் காபட் இடப்படவுள்ளதாக துல்கர் நஹீம் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மு.காவையும், கூட்டமைப்பையும் சிதைக்க வெளிநாட்டு சதி

## எச்சரிக்கிறார் கிழக்கு முதல்வர்



(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

இந்நாட்டின் சிறுபான்மை மக்களின் பேராதரவு பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளைச் சிதைப்பதற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் திட்டமிட்ட சதிகள் இடம்பெற்று வருவதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால், அரச ஆடு மரபுரிமை வள மேம்பாட்டு நிலையம் மட்டக்களப்பு-தும்பங்கேணியில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கே. துரைராசசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மேலும் உரையாற்றிய முதலமைச்சர், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸையும் சீர்குலைப்பதற்கு இந்நாட்டு சக்திகள் மாத்திரமின்றி வெளிநாட்டு சக்திகளும் ஊடுருவி இருக்கின்றன.இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சிதைப்பதற்கு அல்லது சீண்டிப் பார்ப்பதற்கு சதிகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

தமிழ் பேசும் சிறுபான்மைச் சமூகங்களான தமிழ் முஸ்லிம் மக்களுக்கு இது ஒரு தீர்க்கமான கால கட்டம். இக்கால கட்டத்தில் தமிழ் முஸ்லிம் சமூகம் ஒற்றுமைப்பட்டு மிக உறுதியாக இருந்து குரல் கொடுக்க வேண்டிய தேவை எமக்குள்ளது.தமிழ் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசும் இணைந்து இதைவிடவும் இணக்கமாக இறுக்கமாக செயலாற்ற வேண்டிய தேவை இருக்கின்றது.அப்போதுதான் பிரச்சினைக்கான தீர்வையும் சமாதானத்தையும் அடைந்து கொள்ள முடியும். சம்பந்தனின் காலத்தில் எமக்குரிய தீர்வுகள் எட்டப்பட வேண்டும்.

சிறுபான்மையினர் எதிர்பார்த்திருக்கின்ற கௌரவமான தீர்வை பெற்றுத்தர வேண்டிய பெறுப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இருக்கின்றது. அத்தீர்வு எமக்குக் கிடைக்கும் என எதிர்பார்த்திருக்கின்றோம். நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்பு ஒரு வருடம் மாத்திரம் ஓரளவு அதிகமாக நிதி ஒதுக்கீடு கிழக்கு மாகாணத்திற்கு வந்தது ஆனால் 2017 ஆம் ஆண்டு அது 50 சத வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளன. சிறுபான்மை மக்களும். பெரும்பான்மை மக்களும், அதிகாரப் பரவலாக்கலுக்கும், இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காகவும் தான் வாக்களித்திருந்தார்கள்.

இந்த பொறுப்பை இந்த அரசாங்கம் நிறைவேற்றியுள்ளதா என்ற கேள்வி எமக்கு எழுகின்றது. அரசியல் அதிகாரங்கள் பறிக்கப்படுகின்றனவா என எண்ணத் தோன்றுகின்ற அந்த அளவிற்கு நடவடிக்கைகள் மாறியிருக்கின்றன. இருக்கின்ற 13ஆவது அதிகாரத்தைத் மாகாண சபைக்குத் தருவதற்கு எந்த வித பேச்சுவார்த்தைகளும் தேவையில்லை. இவ்விடயத்தில் இதுவரைகாலமும் மேற்கொண்டு வந்த இழுத்தடிப்புக்கள் போன்று தற்போதும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

கல்விக்கு 95 சதவீதம் அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்றால் ஏன் கல்விக்காக 95 சதவீதம் நிதி ஒதுக்கீடுகளை மாகாணசபைக்கு வழங்க முடியாது எனக் கேட்கின்றோம்.

நாட்டிலே உள்ள 2 பெரும்பான்மை அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்துள்ள இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இரா. சம்பந்தன், ரவூப் ஹக்கீம் ஆகிய 4 தலைவர்களும் இணைந்து ஜனநாயக ரீதியில் தீர்வு காணப்படாவிடின் எப்போது தீர்வு எட்டப்படும்? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

## கரவாகு இலக்கியச் சந்தி வழங்கும் 'சோலைக்கிளி' விருதுகள்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கரவாகு இலக்கியச் சந்தி ஏற்பாடு செய்த 2015இல் வெளிவந்த கவிதை நூற்களில் சிறந்த நூலைத் தெரிவு செய்வதற்கான போட்டியில் முதல் பரிசான 15,000 ரூபாய் பணப்பரிசு, 'சோலைக்கிளி விருது மற்றும் சான்றிதழை மன்னார் அமுதன் எழுதிய 'அன்ன யாவினும்' என்ற கவிதை நூல் தட்டிச்செல்கிறது.

இந்நூற்களில், பாராட்டுப் பரிசும் மற்றும் சான்றிதழும் முறையே சு.தவச்செல்வன் (டார்வினின் பூனைகள்), ஏ.கே.முஜாரத் (சாத்தான் வழிந்தோடும் சொற்கள்), தம்பிலுவில் ஜெகா (விடை தேடி), பாலமுனை முபீத் (உடைந்த கால்கள்), ஓட்டமாவடி றியாஸ் முஹம்மத் (முகவரி இழந்த முச்சந்தி) என்ற 5 கவிஞர்களின் நூல்களுக்கு கிடைத்திருக்கின்றது.

'சோலைக்கிளி' விருது விழாவிற்கு ஆர்வத்துடன் கவிதை நூல்களை அனுப்பிய ஏனைய அனைத்து கவிஞர்களுக்கும் கரவாகுச் சந்தி, சிறப்புச் சான்றிதழ்களை வழங்கவுள்ளது.

விழா 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.15 இற்கு மாளிகைக்காடு சபீனா முஸ்லிம் வித்தியாலயத்தில் நடைபெறும்.



ஸ்ரீ லங்கா தவ்ஹீத் ஜமாஅத் கல்முனை கிளையின் சமுதாயப் பணிகளுக்கு உதவும் முகமாக பள்ளிவாசல் கட்டுமான பணிக்காக சாய்ந்தமருது தொழிலதிபர் எம்.பஸ்மிர் ஒரு தொகைப் பணத்தினை நேற்று கல்முனை கிளை நிர்வாகிகளிடம் கையளிப்பதனையும் தலைவர் எஸ்.எச்.எம்.நிஸார் உட்பட அங்கத்தவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள் - எஸ்.அஷ்ரப்கான்)

## முஸ்லிம் சிவில் அமைப்புகளின் வருடாந்த பொதுக்கூட்டம்



கிழக்கு மாகாண முஸ்லிம் சிவில் அமைப்புகளின் சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும், நிர்வாகத்தெரிவும் அண்மையில் காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளன காரியாலயத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண முஸ்லிம் சிவில் அமைப்புகளின் சம்மேளனத்தின் உப தலைவர் எம்.எல்.அப்துல் லத்தீப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சம்மேளனத்தின் கடந்த ஆண்டின் செயற்பாட்டறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன்,எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது.

மேலும் நடப்பு ஆண்டிற்கான நிர்வாகிகள் தெரிவும் இதில் இடம்பெற்றது. தலைவர்-வைத்திய கலாநிதி வை. எல்.எம்.யூசுப்,செயலாளர், பொறியியலாளர் எம்.எம்.எம்.நளீம், பொருளாளர் எம்.ஏ.ஜி.எம்.சபீர், இணைப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எல்.எம்.சபீல் ஆகியோர்கள் உட்பட கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களை சேர்ந்த 35 நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

## கலபிட்டி அல்ஹிதாயா வித்தியாலய அவல நிலை தொடர்வது ஏன்?

(எம்.எல். இப்றாஹிம், ஹபுகஸ்தலாவை)

கொத்மலை கல்வி வலயத்தின் கீழ் கலபிட்டி அல் ஹிதாயா முஸ்லிம் வித்தியாலயம் அமைந்துள்ளது. இப்பாடசாலை 1964ஆம் ஆண்டு அமைக்கப்பட்டுள்ளது. இன்று இப்பாடசாலை 53 வருடங்களை எட்டிய நிலையிலும் எத்தகைய அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படாத நிலையில் அன்றுமுதல் இன்றுவரை ஒரே ஒரு கட்டிடத்திலே இயங்கி வருகின்றது.

மேற்படி பாடசாலையில் ஆண்டு ஒன்று முதல் ஆண்டு எட்டு வரையிலான வகுப்புகள் நடைபெறுகின்றன. இருப்பினும் இப்பாடசாலை எதிர்நோக்கும் வளப்பற்றாக்குறை முக்கியமான பாடங்களை கற்பிப்பதற்கு அவசியம் தேவைப்படும் ஆசிரியர்கள் பற்றாக்குறை என்பன இப்பாடசாலையில் கல்வி கற்கும் குறிப்பாக ஏழை, பறமைக்கு அடிமைப்பட்டுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளை மிகவும் பின்னடைய செய்துள்ளமை மனவேதனைக்குரிய விடயமாகும்.

கலபிட்டி அல் ஹிதாயா முஸ்லிம் வித்தியாலயத்தில் பாடசாலைக் கட்டிடம், தளபாடம், மற்றும் ஆங்கிலம், விஞ்ஞானம் பாடங்களுக்கும் ஆரம்ப கல்வியை கற்பிப்பதற்கும் விளையாட்டுப் பயிற்சி வழங்குவதற்கும் தகுதிவாய்ந்த ஆசிரியர்களின் பற்றாக்குறை நீண்டகாலமாக நிலவி வருகின்றது. இவ்விடயம் தொடர்பாக மத்திய மாகாண கல்வி திணைக்களத்துக்கு பாடசாலை அதிபர், பாடசாலையின் அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், சம்பந்தப்பட்ட அமைச்சர், கல்வி அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்தும் எத்தகைய நடவடிக்கைகளும் இன்றுவரை மேற்கொள்ளப்படாமையால் மாணவர்களது பெற்றோர் அதிருப்தி அடைந்துள்ளனர்.

அத்துடன் கலபிட்டி அல் ஹிதாயா முஸ்லிம் வித்தியாலயத்தில் க.பொ.த. சாதாரண தர வகுப்புக்கள் வரை நடாத்த கொத்மலை கல்விக் காரியாலயம் அனுமதி வழங்க முன்வந்த போதும் மிக முக்கியமாக ஆசிரியர் பற்றாக்குறை இதற்கு தடையாகவுள்ளது. இதனால் இப்பாடசாலையின் மீது நம்பிக்கை இழந்த மாணவர்கள் தமது ஏழ்மை, வறுமையையும் பொருட்படுத்தாது கலப்பிட்டி கிராமத்திலிருந்து ஏழு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பூண்டுலோயா தமிழ் வித்தியாலயத்திற்கும் 14 கிலோமீட்டர் தூரத்திலுள்ள ஹபுகஸ்தலாவை அல்மின்ஹாஜ. தேசிய பாடசாலைக்கும் செல்ல வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், இப்பாடசாலை எதிர்நோக்கும் அத்தியாவசியத் தேவைகள் குறைபாடுகளை இதுவரைகாலமும் மத்திய மாகாண கல்வி அமைச்சர், மத்திய மாகாண கல்வித் திணைக்களம், இம்மாகாண முஸ்லிம் பாடசாலைகளுக்கு பொறுப்பான கல்வி அதிகாரிகள் இன்றுவரை எத்தகைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்படாமலும் ஒரு புரியாத புதிராகவே உள்ளதாக மாணவர்களது பெற்றோர் கூறுகின்றனர்.

எனவே, கலபிட்டி கிராமத்தில் வாழும் ஏழ்மை நிலையில் வாழும் பெற்றோர் தமது பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி அவர்களது கல்வி மேம்பாட்டுக்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டு உதவுமாறு மாணவர்களும் பெற்றோரும் மத்திய மாகாண கல்வியமைச்சின் அதிகாரிகளை ஊடகங்கள் ஊடாக விடுத்துள்ள இச்செய்தியில் கேட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பல்கலைக்குத் தெரிவாகிய மாணவர்களுக்கு கௌரவம்





( ஏ.எல்.ஏ.றபீக் பிர்தௌஸ் )

நிந்தவூர்ப் பிரதேசத்தில் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகியுள்ள 48 மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று நிந்தவூரிலுள்ள அம்பாறை மாவட்ட தொழில் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

பெஸ்ட் ஒப் யங் சமூக சேவை அமைப்பின் தலைவரும், ஊடகவியலாளருமான ஏ.புஹாது தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.அப்துல் ஜலீல், ஹைறு குறூப் ஒப் கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளர் பொறியியலாளர் இஸட். எம்.ஹைறு ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும் இந்நிகழ்வில் ஹபீப் வங்கி முகாமையாளர் ஏ.எல்.அன்வர்டீன், இலங்கைப் போக்கு வரத்துச் சபையின் கிழக்குப் பிராந்திய முகாமையாளர் எம்.ஐ.எம்.சித்தீக், முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல். எம்.அமீன், ஓய்வு பெற்ற அதிபர் எஸ்.அஹமது உள்ளிட்ட கல்விமான்கள் பலரும், பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர்களும், அவர்களது பெற்றோர்களும் இதில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட 48 மாணவர்களும், அதிதிகளால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதே வேளை முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.அமீன், இலங்கைப் போக்கு வரத்துச் சபையின் கிழக்குப் பிராந்திய முகாமையாளர் எம்.ஐ.எம்.சித்தீக், ஓய்வு பெற்ற அதிபர் எஸ்.அஹமது ஆகியோர் கல்விக்கு ஆற்றிய அளப்பரிய சேவைகளைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## றோயல் ஜூனியருக்கு தளபாடம் அன்பளிப்பு

(அட்டாளைச்சேனை றியாஸ் ஆதம்)

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ். சுபையிரின் 2016ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவு நிதியொதுக்கீட்டிலிருந்து இறக்காமம் றோயல் ஜூனியர் கல்லூரிக்கு ஒரு தொகுதி தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இத்தளபாடங்களை கையளிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் றிபா நசீர் தலைமையில் நேற்றுமுன்தினம் றாயல் ஜூனியர் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ். சுபையிர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு தளபாடங்களை பாடசாலை அதிபரிடம் கையளித்தார். இதன்போது இறக்காம பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவரும், பொறியியலாளருமான எஸ்.ஐ மன்சூர்,



இறக்காமம் கோட்டக்கல்வி அதிகாரி , ஆசிரியர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசியல் செய்துவரும் மாகாண சபை உறுப்பினர் சுபையிர் அரசியலுக்கப்பால் மாவட்டத்தினையும் தாண்டி கல்விக்காக ஆற்றிவரும் சேவைகளைப் பாராட்டி பாடசாலை சமூகத்தினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.



## வீதி மின் விளக்குகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

நாட்டில் ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடியை கருத்தில் கொண்டு வீதி மின் விளக்குளை ஒளிரச் செய்வதை கட்டுப்படுத்தவுள்ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்தது.

மாலை வேளைகளில் ஒரு மணித்தியாலமும் அதிகாலை வேளையில் ஒரு மணித்தியாலமும் வீதி விளக்குகளை அணைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உள்ள+ராட்சிமன்ற செயலாளர்களிடம் கேட்டுக்கொண்டதாகவும் அவ்வமைச்சு தெரிவித்தது.

எதிர்வரும் 21 ஆம் திகதி அனைத்து உள்ள+ராட்சிமன்ற செயலாளர்களுக்கும் இதுப்பற்றி தெளிவுப்படுத்தும் நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

இதேவேளை, இலங்கையில் 10 இலட்சம் வீதி மின்விளக்குகள் உள்ள தோடு. பிரதெச சபை மற்றும் நகரசபை செயலாளர்களின் ஊடாக அநாவசிய வீதி விளக்குகளை ஒளிரவிடாது தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பான சூழல் உள்ளதால் இலங்கை மக்கள் நாடு திரும்பலாம்

### அவுஸ்திரேலியாவில் பிரதமர் ரணில்

இந்து சமுத்திரத்தின் பொருளாதார மற்றும் நிதி கேந்திர நிலையமாக இலங்கையை மேம்படுத்துவதற்காக முன்னெடுக்கும் புதிய மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க தயார் என அவுஸ்திரேலிய பிரதமர் மல்கம் டேர்ன்புல் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அவுஸ்திரேலிய பிரதமருக்கும் இடம்பெற்ற நீண்ட கலந்துரையாடலில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடல் அவுஸ்திரேலிய கென்பரா நகரிலுள்ள பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்றைய தினம் நடைபெற்றது. பிரதமரை வரவேற்கும் முகமாக மரியாதை செலுத்தும் வகையில் அவுஸ்திரேலிய அரசினால் அணிவகுப்பு மரியாதை உட்பட 19 பீரங்கிகளும் முழங்க செய்தன.

இலங்கைக்குத் தேவையான எந்த சந்தர்ப்பத்திலும் முன்னிற்க அவுஸ்திரேலியா தயார் என்று குறிப்பிட்ட அவர் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார, அரசியல், சமூக உறவுகளை மேலும் வலுப்படுத்தவும், புதிய ஆரம்பத்தை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதன் போது கருத்து தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,

இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் 100 வருடங்களுக்கு மேலாக நட்புறவு உள்ளது. இலங்கை கடினமாக சூழ்நிலைகளில் இருந்தபோதும் பக்கபலமாக இருந்த அவுஸ்திரேலியாவுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயம், வலுசக்தி, அகழ்வு, சுற்றுலா போன்ற துறைகளில் முதலீட்டு வாய்ப்புக்களை விஸ்தரிப்பது பற்றியும் இதன் போது கவனம் செலுத்தப்படும். துரித அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது அவஸ்திரேலியாவிடமிருந்து வலுசக்தி ரீதியான ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இலங்கையின் சட்டங்களை மீறி அவுஸ்திரேலியாவுக்கு வந்தவர்களுக்கு எதிராகவும் அவர்கள் நாடு திரும்பும் போது சட்டநடவடிக்கைகள் எடுக்கப் படமாட்டாது. அவுஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்துகோரமுடியாத நிலையில் ஐக்கிய அமெரிக்காவில் தங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டவர்களும் நாடு



திரும்பலாம்.

இலங்கையில் இன்று வாழ்வதற்குரிய பாதுகாப்பான சூழல் உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன்போது, பிரதமர் ரணில் அவுஸ்திரேலிய பிரதமர் டர்ன்புல் இலங்கைக்கு விஜயத்தை மேற்கொள்ளும்படி அழைப்பு விடுத்தார்.

## தேங்காய் விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த நடவடிக்கை

தேங்காய் விலை அதிகரிப்பை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்று பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான கஜந்த கருணாதிலக தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய சூழ்நிலையில் தேங்காயின் விலை மேலும் அதிகரிக்கலாம். அதனால் தேங்காய் எண்ணெய் உற்பத்திக்காக தேங்காய்களின் கேள்வியினை குறைப்பதன் மூலம் தேசிய சந்தையில் தேங்காய் விலை அதிகரிப்பினை குறைக்கலாம் .

தேங்காய் பயிர்ச்செய்கையாளர்களுக்கும், தேங்காய் பயிர்ச்செய்கையுடன் இணைந்த உற்பத்தியாளர்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் தேசிய தேங்



காய் விலையினை நிலையான மட்டத்தில் முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் குறுகிய கால உபாய வழிகளை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நான்கு மாதங்களுக்கு தேவையான கனிய எண்ணெய் 40,000 மெட்ரிக் தொன்னினை மாத்திரம் இறக்குமதி செய்யுவகையில் விசேட பண்டங்களின் வரியினை திருத்தம் செய்வதற்காக பெருந்தோட்டத்துறை அமைச்சர் நவீன் திசாநாயக்க சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# வரட்சியால் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் பாதிப்பு

வரட்சி காலநிலையால் 15 மாவட்டங்களில் 1 இலட்சத்து 77 ஆயிரத்து 789 குடும்பங்களில் 7 இலட்சத்து 9 ஆயிரத்து 422 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

அனைத்து மக்களும் குடிநீர் பிரச்சினைக்கு பாரியளவில் முகம் கொடுத்துள்ளதாகவும், பௌசர்கள் மூலம் பங்கிடப்படும் நீர் பற்றாக்குறையாவே உள்ளதாகவும் அறியக்கிடைத்துள்ளது.

இதற்கு மேலாக பல பிரதேசங்களில் நீர் பகிர்ந்தளிக்கப்படுவதில்லை என்றும், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், அதிகளவில் பாதிக்கப்பட்ட பிரதேசமாக களுத்துறை மாவட்டம் இனங்காணப்பட்டுள்ளது. குறித்த மாவட்டத்தில் 43 ஆயிரத்து 141 குடும்பங்களில் ஒரு இலட்சத்து 97 ஆயிரத்து 332 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு அடுத்ததாக திருகோணமலை மாவட்டத்தில் 22 ஆயிரத்து 778 குடும்பங்களில் 94 ஆயிரத்து 033 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வரட்சி காலநிலையால் பாதிக்கப்பட்டோர் நீர் பற்றாக்குறையாக இருந்தால் 117 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அறியப்படுத்தலாம்.

## றுஹுனு பல்கலை 20 இல் திறப்பு

தற்காலிகமாக மூடப்பட்டிருந்த றுஹுனு பல்கலைக்கழகத்தின் வெல்லமடம வளாகத்திலுள்ள 3 பீடங்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பீடங்களின் மாணவர்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி தமது விடுதிகளுக்கு சமூகமளிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி தொழில்நுட்ப பீடம், விஞ்ஞான பீடம், கடற்றொழில் கடலியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய மூன்று பீடங்களின் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 20ம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும்.

ஊர்வாசிகள் மற்றும் மாணவர்களிடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக கடந்த 4 ஆம் திகதி முதல் றுஹுனு பல்கலைக்கழகத்தின் வெல்லமடம வளாகத்தின் பீடங்கள் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 20 ஆம் திகதி வரை ஓரளவு மழை

(பா.மலரம்பிகை)

நாட்டில் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை ஓரளவு மழைபெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாக வானிலை அதிகாரி மொஹமட் சாலிஹீன் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு, வட மத்திய, ஊவா மற்றும் வட மேற்கு மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் இடைக்கிடையே மழை பெய்யும். நாட்டில் மணித்தியாலத்திற்கு 40 தொடக்கம் 50 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசவுள்ளதோடு, கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் மணிக்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் கடும் காற்று வீசுவால் கடல் சற்று கொந்தளிப்பாகவே இருக்கும். நாட்டின் பல பகுதிகளில் பிற்பகல் 2.00 மணிக்கு பின்னர் இடியுடன் கூடிய மழை காணப்படுவதால் பொது மக்கள் அவதானம் தேவை.



கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமட் தலைமையிலான குழுவினருக்கும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜேம்ஸ் டொரிஸ் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது. திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் நேற்று இச்சந்திப்பு நடைபெற்றது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சருடன் கிழக்கு மாகாண அமைச்சர்களான ஆரியவதி கலப்பதி, ஏ.எல்.எம்.நசீர், கிழக்கு மாகாண அவைத்தலைவர் சந்திரதாச கலப்பதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## 23 இலிருந்து கரையோர ரயில் பாதை ஒருபகுதி மூடல்

கடற்கரையோர புகையிரத வீதியான தெஹிவளை மற்றும் வெள்ளவத்தை பிரதேசத்தில் புகையிரத போக்குவரத்து எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை கட்டுப்படுத்தப்படவுள்ளதாக புகையிரத திணைக்களம் தெரிவித்தது.

குறித்த பிரதேசங்களில் புகையிரத பாலமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளதால் இத்தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. அந்தவகையில் எதிர்வரும் 23 ஆம் திகதி இரவு 10 மணியிலிருந்து 27 ஆம் திகதி மாலை 4 மணிவரையான காலப்பகுதியில் குறித்த புகையிரத வீதி மூடப்படவுள்ளது.

இந்த காலத்திற்குள் மாத்தறை, காலி மற்றும் அளுத்கமையிலிருந்து கொழும்பு நோக்கி வரும் புகையிரதம் தெஹிவளை புகையிரத நிலையத்திலும், கொழும்பிலிருந்து மாத்தறை, காலி மற்றும் அளுத்கமை செல்லும் புகையிரதம் வெள்ளவத்தை புகையிரத நிலையம் வரையிலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

# வரட்சியால் நீர்மின் உற்பத்தி நிறுத்தம்

வரட்சியான காலநிலையால் நீர்த்தேக்கங்களில் நீட்டம் குறைந்துள்ளமையால் நீர்மின் உற்பத்தியை இடைநிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் தெரிவித்தது.

தற்போது நீரினை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் நீர்மின் உற்பத்தி நீர்த்தேக்கங்களின் மூலமே பெற்றுக்கொள்ளப்படுகின்றன. எனினும், இதனை இடைநிறுத்துவதனால் குடிநீர் மற்றும் விவசாயத்துக்கு அவசியப்படும் என்றும் அச்சங்கம் குறிப்பிட்டது.

மொத்த மின்சார தேவையில் 18.6 வீதம் தனியார்பிரிவிடம் வாங்கவுள்ளதாகவும், வேறு வழிகளில் கிடைக்கும் நீர் மூலம் 11 வீத மின்சாரமும், நுரைச்சோலை அனல் மின்நிலையத்திலிருந்து 50 வீத மின்சாரமும் மற்றும் டீசல் நிலையங்களிலிருந்தும் மினசாரம் பெற்றுகொள்ளவுள்ளதாகவும் குறிப்பிட்டது. இதேவேளை, காசல்ரீ, மவுசாகல, கொத்மலை, விக்டோரியா, ரன்தெனிகல ஆகிய நீர்த்தேக்கங்களிலிருந்து விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் நீரானது நீர்மின் உற்பத்திக்கு பயன்படுத்தவுள்ளமையும் சுட்டிக்காட்டப்பட்டது.




NAVAMANI DAILY
நவமணி
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
16TH FEBRUARY 2017 - THURSDAY

# பலஸ்தீனுக்கு ஆதரவான நிலைப்பாடே இலங்கைக்கு நாம் வழங்கும் விசுவாசம்

இலங்கை கட்டடக் கலை நிபுணர் நிறுவனத்தின் வருடாந்த மாநாட்டின் பிரதம அதிதியாக, இஸ்ரேலிய சட்டவிரோத குடியேற்ற சூத்திரதாரியான மோசே சப்டி இலங்கைக்கு அழைக்கப்பட்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இஸ்ரேலிய சட்டவிரோத நடவடிக்கைகளில் பங்கெடுக்கும் ஒருவரை, பலஸ்தீன் நட்பு நாடான இலங்கைக்கு எவ்வாறு அழைப்பு விடுக்க முடியும் என்பதுவே இந்த சர்ச்சைக்கான காரணமாகும்.

இந்த இஸ்ரேலியரை இலங்கைக்கு அழைக்க வேண்டாம் என்று அரசியல்வாதிகளும், இலங்கை – பலஸ்தீன் நட்புறவுச் சங்கமும் கோரியிருந்தது. இஸ்ரேலின் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக உலகளவில் புத்திஜீவிகளாலும், செயற்பாட்டாளர்களாலும் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், இலங்கை தொழில்வாண்மையாளர்கள் இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபடுவது நல்லதல்ல என்று பலரும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இலங்கை வரலாறு நெடுகிலும், பலஸ்தீன் ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்ற ஒரு நாடாகும். எனவே, இலங்கையின் பலஸ்தீன ஆதரவு நிலைப்பாட்டை, இலங்கையில் உள்ள அனைவரும் புரிந்துகொள்ள வேண்டியுள்ளனர்.

இன்று முழு மொத்த மத்திய கிழக்கினதும் பாதுகாப்பு அச்சுறுத்தலாக, மத்திய கிழக்கு நடுவே உள்ள இஸ்ரேல், சட்டவிரோதமாக உருவாக்கப்பட்ட ஒரு நாடாகும். உலகம் முழுவதிலுமுள்ள யூதர்களை ஒன்றிணைத்து, யூதர்களுக்கான ஒரு நாட்டை உருவாக்குவதற்கான திட்டங்களை சியோனிய அமைப்பு தீட்டியது. இந்தத் திட்டத்துக்கு பிரித்தானியா ஆதரவு வழங்கியது.

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில், பிரித்தானியா பலஸ்தீனை ஆக்கிரமித்திருந்ததனால், மிகவும் இலகுவாக, யூதர்களை அங்கு குடியேற்றுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. இதன்படி, ஐரோப்பிய நாடுகளிலிருந்த யூதர்கள் பலஸ்தீனுக்கு அழைத்து வரப்பட்டு, குடியேற்றப்பட்டனர்.

பின்னர், 1948 ஆம் ஆண்டு, பலஸ்தீன மண்ணில், சட்டவிரோதமாக யூதர்களுக்கான நாடாக இஸ்ரேல் உருவெடுத்தது. அன்று முதல், பலஸ்தீன மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் சொல்லொணாத் துயர் கொண்டவை. தமது சொந்த மண்ணிலேயே, பலஸ்தீனர்கள் பெரும் அவலங்களைச் சந்தித்து வருகின்றனர்.

இஸ்ரேல் பலஸ்தீனில் நடத்தும் மனித உரிமை மீறல்களும், அத்துமீறல்களும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் கண்டனங்களுக்கு உட்பட்டுள்ளன. ஐ.நா. சபையே, இஸ்ரேலின் அராஜகங்களுக்கு எதிராக பல பிரேரணைகளைக் கொண்டு வந்துள்ளது. ஆனால், அவற்றை இஸ்ரேல் ஒருபோதும் மதித்ததாக இல்லை.

எனவே, இவ்வாறான சட்டவிரோத நாடான இஸ்ரேலுக்கு எதிரானதும், பலஸ்தீன மக்களின் போராட்டத்துக்கு ஆதரவுமான நிலைப்பாட்டையே இலங்கை அரசு ஆரம்பம் முதல் பின்பற்றி வருகின்றது. இவ்வாறான நிலையில், இலஙகையில் உள்ள அமைப்புக்களும், நிறுவனங்களும்கூட இலங்கை அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை மதிக்க வேண்டியுள்ளன.

இஸ்ரேலின் மனித குலத்துக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு எதிராக உலகளவில் பெரும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இஸ்ரேல் பலஸ்தீனின் காஸா பகுதி மீது தாக்குதல் மேற்கொண்ட போதெல்லாம், ஐரோப்பிய தலைநகரங்களிலும், லத்தின் அமெரிக்க தலைநகரங்களிலும், இஸ்ரேலுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் பல நடைபெற்றன. ஒவ்வொன்றிலும் மில்லியன் கணக்கான மக்கள் பங்கேற்றனர்.

சட்டவிரோத நாடான இஸ்ரேலை அனைத்து தளங்களிலும் புறக்கணித்து, தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்குலகிலுள்ள நீதிக்கு ஆதரவான செயற்பாட்டாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

அறிவு, பொருளாதாரம், அரசியல் என்று எல்லாத் தளங்களிலும் இஸ்ரேலை தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் உலகளவில் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில், பாரம்பரியமாகவே பலஸ்தீன் நட்பு நாடான இலங்கையும், இலங்கையிலுள்ள அமைப்புக்களும், நிறுவனங்களும், பலஸ்தீனுக்கு எதிரான நிலைப்பாட்டுடன் செயற்பட முனைவது, நம் நாட்டின் கொள்கைகளுக்கு எதிராகவே நாமே செயற்பட்டதாகி விடும். இலங்கையின் பலஸ்தீன ஆதரவு நிலைப்பாட்டுக்கு இலங்கையர் அனைவரும் தலைசாய்க்க வேண்டும். அதுவே, நாட்டின் கொள்கைகளுக்கு விசுவாசமாக இருத்தலாகும்.

# அரிசி விலையும் வர்த்தக மாபியாவும்

சாலிய குமார குணசேகர



இந்நாட்களில் சந்தையில் அரிசிக்கு பெரும் தட்டுப்பாடு உருவாகியுள்ளது. இதனால் பாவனையாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருக்கிறார்கள். இந்த பிரச்சினை தொடர்பாக அரசின் தெளிவான பதிலொன்று இல்லாமையினால் பாவனையாளர்கள் சட்டியில் இருந்து அடுப்புக்குள் வீழ்ந்த நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.

கடந்த காலங்களிலும் நாட்டில் அடிக்கடி அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டது. தொடராக மழை கிடைக்காமை காரணமாக வேளாண்மை கன்றுகள் அழிந்ததனால் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டிருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றார்கள். இது எவராலும் தவிர்க்க முடியாத ஒரு நெருக்கடிக்கு தள்ளியுள்ளது. இந்த நிலைக்கு மத்தியில் ஒரு கிலோ அரிசியின் விலை 100 ரூபாவையும் தாண்டியுள்ளது. அரிசி விலை படிப்படியாக அதிகரிப்பது தொடர்பாக அரசியல்வாதிகள் அடிக்கடி பல்வேறு தீர்மானங்களை எடுத்தாலும் பாரிய மட்ட அரிசி ஆலை உரிமையாளர்களது பல்வேறு தாக்கங்களால் இந்த திட்டங்கள் சீர்குலைந்தன. ஒரு கிலோ நெல்லின் விற்பனை விலை 40 ரூபாவை தாண்டியதும், சந்தையில் அரிசியின் விலை 100 ரூபாவை தாண்டியது. இந்த நிலையின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட நாட்டு அரிசி ஒரு கிலோவை 76 ரூபாவிற்கு மேலாக விற்க முடியாது என அரசாங்கம் கடந்த ஜனவரி 26ஆம் திகதியிலிருந்து தெரிவித்து வருகிறது. அரிசியை வெளிநாடுகளிலிருந்து மொத்தமாக இறக்குமதி செய்தாலும் குறைந்த விலைக்கு விற்பதற்கு வர்த்தகர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை.

நிலைமை வரவர மோசமானதன் காரணமாக அரசாங்கம் இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக்காக விசேட வர்த்தக பொருள் வரியினை கடந்த 27ஆம் திகதி நள்ளிரவிலிருந்து 15 ரூபாவிலிருந்து 5 ரூபாவாக குறைக்க தீர்மானித்தது. சந்தையில் அரிசியின் விலையை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவருவதற்கு அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் அதுவும் பலனளிக்காமல் போனது. இதன் காரணமாக பாவனையாளர் அதிகாரசபையினால் அரிசிக்கான உச்ச விலை ஒன்றை கடந்த 8ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் விதித்தது. அதன்படி சம்பா அரிசி (கீரி சம்பா, சூதுரு சம்பா) ஒரு கிலோ 80 ரூபாவாகவும், நாட்டரிசி 72 ரூபாவாகவும், சிவப்பு அரிசி 70 ரூபாவாகவும், விற்பனை செய்ய வேண்டும் என தீர்மானித்தன.

பாவனையாளர் அதிகாரசபை இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டது முதல் நாடெங்கிலும் இருக்கின்ற கூடுதலான விலைக்கு அரிசி விற்கும் கடைகளை தேடிக் கண்டுபிடிக்க சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டார்கள். அதன்படி கூடுதலான விலைக்கு அரிசியை விற்ற சுப்பர் மார்க்கட் உட்பட சில்லறை கடைகள் சிலவற்றுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த வர்த்தமானி அறிவித்தலின் பின் சுப்பர் மார்க்கட்களும், சாதாரண கடைகளும் கூட அரிசி விற்பனையை மட்டுப்படுத்தின. சில விற்பனை நிலையங்களில் அரிசி விற்பனை செய்யப்படவில்லை. கூடுதலான விலைக்கு அரிசியை வாங்கி குறைந்த விலைக்கு எவ்வாறு விற்பதென்று வியாபாரிகள் கேள்வி எழுப்பினர். சில சுப்பர்மார்க்கட்டுகளில் உச்ச விலையின் கீழ் பாவனையாளர்களுக்கு 4 அல்லது 5 கிலோ அரிசியே விற்கப்படுகிறது.

அரிசிக்கு உச்ச விலை நிர்ணயிக்கப்பட்ட பிறகு பாவனையாளர்கள் நீண்ட வரிசைகளில் இருந்து லங்கா சதொசவுக்குச் சென்று அரிசியை கொள்வனவு செய்ய முற்பட்டனர். ஆனால் அங்கு விற்கப்படும் அரிசியின் தரம் பற்றி பாவனையாளர்கள் குற்றச்சாட்டுக்களை எழுப்பினர்.

நாட்டுக்குள் அரிசி விலை அதிகரித்ததை அடுத்து 2 இலட்சத்து 50,000/= மெற்றிக் தொன் அரிசியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கு அரசு தீர்மானித்தது. புறக்கோட்டை வர்த்தகர்கள் அரசு வெளிநாடுகளிலிருந்து அரிசியை தருவிக்க முன் வரி குறைத்ததன் காரணமாக அரிசி விலை அதிகரித்ததாகவும், இப்போதாகும்போது அரிசியின் மொத்த விலை குறைந்திருப்பதாகவும் தெரிவிக்கின்றனர். அத்தியாவசிய உணவு பொருட்களை இறக்குமதி செய்கின்ற வர்த்தக சங்கத்தின் செயலாளர் ஜி.எஸ்.நாதன் தெரிவிக்கின்ற தகவலின்படி ஒரு கிலோ பொன்னி சம்பா 73 ரூபாவிலிருந்து 74 ரூபா வரையும், சிவப்பரிசியும், நாட்டரிசியும் ஒரு கிலோ 65 ரூபாவிலிருந்து 67 ரூபா வரையும் மொத்த விலைக்கு விற்கப்படுவதாக தெரிவித்துள்ளார். வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசி போதியளவு சந்தையில் இருப்பதாகவும் அவர் கூறுகிறார்.

அரசாங்கம் அடிக்கடி அரிசிப் பிரச்சினைக்கு தீர்வொன்றை வழங்க நடவடிக்கை எடுத்தாலும், அகப்பையை கையில் வைத்துக்கொண்டிருக்கும் பிரதான அரிசியாளர்களுடைய காலில் அதிகாரிகளும், பாவனையாளர்களும் மண்டியிட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. கூடுதலான விலைக்கு அரிசி விற்பனை செய்வோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். இறக்குமதி செய்யும் அரிசிக்கான வரி குறைக்கப்பட்டிருந்தும், அரிசியை குறைந்த விலைக்கு விற்கக்கூடியதாக இருந்தாலும் நாட்டில் அரிசி பற்றாக்குறை வேண்டுமென்றே உருவாக்கப்பட்டிருப்பதாக நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் விவசாயிகளும், வீதிக்கு இறங்கியிருப்பது வரட்சி காரணமாக தம் வயல் நிலங்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கு, ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபா நஷ்ட ஈடு தருமாறு கோரிக்கை விடுத்தாகும். அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட இந்த எதிர்ப்பு காரணமாக அரசுக்கு விவசாயிகள் தரப்பிலும் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இதேநேரம் அகில இலங்கை அரிசி ஆலை உரிமையாளர்களும் பலத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். பொலன்னறுவையில் கடந்த சனியன்று கூடிய நாட்டின் சிறு, மத்தியமட்ட மற்றும் பாரிய மட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் தமது அரிசி ஆலைகளிலிருந்து அரிசி உற்பத்தியை நிறுத்துவதற்கு தீர்மானித்திருக்கிறார்கள். கூடுதலான விலைக்கு நெல்லை விலை கொடுத்து வாங்கி அரசின் உச்ச சில்லறை விலைக்கு ஒருவகையிலும் விற்க முடியாது என்றும், அதன்மூலம் தமக்கு ஒரு கிலோ அரிசிக்கு 25 ரூபா நஷ்டம் ஏற்படுவதாகவும் மரதகஹமுல அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் கே.டி ரஞ்சித் தெரிவித்தார். இந்த நாட்டின் அரிசி விலையை தீர்மானிக்கும் ஒரு இடம் மரதகஹமுல சந்தையாகும். கடந்த 13ஆம் திகதி நண்பகல் வரை ஒரு அரிசி மொத்த விற்பனையாளர் கூட அரிசி கொள்வனவு செய்வதற்கு மரதகஹமுலவுக்கு வந்திருக்கவில்லை. அதன் பாரதூரமான விலை என்னவென்றால் சந்தையிலே கட்டாயமாக அரிசி தட்டுப்பாடு ஏற்படுவது என்பதாகும். இது உண்மையான நிலை அன்றி ஒரு மாபியா என விவசாய அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். நாட்டில் அடுத்த சில மாதங்களுக்கு தேவையான அரிசி மொத்தமாக இருக்கின்ற போதும் நாட்டில் அரிசிப் பற்றாக்குறை உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கு அரசியல்வாதிகளும், ஆதரவாக செயற்படுகிறார்கள்.

மரதகஹமுல அரிசி வர்த்தகர்கள் சங்கம் தெரிவிக்கின்ற கருத்துப்படி ஒரு கிலோ நெல் (நாடு) அரசாங்க நெற் பண்டகசாலைகளில் 44 ரூபாவிற்கு விற்கப்படுகிறது. சகல செலவுகளின் பின் ஒரு கிலோ அரிசியை உச்ச விலைக்கு விற்க முடியாது. தம்மிடமிருந்து துட்டு விலைக்கு அரிசியை கொள்வனவு செய்யும் அரிசி ஆலை உரிமையாளர்கள் அநியாயமாக அரிசி விலையை கூட்டியிருக்கிறார்கள் என்று விவசாயிகள் தெரிவிக்கின்றார்கள். இந்நாட்களில் நாட்டில் அரிசிக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லை என விவசாய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். பெரும்போக விளைச்சலுடன் அடுத்த ஜுன், ஜுலை வரை தேவையான அரிசி நாட்டுக்குள் இருப்பதாக பேராசிரியர் புத்தி மாரம்பே கூறுகிறார். பொதுவாக நாட்டின் பாவனைக்கு மாதத்திற்கு தேவைப்படும் அளவு இரண்டு இலட்சம் மெற்றிக் தொன் ஆகும். வருடாந்த அரிசி தேவை மெற்றிக் தொன் 2.9 மில்லியன் ஆகும். கடந்த பெரும்போகத்தின் போது மழை பெய்யாத போதும், ஜனவரி மாதம் ஓரளவு மழை பெய்தது. இதனால் அம்பாறை மாவட்டத்தில் ஓரளவு அரிசி விளைச்சலை பெற்றுக்கொள்ளலாம் என விவசாய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அரிசி பற்றாக்குறை என்பது கூடுதலான விலைக்கு அரிசியை கொள்வனவு செய்கின்ற நிலைமை அல்ல என பேராசிரியர் புத்தி மாரம்பே கூறுகிறார்.

பாரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் கடந்த காலத்தில் தொடர்ச்சியாக செய்தது அரசாங்க நெற் பண்டகசாலைகளில் இருக்கும் நெற் தொகை பல்வேறு வழிகளில் தமக்காக்கிக்கொண்டு அவற்றை கூடிய விலைக்கு சிறிய தர அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு விற்பதாகும். இந்த நிலைமை கடந்த காலத்தில் மிக மோசமாக இருந்தது. நாட்டின் மொத்த நெல்லில் பெருந்தொகையை



தமதாக்கிக்கொள்ளும் சில அரிசி ஆலை உரிமையாளர்கள் ஒன்றிணைந்து அடிக்கடி நாட்டில் அரிசி நெருக்கடியை உருவாக்குகிறார்கள். நாட்டுக்குள் அரிசி விலையை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும்.

விவசாயத்துறை அதிகாரிகளின் கூற்றுப்படி நெல் உற்பத்தியை பாதிக்கின்ற மோசமான வரட்சி 1973 - 74க்கு பிறகு இம்முறையே ஏற்பட்டுள்ளது. அதாவது 40 வருடங்களுக்கு பின்பாகும். 2011ஆம் ஆண்டு வரட்சியுடனான காலநிலை இலங்கையில் இருந்தாலும் நாட்டில் அரிசி பற்றாக்குறை ஏற்படவில்லை. 2010ஆம் ஆண்டுக்கு பிறகு நாட்டில் பாவனைக்கு தேவையான அரிசியினை விட கூடுதலான அரிசி நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது. அவ்வாறாயின் உருவாகியிருப்பது போலி அரிசி நெருக்கடியாகும். பொலன்னறுவையில் கடந்த சனியன்று அரிசி ஆலை உரிமையாளர்கள் நடத்திய பேச்சுவார்த்தையின் பின் செவ்வாயன்று அவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். இப்பேச்சுவார்த்தையின் பின் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கும் உள்நாட்டு அரிசிக்கும் இரு உச்ச விலைகளை நிர்ணயிக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். அத்தோடு ஒரு இலட்சம் மெற்றிக் தொன் அரிசியினை அவசர தேவைகளின் போது பயன்படுத்துவதற்கு களஞ்சியப்படுத்துமாறும் அறிவித்தார். இவ்வாறான ஒரு நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அரிசி ஆலை உரிமையாளர்கள் தமது காசுப் பையை பலப்படுத்துவது எவ்வாறு என்றன்றி நெருக்கடியிலிருந்து மீளுவதற்கு அரசுடன் இணைந்து ஒத்துழைப்பு வழங்கி மக்களுக்கு நிவாரணம் வழங்குவது பற்றி கவனம் எடுப்பது தான் முக்கியமானது.

# ஜேர்மனின் முன்மாதிரியை முஸ்லிம் நாடுகள் பின்பற்றாதிருப்பதேன்

## டி.எஸ். சேனாநாயக்க கல்லூரியில் அமைச்சர் பைசர் முஸ்தபா







ஜேர்மன் நாடு 11 இலட்சம் சிரிய அகதிகளை தமது நாட்டுக்கு பொறுப்பேற்று அரவணைத்து வருகின்றது. ஆனால் நமது முஸ்லிம் நாடுகள் இவ்வாறு செயற்படவில்லை. ஜேர்மனியின் முன்மாதிரியை முஸ்லிம் நாடுகள் பின்பற்ற முன்வர வேண்டும் என மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா கூறினார்.

கொழும்பு டீ. எஸ். சேனாநாயக்க கல்லூரியின் பொன்விழாவை முன்னிட்டு முஸ்லிம் மஜ்லிஸ் ஏற்பாட்டில் கல்லூரியின் தமிழ் பிரிவு பொறுப்பாசிரியர் நஸ்லிமா அமீன், முஸ்லிம் மஜ்லிஸ் பொறுப்பாளர் எம் எஸ் எம் பஹஜானின் வழிகாட்டலில் கல்லூரி கேட்போர் கூடத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரியின் முதல்வர் ஆர். எம். ரத்நாயக்க தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றும் போது கூறியதாவது,

இன்று இந்த கல்லூரி 50 ஆவது ஆண்டுப் பொன்விழாவை கொண்டாடி வருவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன் என்றாலும் 100 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள கல்லூரிகளை விடவும் இக்கல்லூரி 50 வருடங்களிலேயே பிரபல்யம் பெற்று முன்னணியில் திகழ்வது பாராட்டத்தக்கது. இந்த கல்லூரியை பொறுத்த மட்டில் சமய நிகழ்வுகளுக்கு முதன்மை இடம் வழங்கப்பட்டு வருவதை காண்கின்றேன் எந்த மதமாக இருந்தாலும் இங்கு கற்கும் அனைத்து சமய மாணவர்களுக்கும் அவரவரின் சமய நிகழ்வுகளை மேற் கொள்வதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதும் இந்த பாடசாலையின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாகும்.

இந்தப் பாடசாலை மாணவர்கள் ஒழுக்க விழுமியங்களில் அதிகம் பேணுதல் உள்ளவர்களாக உள்ளனர், இதுவும் பெருமை தரக்கூடிய விடயமாகும் பழைய மாணவர்களினால் நிதி சேகரிக்கப்பட்டு பாடசாலை வளாகத்தில் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது அரசின் எந்தவித உதவியும் இல்லாமல் அரசுக்கு சுமை கொடுக்காது பழைய மாணவர்கள் இந்த சுமையை பொறுப்பேற்றுள்ளனர். இந்த விடயம் இந்த கல்லூரியின் வரலாற்றில் பொறிக்கப்படவேண்டிய ஒன்றாகும். நபிகளாருக்கு 40 வயதில் தான் நபிப்பட்டம் கிடைத்தது ஆனாலும் நபிப்பட்டம் கிடைப்பதற்கு முன் இளம் பருவத்தில் இருந்தே நபிகளார் பொய் பேசாமலும் அடுத்தவரை தூற்றாமலும் சமூகத்தில் விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடாமலும் இருந்த காரணத்தினால்தான் அந்த சமூகத்தில் அவர்கள் உயர்ந்த அந்தஸ்த்தை பெற்றார்கள்.

இந்தப்பின்னணியில் நாமும் எமது வாழ்க்கையை அமைத்துக்கொண்டால் நாமும் வாழ்வில் நிம்மதியான சந்தோசமான வாழ்வை வாழ முடியும் என்பது என்னுடைய கருத்தாகும் என அமைச்சர் தெரிவித்தார். மேலும் இன்று சிலர் வீட்டில் இருந்து கொண்டு தான் பயணமாகி விட்டதாக கூறுகின்றனர் இது ஒரு பொய்யாகும், இதே போன்று குறைந்த விலைக்கு பொருட்களை பெற்று அதி கூடிய விலைக்கு விற்கின்றனர் இதுவும் பொய்களில் ஒன்று எனவே நாம் இஸ்லாமியர்கள் என்று மார் தட்டிக்கொள்ளாமல் எமது வாழக்கையில் எடுத்து நடக்க வேண்டும் நபிகளாரின் போதனைகளையும் பின் பற்ற வேண்டும். ஜேர்மன் நாடு சிரியாவிலிருந்து 1.1 மில்லியன் தஞ்சமடைந்தவர்களை தமது நாட்டில் வைத்து பராமரித்து வருகின்றது. ஆனால் நமது முஸ்லிம் நாடுகள் இவ்வாறான ஒரு செயற்பாட்டை செய்யவில்லை. எனவே, நமது முஸ்லிம் நாடுகள் ஜெர்மன் நாட்டின் இம்முன்மாதிரியை சிந்தித்துப் பார்ப்பது சாலச்சிறந்தது என நான் கருதுகின்றேன்.

இக்கல்லூரியின் முன்னாள் அதிபர் அலஸ் அவர்களின் சிறந்த வழிகாட்டல்கள் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பாகும். அவரினால் இக்கல்லூரி பெயரும் புகழும் அடைந்துள்ளது எனலாம். அலஸ் அவர்களின் அந்த முன்மாதிரியை பின் பற்றி இன்றைய அதிபர் ரத்நாயக்கவும் சிறந்த திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார். அவருக்கு உதவியாக இக்கல்லூரியின் பிரதி அதிபர்கள் ஆசிரிய ஆசிரியைகள், மாணவர்கள், பழைய மாணவர்கள் அனைவரும் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவுவது சிறப்பான ஒன்றாகும். குறிப்பாக தமிழ் பிரிவு பொறுப்பாசிரியர் நஸ்லிமா அமீன் சகல மாணவர்களையும் அரவணைத்து சிறந்த வழிகாட்டலுடன் கல்லூரி முன்னேற்றத்திற்கு வழி அமைத்து வருவதையும் என்னால் இத்தருணத்தில் பாராட்டாமல் இருக்க முடியாது என்றார்.

இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக தொழில் அதிபர் முஸ்லிம் சலாஹுஜதீன் கலந்து கொண்டார். பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் றஹ்மான் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர். மாணவர்களது கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அஷ்ஷெய்க் நூர் ஆமித் விசேட உரையாற்றியதுடன் கல்லூரிக்காக விசேட பிரார்த்தனையும் இடம்பெற்றது.



காலி சோலை ஸிந்தா ஷேஹ் மதார் பள்ளிவாசலில் 131ஆம் வருட மனாகிப் தமாம் நிகழ்ச்சியை முன்னிட்டு நடைபெற்ற பயான் சீடி வெளியீட்டு வைபவம் நேற்று முன்தினம் பள்ளிவாசல் பேஷ் இமாம் மௌலவி மிஸ்றுள்ளாஹிர் தலைமையில் நடை பெற்ற போது மௌலவி அல்ஹாஜ் பி .எம்.சாகிர் ஹுஸைன் சீடிக்களை வழங்குவதை படங்களில் காணலாம்.

(காலி சாகிர் ஹுசைன்)

## 888 மில்லியன் ரூபாய் செலவில் ஏறாவூர் நகர் விஸ்தரிப்பு

(ஏறாவூர் நிருபர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)



நகர அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் ஏறாவூர் நகர விஸ்தரிப்புப் பணிகள் 888 மில்லியன் ரூபாய் செலவில் அடுத்த திங்களன்று ஆரம்பிக்கப் படவுள்ளதாக ஸ்ரீ.ல.மு.கா. மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு இணைத் தலைவருமான அலிஸாஹிர் மௌலானா தெரிவித்தார்.

இது தொடர்பாக புதன்கிழமை விவரம் தெரிவித்த அவர், ஏறாவூர் நகர பிரதான நெடுஞ்சாலையை அகலமாக்கும் பணிகளின் முதற்கட்டம் அடுத்த திங்களன்று (20.02.2017) ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த அபிவிருத்தித் திட்டத்திற்கென நகர அபிவிருத்தி அமைச்சர் றவூப் ஹக்கீம் 888 மில்லியன் ரூபாவை தனது அமைச்சிலிருந்து ஒதுக்கித் தந்துள்ளார்.

உடனடியாக வேலைகள் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விபத்துக்களைத் தவிர்க்கும் முகமாக ஏறாவூர் நகர நெடுஞ் சாலை அகலமாக்கும் வேலைத் திட்டத்தில் வர்த்தகர்கள், குடியிருப்பாளர்கள், உள்ளூராட்சி நிருவாகம், அதிகாரிகள் பொதுமக்கள், கடை உரிமையாளர்கள் என எல்லோரும் இணைந்து ஏறாவூரை அழகான அபிவிருத்தி செய்யப்பட்ட நகரமாக மாற்ற ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஏறாவூரில் யுத்த அடையாளங்கள் இன்னமும் இருந்து கொண்டிருக்க நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

இவ்வாறு நகரம் இந்தத் திட்டத்தின் கீழ் விசாலமாக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுவதால் குறைந்தபட்சம் அடுத்த கால் நூற்றாண்டுக்கு (25 வருடங்களுக்காவது) போக்குவரத்து நெருக்கடி காரணமாக விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளும் நகரமாக ஏறாவூரை மாற்ற முடியும்'' என்றார்.





வவுனியா மாவட்ட தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான றிஷாட் பதியுதீன் அந்த மக்களை சந்தித்துக் கலந்துரையாடினார். இதில் கலந்து கொண்ட மக்கள் எடுத்துரைத்த குறைபாடுகளுக்கு வெகு விரைவில் தீர்வைப் பெற்றுத் தருவதாக அமைச்சர் தெரிவித்தார். (படங்கள் - எம்.என்.எம். பர்விஸ்)

# போக்குவரத்து பிரச்சினைகளை நிவர்த்திக்குக தவறும் பட்சத்தில் பாரிய போராட்டம்

## தென்கிழக்கு பஸ் உரிமையாளர்கள் சங்கம்

(எம்.ஏ.றமீஸ், எஸ்.ஜமால்டீன், எம்.எல்.சரிப்டீன்)



முறையற்ற விதத்தில் செயற்படும் பஸ் உரிமையாளர்களை நல்லாட்சி அரசாங்கம் தடுத்து நிறுத்தி மக்களுக்கு சிறந்த சேவையினைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறும் பட்சத்தில் அடுத்த வாரம் பாரிய போராட்டங்களில் ஈடுபட வேண்டி ஏற்படும் என தென்கிழக்கு சமூக நல பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் கோரிக்கை விடுக்கின்றனர்.

மக்கள் பொதுப் போக்குவரத்து சேவை முறையாக இடம்பெற வேண்டும் என்னும் தொனிப் பொருளில் நேற்றுமுன்தினம் அட்டாளைச்சேனை ஊடக ஒன்றுகூடல் இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையற்றும் போதே மேற்படி அமைப்பினர் இக்கருத்தினை வெளிப்படுத்தினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைப்பின் ஆலோசகர் ஏ.எம். எம்.டில்ஷாத் ஊடகத்தின் மூலம் இன்று எத்தனையோ நன்மைகள் மக்களுக்கு கிட்டி வரும் சந்தர்ப்பத்தில் மக்களின் பொதுப் போக்குவரத்து சேவையில் ஏற்படுகின்ற குழறுபடிகளை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பல முறை தெரியப்படுத்தியும் இதுவரை தீர்வு கிட்டாமையால் இறுதி நம்பிக்கையாகவுள்ள ஊடகத்தின் மூலமாக நன்மையினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் நாம் எமது பிரச்சினைகளை முன்வைக்கின்றோம். எமது அமைப்பானது மக்களின் சேவையினை தன்னலமற்ற சேவையாகக் கருத்திற் கொண்டு நீண்ட காலமாக கல்முனையிலிருந்து கொழும்பு நோக்கிய பயணத்தில் ஈடுபட்டு வருகின்றோம். மக்கள் சேவையினை முதற் கொண்டு நாளாந்த வருமானத்தினை நம்பியே எமது வாழ்வாதாரம் அமைகின்றது. நாம் வீதிப் போக்குவரத்து அதிகார சபையின் அனுமதி பெற்று எமது சேவையினைப் புரிந்து வருகின்றோம். போக்குவரத்து அனுமதியினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் பஸ் ஒன்றுக்கு தலா மூன்றரை இலட்சம் ரூபாவினை வருடமொன்றுக்கு செலுத்தி வருகின்றோம்.

தனிநபர் ஒருவரின் முறையற்ற செல்வாக்கினைப் பயன்படுத்திய செயற்பாட்டினால் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய பணம் வீணே செல்கின்றது. அதுமட்டுமல்லாமல் கட்டுப் பணத்திற்கு பெருமதிப்புள்ள பஸ் வண்டிகளை கொள்வனவு செய்து சேவையில் ஈடுபடுத்தி வரும் எமக்கு போதிய வருமாணம் அற்ற நிலையும் தோன்றியுள்ளது என்றார்.

# பேராசிரியர் கே.எம். காதர் மொய்தீனுக்கு முன்னாள் அமைச்சர் அஸ்வர் வாழ்த்து

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பேராசிரியர் கே.எம். காதர் மொய்தீன் அதிக இஸ்லாமிய பற்றுக்கொண்டவர், நேர்மையானவர், அனைவரையும் மதித்து நடக்கக்கூடியவர். இன்றுள்ள சூழ்நிலையில் முஸ்லிம்களுக்கு தலைமை வகிப்பதற்கு மிகவும் பொருத்தமானவர் என முன்னாள் முஸ்லிம் கலாசார அமைச்சரும் முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபருமான ஏ. எச். எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவராக பேராசிரியர் கே.எம். காதர் மொய்தீன் தெரிவு செய்யப்பட்டுள்ளதைப் பாராட்டி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

பேராசிரியர் கே.எம். காதர் மொய்தீன் சாஹிபை நான் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக நன்கறிவேன். இந்திய முஸ்லிம்களின் தலைவர் மர்ஹூம் காயிதே மில்லத் முஹம்மது இஸ்மாயில் சாஹிப், ரீ.கே. அப்துல் சமத் சாஹிப், பேராசிரியர் மௌலானா அப்துல் வஹாப், லோக் சபா உறுப்பினர் ஹாஜா மொய்னுத்தீன், பிர் முஹம்மது சாஹிப் போன்றவர்களோடு, அவரை நான் சென்னை மரைக்காயர்லெப்பை வீதியிலுள்ள முஸ்லிம் லீக் தலைமையகத்தில் சந்திப்பதுண்டு. அதனால் அவரோடு மிக நெருங்கிய நட்பு ஏற்பட்டது.

அவர் இஸ்லாமிய பற்றுக்கொண்டவர், நேர்மையானவர், அனைவரையும் மதித்து நடக்கக் கூடியவர். இன்றுள்ள சூழ்நிலையில் இந்திய முஸ்லிம்களுக்கு தலைமை வகிப்பதற்கு மிகவும் பொருத்தமானவர் என்பதை என்னால் இலகுவில் ஊகித்துக் கொள்ள முடியும்.



இந்திய முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் தலைமைத்துவம் என்பது சாதாரணமாக சர்வதேச முஸ்லிம்களுக்கு தலைமைத்துவம் வகிப்பதைப் போன்றதாகும்.

ஆகவே, அவருடைய நீண்ட ஆயுளுக்கும், அவருடைய தலைமைத்துவத்தின் கீழ் இந்திய முஸ்லிம்கள் அரசியல் ரீதியிலும் ஏனைய விவகாரங்களிலும் வெற்றி கொள்வதற்கும் காயிதே மில்லத் முஹம்மத் இஸ்மாயில் சாஹிப் வகுத்துத் தந்த நன்னெறிப்பாதையில் முஸ்லிம்களை நடாத்திச் செல்வதற்கும் அவருக்கு இறைவன் துணைபுரிய வேண்டும் - என்றும் தெரிவித்தார்.

**மர்ஹூம் நாகூர் நிகாஹ் சேவை**

**உண்மையான உறுதியான மஹர் அடிப்படையில் சிறந்த துணைகளைத் தேடித் தருவதற்கு எம்மை நாடவும். 30 வருட சேவையுடைய தர்ஹ் முகவர்** M.A.S. Hameed (p.m), No. 460A, Mosque Lane, Kalmunaikkudy - 09. (077 3249459), N. Rahmathullah (R.I.)T.P: 0772810009. WhatsApp: 0779697790 Email - nrahmathullah786@yahoo.com

# வாய்வழி மாக்ஸிலோ பேஷியல் அறுவை சிகிச்சை

★ செ. தர்ஷிகா

ஒவ்வொருவரும் தங்கள் முகத்தை அழகாக வைத்திருக்கவே விரும்புவார்கள். முகத்தில் தழும்புகளோ அல்லது முகப்பருவே வந்துவிட்டால் உடனடி நிவாரணமாக வீட்டு குறிப்பு களால் முக அழகு சீர்குலைந்து காணப்படுகிறது.

முகத்தில் ஏற்படுபடும், முகப்புற்றுநோய், சருமப்பிரச்சினைகள், நீக்காயங்கள், முகம் விபத்துகளினால் சேதமாகியிருத்தல், வெட்டுக்காயங்கள்,போன்றவற்கும் தற்போது


தினத்தை வைத்திய நிபுணர்கள் அனுஷ்டிப்பதன் நோக்கம் மேற்படி சிகிச்சைகள் மூலம் துறைசார் வைத்திய நிபுணர்கள் சர்வதேச ரீதியில் ஆற்றும் சேவைகளை கௌரவிப்பதற்கும் மக்களை அறிவூட்டுவதற்குமேயாகும். இதன் முக்கியத்துவம் என்னவெனில் வாய்


இதற்கான சிகிச்சைகளை மேற்கொள்ள முடியும். எனினும் குழந்தை வளர்ந்ததும் உளரீதியான பிரச்சினைகளுக்கும் உடல் ரீதியான பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க நேரிடுகிறது. அதற்காக உடனடியாக சிகிச்சைகளை வைத் திய சா லை களில்

களை வைத்து முகத்தை பொழிவாகவும் அழகாகவும் வைத்திருக்க முற்படுவார்கள். அந்தவகையில் முகத்தில் ஏற்படும் நீக்காயங்கள், வடுக்கள், அண்ணப்பிளவு உள்ளிட்ட சிகிச்சைப்பெற முடியாத தழும்புகள் போன்றவை காணப்பட்டால் உளரீதியாகவும் மனரீதியாகவும் பாதிக்கப்பட்டுவிடுவார்கள். அதற்காகவே சிகிச்சை அளிக்கும் முகமாக தற்போது இலங்கையில் அதற்கான சிகிச்சை முறைகளும், வேலைத்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி வாய்வழி மாக்ஸிலோ பேஷியல் அறுவை

சிகிச்சை தினம் அனுஸ்டிக்கப்படுகிறது. வாய்வழி மாக்ஸிலோ பேஷியல் அறுவை சிகிச்சை மூலம் வாய்க்குழியில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் அதாவது பற்கள் வெளியே தள்ளியிருத்தல், பற்களுக்கு நடுவில் கட்டிகள், வாய்புற்றுநோய், நாக்கின் அடிப்பகுதியில் கட்டிகள், புண்கள், பல் ஈறுகளில் சேதம் போன்ற வாய் வழியாக ஏற்படும் பிரச்சினை




சிகிச்சை முறைகளை மேற்கொள்ளமுடியும்.

வாய்வழி மாக்ஸிலோ பேஷியல் அறுவை சிகிச்சை தினம் என்பது உலகளாவிய ரீதியில் உள்ள வாய் முக அறுவை சிகிச்சை வைத்தியர்கள் ஒன்றிணைந்து அனுஷ்டிக்கும் ஒரு தினமாகும். சர்வதேச ரீதியாக இத்தினத்தை வாய்வழி மாக்ஸிலோ பேஷியல் அறுவைசிகிச்சை விஷேட வைத்திய நிபுணர்கள் சங்கம் முதன்முதலாக கடந்த 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி பிரகடனப்படுத்தினர்.

வாய்வழி மாக்ஸிலோ பேஷியல் அறுவைசிகிச்சை வழி மாக்ஸிலோ பேஷியல் அறுவை சிகிச்சை பற்றி மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையில் அதிகபட்ச தெளிவை ஏற்படுத்துவதாகும்.

இலங்கையிலும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற வாய்வழி மற்றும் முகத்துடன் தொடர்புடைய பிரச்சினைகளை வைத்துக் கொண்டு ''மகிழ்ச்சியான முகமொன்று மனதுக்கு நிம்மதி முகத்தின் விகாரம் மனக் கவலையை ஏற்படுத்தும்'' என்ற தொனிப் பொருளில் இவ்வருடம் இலங்கையிலும் வாய்வழி மாக்ஸிலோ பேஷியல் அறுவை சிகிச்சை தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

அடுத்தகட்டமாக பிறக்கும் குழந்தைகளுக்கு ஏற்படும் அண்ணப்பிளவு இவை பிறக்கும் குழந்தைகளுக்கு ஏற்படுகிறது. இதனால் கர்ப்பத்திலே சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாது. அதனால் பிள்ளை பிறந்தவுடன்




மேற்கொண்டு முகத்தை சீரமைத்துக்கொள்ளலாம்.

அண்ணப்பிளவுஎன்றால் என்ன?

கர்ப்ப காலத்தில் குழந்தை கருப்பையில் வளரும்போது, இரத்த நாளத்திலிருந்து, மூக்கின் கீழ்ப்பகுதி வளர உதவும் தசைகளுக்குச் செல்லும் இரத்த ஓட்டத்தில் தடையேதும் ஏற்பட்டால், அப்பகுதி முழுமையாக வளர்ச்சி பெறாமல் பிளந்து காணப்படும்.

அண்ணப்பிளவு ஏற்படக் காரணம் என்ன?

கருவிலிருக்கும் குழந்தையின் உடல் உறுப்புகள், முழு வளர்ச்சி அடையாமல் பாதிக்கப்படுவதற்கு முக்கிய காரணமே, ஊட்டச்சத்து குறைபாடு தான். எனவே, கர்ப்பிணிகள், கர்ப்ப காலத்தில் ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளை உட்கொள்வதோடு, மருத்துவர் பரிந்துரைக்கும் மருந்துகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இப்பிரச்சினை பிறவிக் குறைபாடா?

கருவிலேயே குழந்தையின் வளர்ச்சி பாதிக்கப்படுவதால், இது பிறவிக் குறைபாடு தான். இப்பிரச்சினையை குழந்தை கருவில் இருக்கும் போதே தீர்க்க முடியாது. குழந்தை பிறந்தவுடன் தான் தீர்வு காண முடியும்.

இப்பிரச்சினையால் எவ்வகையான குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர்?

பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பை சார்ந்தவர்களுக்கு, பிறக்கும் குழந்தைகளில், சில பேர் அண்ணப்பிளவோடு பிறக்கின்றனர். கர்ப்ப காலத்தில் ஊட்டச்சத்தின் முக்கியத்துவத்தை அறியாமல், சரிவிகித உணவு எடுத்துக் கொள்ளாத மற்றும் கர்ப்ப காலத்தை அதிக மன அழுத்தத்தோடு கடத்தும் கர்ப்பிணிகளுக்கு, பிறக்கும் குழந்தைகள் அண்ணப்பிளவால் பாதிக்கப்படுகின்றனர்.

மேற்சொன்ன காரணங்களால் மட்டுமே அண்ணப்பிளவு ஏற்படுகிறதா?

கர்ப்ப காலத்தில், மருத்துவரின் அறிவுரைபடி, நடைப்பயிற்சி மற்றும் உடற்பயிற்சி செய்யாத கர்ப்பிணிகளுக்கு, பிறக்கும் குழந்தைகள் அண்ணப்பிளவால் பாதிக்கப்படுகின்றனர். அது மட்டுமல்ல கர்ப்பத்திலுள்ள குழந்தைகள் அண்ணவளர்ச்சிக்கு செல்லும் இரத்தக்குழாயான முகத்தமனியை, சில வேளைகளில் கருவிலிருக்கும் குழந்தைகளே அழுத்திக் கொண்டிருந்தாலும் இப்பிரச்சினை ஏற்படும்.

குழந்தைகள் அண்ணப்பிளவுபாதிப்பை தவிர்க்க என்ன செய்யலாம்?

கர்ப்ப காலத்தில் ஊட்டச் சத்துள்ள உணவுகளை உட்கொள்ள வேண்டும். சீரான நடைப் பயிற்சி மற்றும் உடற்பயிற்சிகளை மருத்துவரின் ஆலோசனையுடன் செய்ய வேண்டும். மன அழுத்தம் இல்லாமல், மன மகிழ்ச்சியோடு கர்ப்ப காலத்தை கடக்க வேண்டும்.

அண்ணப்பிளவால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் எவ்வகையான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்?

காது, மூக்கு மற்றும் தொண்டை வளர்ச்சிக்குறைபாடுகளும் ஏற்படும். சில குழந்தைகளுக்கு இதயம் சார்ந்த நோய்களும் ஏற்படும். திட, திரவ உணவுகளை எடுத்துக் கொள்ளும் போது, அவை மூக்கு வழியாக வெளியேறும். மூக்கு வழியாக சென்ற உணவு நுரையீரலுக்கு செல்வதால், நிமோனியா காய்ச்சல் போன்றவை ஏற்படும்.

இதற்கு சிகிச்சை என்ன?

குழந்தை பிறந்து மூன்று மாதம் முதல், ஒரு வருடத்திற்குள் முகச்சீரமைப்பு அறுவை சிகிச்சை செய்தால் நல்ல பலன் இருக்கும். குழந்தை வளர்ந்த பின் சிகிச்சை மேற்கொண்டால் அங்கிருக்கும் சதைகள் குறைபடுவதால், முகச்சீரமைப்பு சீராக வராது.

ஆகவே முகச்சீரமைப்பு தொடர்பில் ஆரம்பத்திலே கவனம் செலுத்தி உரிய சிகிச்சை முறைகளை மேற்கொள்ளவேண்டும்.

---

## தந்தை குறித்த மகனின் பதிவு



4 வயதில்- என் அப்பா தான் பெஸ்ட். அவரை விடச் சிறந்த அப்பா ஒருவரும் இல்லை. 6 வயதில்- என் அப்பாவுக்கு எல்லோரையுமே தெரியும். 10 வயதில்- என் அப்ப நல்ல அப்பாதான். ஆனால் அவருக்கு அடிக்கடி கோபம் வருகிறது. 12 வயதில்- ஹும்! நான் சின்னவனாக இருந்தபோது அப்பா என் மீது பாசமாக இருந்தார்.

14 வயதில்- என் அப்பா தான் எல்லா விஷயத்தையும் சரியாகச் செய்வதாக நினைத்துக்கொண்டிருக்கிறார். 16 வயதில்- அப்பா அந்த காலத்து மனிதர். லேட்டஸ்ட் விஷயங்களே தெரிவதில்லை. 18 வயதில்- அப்பா ஏன் இப்படி பல சமயங்களிலும் பைத்தியக்காரத்தனமாக நடந்து கொள்கிறார்? 20 வயதில்- அப்பாவுடன் இருப்பதே கஷ்டமாக இருக்கிறது. அம்மா எப்படித்தான் இவரை சகித்துக்கொள்கிறாரோ?

25 வயதில்- என் அப்பாவுக்கு என்ன ஆச்சு? நான் என்ன செய்தாலும் அதை எதிர்ப்பதையே முதல் காரியமாகச் செய்கிறாரே? 30 வயதில்- என் மகனை சமாளிப்பது பெரிய கஷ்டம்! நான் சின்னவனாக இருந்தபோது அப்பாவுக்கு எத்தனை பயந்து நடந்தேன்?

40 வயதில்- ஹும்! அந்த காலத்தில் என் அப்பா என்னை ஒழுக்கத்தோடு வளர்த்தார். நானும் என் மகனை அப்படித்தான் வளர்க்க வேண்டும்! 45 வயதில்- குழந்தைகளை-அதுவும் டீன் ஏஜ் குழந்தைகளை வளர்ப்பது மிகவும் கஷ்டம். என்னை அப்பா எப்படித் தான் சமாளித்தாரோ.

50 வயதில்- எத்தனையோ கஷ்டங்களுக்கு மத்தியில் என் அப்பா எங்கள் எல்லோரையும் நன்றாக வளர்த்தார். எனக்கு ஒரு மகனையே ஒழுங்காக வளர்க்கத் தெரியவில்லை. 55 வயதில்- என் அப்பா ஒரு தீர்க்கதரிசி. தனித்துவம் மிக்கவர். 60 வயதில்- என் அப்பா தான் பெஸ்ட். அவரை விடச் சிறந்த அப்பா ஒருவரும் இல்லை!

முதல் நிலைக்கு திரும்பவும் வருவதற்கு ஒரு மகனுக்கு 56 வருடங்கள் பிடித்திருக்கிறது. நல்ல வேளையாக உங்களுக்கு அத்தனை வயது ஆகவில்லையெனில், ஏன் தாமதிக்கிறீர்கள்? உடனடியாக உங்கள் அப்பாவுக்கு ஒரு போன் செய்து அவரை நீங்கள் மிகவும் நேசிப்பதாகச் சொல்லுங்கள்.

---

## அறிவுலகம்



- வை.எம். ஆஷிக்

### அப்பிள் நிறுவனத்தின் அடுத்த படைப்பு



அப்பிள் ஐபோன்களின் 10ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு ஐபோன் 8 ஸ்மார்ட் போனில் பல்வேறு மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் என்று கூறப்படுகின்றது.

ஒவ்வொரு வருடத்தினை போன்றும் இந்த வருடமும் செப்டம்பர் மாதம் அப்பிள் ஐ போன்கள் வெளியாகவுள்ள நிலையில் அவற்றின் தயாரிப்புப் பணிகளை திட்டமிட்டதை விடவும் முன்பாக ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வழமையை விடவும் ஒரு சில மாதங்கள் முன்னதாகவே ஐபோன்களின் தயாரிப்புப்பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் இம்முறை 300 சதவிகிதம் வரை கூடுதலான சாதனங்களை தயாரிக்க திட்டமிட்டுள்ளதாகவும் அப்பிள் நிறுவனம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலாண்டுகளில் மொத்த ஐபோன்களின் எண்ணிக்கை 45 மில்லியனில் இருந்து 48 மல்லியன் வரை இருந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் ஐபோன் 8 தயாரிப்பிற்காக ஐபோன் 7 மற்றும் ஐபோன் 7ண் மொடல்களின் தயாரிப்புகள் குறைக்கப்படலாம் என கூறப்படுகிறது.

அதிக எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் ஐபோன் 8 இந்த ஆண்டு வெளியாகவுள்ள நிலையில், ஐபோன் பிரியர்களிடத்தில் பெரும் எதிர்பார்ப்பை தோற்றுவித்துள்ளது.

ஐபோன்களின் மிக முக்கிய அம்சங்களில் ஒன்றான கமரா இம்முறை அதிகம் மேம்படுத்தப்படும் என்று தெரிகின்றது.

அதன் படி ஐபோன் 8இல் 3டீ டுயல் லென்ஸ் கொண்ட கமரா அமைப்பு வழங்கப்படலாம். இதற்கென அப்பிள் நிறுவனம் லின்க்ஸ் எனும் இஸ்ரேலிய நிறுவனத்தை சமீபத்தில் கைப்பற்றியது.

இந்நிறுவனம் 3டீ புகைப்படங்கள் சார்ந்த பணிகளை மேற்கொள்ளும் நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.

### செங்கல் போன்கள் சந்தைக்கு...

சர்வதேச மொபைல் காங்கிரஸ் விழாவின் அங்கமாக பெப்ரவரி 26 அன்று பல நோக்கியா போன்கள் வெளியாகும் என தகவல்கள் வெளியாகியுள்ளது. ஸ்மார்ட்போன்களை போன்றே பீச்சர் போன்களையும் நோக்கியா வெளியிட இருப்பதாக கூறப்படுகிறது. அந்த வகையில் நோக்கியாவின் 3310 போன் மீண்டும் வெளியிடப்படலாம் என செய்திகள் வெளியாகியுள்ளது.

ஸ்மார்ட்போன் காலகட்டத்தில் ஒவ்வொரு மொபைலிலும் டூயல் லென்ஸ் கேமரா, நீண்ட பேட்டரி பேக்கப், பெசல்-லெஸ் வடிவமைப்பு என பல்வேறு வித்தியாச அம்சங்களை கொண்டுள்ளன. தொழில்நுட்ப சந்தையில் ஸ்மார்ட்போன்களுக்கான முக்கியத்துவம் அதிகமாக இருக்கும் நிலையில் நோக்கியா மீண்டும் தனது பிரபலமான 3310 போனினை வெளியிட இருக்கிறது.

### இன்டர்நெட் இன்றியும் வட்ஸ்அப்?




இனி இன்டர்நெட் வசதி இல்லாமலேயே வட்ஸ் அப் பயன்படுத்தலாம்!

இன்றைய இளசுகள் மத்தியில் வட்ஸ் அப் முக்கிய இடத்தை பிடித்துள்ளது அனைவரும் அறிந்ததே. நித்திரைக்கு போகும் போதும் சரி நித்திரைவிட்டு எழும்பும் போதும் சரி வட்ஸ் அப் பார்க்காது விடுவதில்லை இன்றைய இளைஞர்கள்.

அந்த அளவிற்கு வட்ஸ் அப் அவர்களின் வாழ்க்கையில் முக்கிய இடத்தை பிடித்துள்ளது.

இந்நிலையில் இனி இன்டர்நெட் இல்லாமலேயே வட்ஸ் அப் பயன்படுத்தலாம் என்று கூறப்படுகின்றது.

இது அனைத்து இளைஞர்களுக்கும் சந்தோசமான செய்தியாகவே இருக்கும் எனினும் அது அனைத்து கைப்பேசிகளிலும் இல்லை.

ஐபோன்களில் ஐ. ஓ. எஸ். அப்டேட் வட்ஸ்ஆப் (பதிப்பு 2. 17. 1. ) எனும் புதிய பதிப்புக்கு உங்களது மென்பொருளை அப்டேட் செய்ய வேண்டும்.

ஐ. போன், ஐ பொட், ஐ பொட் டஜ் ஆகியவற்றில் இதை அப்டேட் செய்ய முடியும். இந்த அப்டேட் மூலம் இன்டர்நெட் இல்லாமலும் வட்ஸ் அப்பின் தகவல்களை பரிமாறிக்கொள்ளலாம் என்று கூறப்படுகின்றது.

### சந்திரன் தொடர்பான ஆய்வு

பூமியின் துணை கிரகமான சந்திரன் எப்போது தோன்றியது என்ற கேள்வி பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. அது குறித்த ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

பூமி மற்றும் தியா எனப்படும் தொடக்க கால கோள்களும் ஒன்றுடன் ஒன்று அதி பயங்கரமாக மோதிக் கொண்டதில் சந்திரன் உருவானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.


தொடக்கத்தில் சந்திரன் திரவ நிலையில்தான் இருந்தது. பின்னர் அது திட நிலைக்கு மாறியதாகவும் கூறப்படுகிறது.

கடந்த 1971ஆம் ஆண்டு அமெரிக்காவின் நாசா மையம் அப்பல்லோ 14 விண்கலம் மூலம் மனிதர்களை முதன் முறையாக சந்திரனுக்கு அனுப்பியது.

அப்போது அங்கிருந்து கனிமங்கள் வெட்டி எடுக்கப்பட்டு வந்தன. அவை ''ஷிர்கான்ஸ் என அழைக்கப்படுகின்றன.

அவற்றை பற்றி அமெரிக்காவின் கலிபோர்னியா - லாஸ் ஏஞ்சல்ஸ் பல்கலைக்கழக நிபுணர்கள் ஆய்வு மேற்கொண்டனர். அதன் மூலம் சந்திரன் 451 ஆண்டுக்கு முன் தோன்றியிருக்க வேண்டும் என விஞ்ஞானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அதாவது முந்தைய ஆய்வின் தகவல் படி 4 கோடி முதல் 14 கோடி ஆண்டுக்கு முன்பே தோன்றிருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வரலாறு திரும்புமா?





"கூட்டிக்கழித்து பார்த்து கணக்கு சரியாக தான் வரும்..." அவ்வப்போது நகைச் சுவைக்காக சொல்லப்பட்டாலும் தமிழக அரசியலில் பல யதார்த்த பூர்வமான உண்மைகளை எத்தி வைப்பதாக அமைந்துள்ளது.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மறைந்து இன்றுடன் 70 நாட்கள் கடந்துவிட்டுள்ள நிலையில் தமிழக அரசியலில் நிமிடத்துக்கொரு மாற்றம் இடம் பெற்றவண்ணமேயுள்ளது... ஜெயலலிதா காலமானார் என்ற செய்தி வெளியாகி சில மணி நேரங்களில் அடுத்த தமிழக முதல்வராக ஓ.பன்னீர்செல்வம் பதவியேற்றார். பின்னர் அரசியலின் புதிய திருப்பமாக அ.தி.மு.க சட்டப்பேரவை கட்சி தலைவராக ஜெயலலிதாவின் தோழி வி.கே.சசிகலா ஏகமனதாக தெரிவு செ

தற்போது கட்சியில் நடைபெறும் நிகழ்வுகளால், தொண்டர்கள் அதிருப்தி அடைந்திருக்கின்றனர். மக்களுக்காக தன்னந்தனியாக போராடத் தயாராக இருக்கிறேன்" என்று அதிரடியாக அறிவித்தார். அதுமட்டுமன்றி தன்னோடு இணைந்து கட்சி பணியை முன்னெடுக்க ஜெயலலிதாவின் அண்ணன் மகள் ஜெ.தீபாவுக்கு அழைப்பு விடுத்திருந்தார். இந்நிலையில் தமிழக முழுவதும் ஓ.பி.எஸ்ஸுக்கான ஆதரவுகள் குவிந்த வண்ணம் இருந்தன.

இதனையடுத்து அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் கூட்டம் சசிகலா தலைமையில் ஒரே மாதத்தில் இரண்டாவது முறையாக கூடியது. இதில் கட்சியின் பொருளாளர் பதவியிலிருந்து ஓ.பி.எஸ். நீக்கப்படுவதாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலா அறிவித்தார். இதனையடுத்து எம்.எல்.ஏக்களுக்கான சிறப்பு விருந்து என்ற பெயரில் நூற்றுக்கணக்கான அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள், கூவத்தூர்

உத்தரவிடப்பட்டிருந்தது. இதனையடுத்து சரணடைய சசிகலா தரப்பு வாய்மொழி மூல கால அவகாசம் கோரியிருந்த வேளை கால அவகாசம் வழங்க உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவிக்கவே, வேறு வழியின்றி சசிகலா ஜெயலலிதாவின் சமாதியில் சபதமேற்று, பின்னர் மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் இல்லத்தில் தியானத்தில் ஈடுபட்டு பின்னர் சரணடையக் கிளம்பினார்...

இந்நிலைமை அ.தி.மு.கவை பொறுத்தமட்டில் புதிதான ஒன்றல்ல என்றாலும் அதுகடந்து வந்த பாதையை நாம் முன்னோக்கி பார்க்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

அந்தவகையில் எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு கடந்த 1988-ஆம் ஆண்டில் அதிமுக இரண்டாக உடைந்தது. மீண்டும் இணைந்த கட்சி, இப்போது சசிகலா-ஓ.பி.எஸ். என இரண்டு அணிகளாகப் பிரிந்து நிற்கிறது.

கட்சியை விட்டு நீக்கப்பட்டதாக சசிகலா அறிவித்துள்ள நிலையில், ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் புதிய கட்சியோ அல்லது அமைப்போ உருவாகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், யார் உண்மையான அதி

ளைக் கொண்ட அதிமுகவில் 33 பேர் ஜெயலலிதாவை ஆதரித்தனர் மற்றவர்கள் ஜானகி அணியை ஆதரித்தனர். இப்போது போலவே, அன்று ஜெயலலிதா ஆதரவு எம்.எல்.ஏக்கள் சொகுசுப் பேருந்துகளில் பெங்களூரு, மைசூரு, கோவா என்று கொண்டு செல்லப்பட்டனர். அப்போதைய சட்டப் பேரவையின் தலைவராக இருந்த பி.எச்.பாண்டியனும் ஜானகி அணியை ஆதரித்தார். மேலும், அவர் ஜெயலலிதா ஆதரவு உறுப்பினர்களை அவையிலிருந்து நீக்கினார். இந்தச் சம்பவங்கள் நடைபெறுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 1986-இல் திமுகவின் பத்து உறுப்பினர்கள் ஹிந்தி எதிர்ப்பு போராட்டத்தில் அரசியலமைப்பு சட்டநகலை எரித்தற்காக அவையிலிருந்து நீக்கப்பட்டிருந்தனர்.

எனவே சட்டப் பேரவை உறுப்பினர்கள் எண்ணிக்கை 234 இல் இருந்து 191 ஆகக் குறைந்திருந்தது. ஜானகி தலைமையிலான அணியின் அரசு மீதான நம்பிக்கை

வெளியிட்டார்.இதனால், அவையில் பெரும் அமளி ஏற்பட்டது. இந்த கூச்சல்-குழப்பத்தைத் தொடர்ந்து, பேரவையை ஒத்தி வைத்தார். ஜெயலலிதா தரப்பு உறுப்பினர்கள் அனைவரையும் வெளியேற்றி, வெறும் 111 உறுப்பினர்களுடன் நம்பிக்கை வாக்கெடுப்பை நடத்தினார்.

அதில் ஜானகி ராமச்சந்திரன் அணி வெற்றி பெற்றதாக அறிவித்தார். வாக்கெடுப்பின் போது

கடந்த 1988-ஆம் ஆண்டில் அதிமுகவுக்கு 132 சட்டப் பேரவை உறுப்பினர்கள் இருந்தனர். இப்போது, 134 உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

ஆனால், அப்போது ஜானகி, ஜெயலலிதா ஆகிய இரு அணிகளுக்கும் ஆட்சியை உடைக்கக் கூடிய அளவுக்கு கணிசமான எம்.எல்.ஏ.க்கள் இருந்தனர். ஆனால், இப்போது ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான அணிக்கு 10 எம்.எல்.ஏ.க்கள் வரையே ஆதரவு தெரிவித்துள்ளனர். சசிகலா தரப்பினர் தங்களுக்கு 125 எம்.எல்.ஏ.,க்கள் ஆதரவு தெரிவிப்பதாகக் கூறியுள்ளனர்.

இரு அணிகளாகப் பிரிந்துள்ள சூழ்நிலையில், ஓ.பன்னீர்செல்வத்திடம் உள்ள 10 எம்.எல்.ஏ.க்கள் சசிகலா அணியின் பக்கம் சாய்வார்களா அல்லது சசிகலா தரப்பிலுள்ள 125 எம்.எல்.ஏ.க்களில் எத்தனை பேர் ஓ.பி.எஸ். பக்கம் சாய்ந்து அவரது தலைமையை ஏற்பார்கள் என்பது சட்டப் பேரவையில் நம்பிக்கை வாக்கு கோரும் போதே தெரிய வரும்.

ஒருவேளை ஓ.பி.எஸ். அணியில் 18 எம்.எல். ஏக்களுக்கும் அதிகமாகச் சேர்ந்துவிட்டால், யாராலும் ஆட்சி அமைக்க முடியாத நிலைமை ஏற்படலாம்.

நம்பிக்கை வாக்குக்

ய்யப்பட்டு தமிழக அரசியலில் பிரவேசித்து, 40 நாட்கள் கடந்து விட்டுள்ள நிலையில் தமிழக முதலமைச்சு பதவியை இராஜினாமா செய்தார் ஓ.பன்னீர் செல்வம்.

இதனையடுத்து தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்க உள்ளதாகவும், அதற்கான நிகழ்ச்சி நிரல்கள் வகுக்கப்பட்டு முழுவீச்சில் இடம்பெற்றுகொண்டிருந்த வேளை, 'என்னை கட்டாயப்படுத்தியே இராஜினாமா செய்ய வைத்தனர். மக்கள் விரும்பினால் இராஜினாமாவை திரும்பப் பெறுவேன். கட்சிப் பொறுப்பிலிருந்து என்னை நீக்க யாருக்கும் உரிமையில்லை. அ.தி.மு.கவுக்கு சிறப்பான தலைமை தேவை.

சொகுசு விடுதியில் ஒருவாரகாலமாக சிறைவைக்கப்பட்டனர். இவ்வாறு அரசியலில் அதிரடி மாற்றங்கள் ஒவ்வொன்றாக அரங்கேறிக்கொண்டிருக்க சசிகலாவின் முதலமைச்சுக் கனவில் பேரிடியாக வந்திறங்கியது ஜெயாவின் சொத்துகுவிப்பு வழக்கின் தீர்ப்பு.

இதில் சசிகலா, இளவரசி மற்றும் சுதாகரன் ஆகிய மூவரும் குற்றவாளிகள் என உறுதிப்படுத்தப்பட்டதுடன் அவர்களுக்கு தலா 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டதுடன் 10 கோடி ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி உடனடியாக சசிகலா சரணடைய வேண்டும் எனவும்

முக என்ற கேள்வி எழுப்பப்பட்டு அது தொடர்பான வழக்குகள் தேர்தல் ஆணையத்திலும், நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யப்படும் நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது.

தமிழக முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். கடந்த 1987-ஆம் ஆண்டு டிசம்பர் 24-இல் மரணம் அடைந்தார். அவரது மறைவுக்குப் பின் யார் முதல்வராவது என்று அதிமுகவில் பெரும் சர்ச்சை எழுந்தது. ஆர். எம். வீரப்பனின் ஆதரவுடன் எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகி ராமச்சந்திரன் முதல்வரானார்.

ஆனால் அதை கட்சியின் மற்றொரு தலைவராக இருந்த ஜெயலலிதா ஏற்கவில்லை. 132 சட்டப் பேரவை உறுப்பினர்க

வாக்கெடுப்பு கடந்த 1988-ஆம் ஆண்டு ஜனவரியில் நடத்தப்பட்டது.

**பி.எச்.பாண்டியன் செய்த சுவாரஸ்யம்:**

நம்பிக்கை வாக்கெடுப்பு நிகழ்வை, அவைத் தலைவராக இருந்த பி.எச். பாண்டியன் செய்து கொண்டிருந்தார். அப்போது, பேரவை கூடியதும் அவர் திடீரென அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் உட்பட இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஆறு உறுப்பினர்கள் தங்களது பதவியில் இருந்து விலகுவதாக தன்னிடம் தொலைபேசியில் தெரிவித்ததாக அதிரடி அறிவிப்பை

அவையில் நடைபெற்ற குழப்பங்களை காரணம் காட்டி ராஜீவ் காந்தி தலைமையிலான மத்திய அரசு ஜானகி அரசைக் கலைத்து தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை பிரகடனப்படுத்தியது. அதிமுக இரண்டாக பிளவுபட்டது. தேர்தல் ஆணையம் இரு கட்சிகளையும் அதிகார பூர்வமான அதிமுகவாக ஏற்க மறுத்து, அதிமுகவின் இரட்டை இலைச் சின்னத்தை முடக்கியது.

அதிமுக (ஜா) அணிக்கு இரட்டைப் புறா சின்னமும், அதிமுக (ஜெ) அணிக்கு சேவல் சின்னமும் வழங்கப்பட்டது.

**மீண்டும் வரலாறு திரும்புகிறது:**

கோரும் நிகழ்வில் ஏதேனும் ஒரு வெற்றி பெற்றாலும்கூட அதற்குப் பிறகும் அதிமுகவில் சிறிய அளவிலோ அல்லது பெரிய அளவிலோ பிளவு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. அந்தப் பிளவு இரட்டை இலைச் சின்னத்தை முடக்கும் அளவுக்கு இருக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

★ வாக்கெடுப்பின் போது அவையில் நடைபெற்ற குழப்பங்களை காரணம் காட்டி ராஜீவ் காந்தி தலைமையிலான மத்திய அரசு ஜானகி அரசைக் கலைத்து தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை பிரகடனப்படுத்தியது. அதிமுக இரண்டாக பிளவுபட்டது.

---

# இனவாதம் ஓயவே ஓயாதா?

**எம்.ஏ.முஹம்மட் உவைஸ்**

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டது இனவாதமும் மிதவாதமும்தான். அதில் மிதவாதம் வென்று இனவாதம் தோற்றது.

புலிகளைத் தோற்கடித்து தமிழர்களுக்கு எதிராக இனவாதத்தை வளர்த்துக் கொண்டு சென்ற முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு கட்டத்தில் முஸ்லிம்களுக்கு எதிராகவும் அந்த இனவாதத்தைத் திருப்பிவிட்டார்.

பொது பல சேனா, சிங்கள ராவய மற்றும் இராவண பலய போன்ற பேரினவாத அமைப்புக்கள் தோன்றி முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதச் செயற்பாட்டை மஹிந்தவின் அனுசரணையில் முன்னெடுக்கத் தொடங்கினர்;அழிவையும் ஏற்படுத்தின.

பௌத்த மக்கள் அனைவரையும் முஸ்லிம்களுக்கு எதிராகத் திருப்பிவிடுவதும் மறுபுறம் தமிழ்-முஸ்லிம் மக்களை மோதவிடுவதும் இவர்களின் திட்டமாக இருந்தது.

கிழக்கில் கல்முனையை அடிப்படையாக வைத்து தமிழ்-முஸ்லிம் மக்களிடையே மோதலை ஏற்படுத்துவதற்கு இந்த பேரினவாத அமைப்புகள் முயற்சி செய்தன.

இவை அனைத்தும் மஹிந்தவின் அரசியல் இலாபங்களுக்காக செய்யப்படுகின்றவை என்பதை தமிழ்-முஸ்லிம்கள் உணர்ந்ததால் விழித்துக்கொண்டனர். அந்தச் சதி வலையில் அவர்கள் சிக்கவில்லை.ஆனால்,சிங்களவர்களை முஸ்லிம்களுக்கு எதிராகத் திருப்பும் சதி ஓரளவு வெற்றிபெற்றது.இதனால் அளுத்கமவில் முஸ்லிம்கள் இனக்கலவரத்துக்குப் பலியாகினர்.

முஸ்லிம்களுக்கு எதிராக இலங்கையில் பல இனக் கலவரங்கள் இடம்பெற்றுள்ளன.சுமார் 100 வருடங்களுக்கு முன் முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனக்கலவரம்,2001 இல் இடம்பெற்ற மாவனெல்லை கலவரம் மற்றும் அளுத்கம கலவரம் போன்றவை முஸ்லிம்களுக்கு எதிராக பேரினவாதிகளால் நிகழ்த்தப்பட்ட இனக் கலவரங்களுள் சிலவாகும்.

அதேபோல், தமிழ் மக்களுக்கு எதிராகவும் பல இனக் கலவரங்கள் பேரினவாதிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளன. ஜூலைக் கலவரம் அவற்றுள் முக்கியமானதாகும். அதுபோக,30 வருடங்களாக யுத்தம் என்ற போர்வையில்-புலிகளை அழித்தல் என்ற பெயரில் தமிழருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் பேரினவாதத்தால் தோற்றுவிக்கப்பட்டவைதான்.

இவ்வாறு இலங்கையின் வரலாற்று நெடுகிலும் பேரினவாத அரசியல்வாதிகள் தமிழ்-முஸ்லிம் மக்களைப் பேரினவாதத்துக்குப் பலி கொடுத்தே தங்களது ஆட்சி அதிகாரங்களைத் தக்கவைத்து வந்துள்ளனர். இன்றும் அது தொடர்வதுதான் கவலைக்குரிய விடயமாகும்.யுத்த வெற்றியைக் கொண்டு பலமாகக் கட்டி எழுப்பப்பட்ட மஹிந்தவின் ஆட்சி ஓரிரு வருடங்களில் சரிந்தமைக்கு இந்த இனவாதப் போக்குதான் காரணம்.

தமிழ்-முஸ்லிம்களுக்கு எதிரான மஹிந்தவின் இனவாத செயற்பாடுகள் எல்லை கடந்து சென்றதால் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றிணைந்து மஹிந்தவின் ஆட்சியைக் கவிழ்த்தனர்.அத்தோடு,இந்தப் பேரினவாதம் ஒளிந்துவிட்டது என்று மக்கள் நினைத்தனர். ஆனால்,அது தற்காலிகமான நிறுத்தம்தான் என்று இப்போது உறுதிப்படுத்தப்படுகின்றது.

பொதுபலசேனா போன்று சிங்கவர்களின் இரத்தம் என்ற பெயரில் ஓர் அமைப்பு உருவாகி அது நாடு பூராகவும் முஸ்லிம்களுக்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றது. இந்த அமைப்பு உருவானது முதல் முஸ்லிம்களுக்கு எதிராக பல இனவாத சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. கம்பளை மற்றும் தெஹிவளை ஆகிய இடங்களில் பள்ளிவாசல்களுக்கு எதிராகப் பிரச்சினை என சிறு சிறு சம்பவங்கள் இடம்பெற்ற



வண்ணமே உள்ளன.அவ்வப்போது ஞானசார தேரரும் வாயைத் திறக்கின்றார். அரசியல் தீர்வு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை,போர்க்குற்ற விசாரணை மற்றும் மீள்குடியேற்றம் போன்ற தமிழ் மக்களுடன் தொடர்புபட்ட அத்தனை விடயங்களையும் இந்த அமைப்பு எதிர்த்து வருகின்றது இவற்றைக் கொண்டு இனவாதத்தைப் பரப்புகின்றது.

இந்த நல்லாட்சியில்தான் இந்த அமைப்பு உருவானது. இது ஒரு பேரினவாத அமைப்பு என்று தெரிந்தும் கூட பொது பல சேனா போன்ற அமைப்பு என்று அறிந்தும் கூட இதைத் தடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்த நிலையில், இப்போது தமிழ்-முஸ்லிம்களை குறி வைத்துத் இனவாதப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை இலங்கைக்கு வழங்குவதற்காக ஐரோப்பிய ஒன்றியம் விதித்த நிபந்தனைகளில் ஒன்றான முஸ்லிம் தனியார் சட்டத்தை திருத்த வேண்டும் என்ற நிபந்தனையை எதிர்த்து இலங்கை தவ்ஹீத் ஜமாஅத் ஆர்ப்பாட்டம் செய்ததை அடிப்படையாக வைத்து பொது பல சேனா முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதப் போராட்டத்தை மீண்டும் ஆரம்பித்தது. பிறகு அது அமைதியானது.

சிறிது நாட்கள் ஓய்வெடுத்துவிட்டு ஞானசார மீண்டும் இனவாதத்தில் குதித்துள்ளார். முஸ்லிம் நாடுகளில் இருந்து இலங்கை வரும் உலமாக்கள் இங்கு சட்டவிரோதமாகத் தங்கி இருந்து தீவிரவாதத்தைப் போதிக்கின்றார்கள் என்று அவர் கூறி மீண்டும் இனவாதத்தை தூண்டி வருகின்றார். குடிவரவு குடியகல்வு அதிகாரிகளை சந்தித்து குடிவரவு குடியகல்வு சட்டத்தில் மாற்றம் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

இனி இனவாதம் பேசப் போவதில்லைஇனவாதத்தால் எதையும் சாதிக்க முடியாது என்று கூறி ஒரு சில நாட்களிலேயே ஞானசார தேரர் மீண்டும் இனவாதத்தில் இறங்கியுள்ளார்.

இந்த விவகாரம் இப்போது சிங்கள மக்கள் மத்தியில் பரப்பப்படுகின்றது.

இதனால் இனவாதம் முடிவுக்கு வராது என்பதைத்தான் இது காட்டுகின்றது. இதை முடிவுக்கு கொண்டு வரவேண்டிய தேவை இந்த இனவாதிகளுக்கு இல்லை. சிங்கள-முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டிய தேவை இவர்களுக்கு இல்லை. மஹிந்தவின் ஆட்சியில் பிரச்சினைகள் எவ்வாறு சிறிதாக தொடங்கி பெரிதாக வெடித்ததோ அதேபோல்தான் இப்போதும் சிறிதாக பிரச்சினைகள் தோன்றுகின்றன. இதற்கு இனியாவது முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும்.

மஹிந்தவின் ஆட்சியில் பொதுபல சேனா முஸ்லிம்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்யத் தொடங்கியபோது அதைப் பெரிது படுத்த வேண்டாம். அவர்கள் தானாக அடங்கிவிடுவார்கள் என சிலர் கூறினார். ஆனால், அதை முளையில் கிள்ளி எறியாததால் அவரின் பிரசாரம் மெல்ல மெல்ல வளர்ந்து இறுதியில் அளுத்கமவில் பெரும் கலவரமாக வெடித்தது.

இந்த அனுபவத்தைக் கவனத்தில் கொண்டு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இனவாதம் எந்த இனத்தில் தோன்றினாலும் அது முளையில் கிள்ளியெறியப்பட வேண்டும்.நல்லிணக்கம் தொடர்பில் பேசிக்கொண்டிருந்தால் மாத்திரம் நல்லிணக்கம் ஏற்படாது. அதை நடைமுறைப்படுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

# பதியுதீன் மஹ்மூதின் புரட்சிகர திட்டங்களால் முஸ்லிம்கள் இன்று கல்வியில் விழிப்புணர்வு

**கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன்**





**(குருநாகல் இக்பால் அலி)**

முஸ்லிம் தமிழ் மக்களுடைய கல்வி மறுமலர்ச்சிக்கு வித்திட்ட மகான்களில் ஒருவர் தான் மறைந்த கல்வி அமைச்சர் பதியுதீன் முஹ்மூத் அவரின் புரட்சிகரமாக செயற்பட்டமையினால் தான் இன்று முஸ்லிம்கள் கல்வியில் விழிப்புற்று இருக்கின்றார்கள். எட்டாம் ஆண்டு படித்தவர்களுக்கும் நியமனம் வழங்கி அவர்களை ஆசிரியர்களாக்கி பெருந்தொகையான படித்தவர்களையும் ஆசிரியர்களையும் உருவாக்குவதற்கு மூல காரணமாக இருந்தவர் தான் கலாநிதி பதியுதீன் மஹ்மூத். அதனை யாரும் மறக்க முடியாது என கல்வி இராஜாங்க அமைச்சர் வி. இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரியின் புதிய மாணவர் தலைவிகளுக்கு சின்னம் சூட்டும் விழா பதியுதீன் முஹ்மூத் ஞாபகார்த்த மண்டபத்தில் அதிபர் சிஹானா ரஹீம் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கல்வி இராஜாங்க அமைச்சர் வி. இராதாகிருஷ்ணன் இவ்வாறு இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

அது மட்டுமல்லாது ஓர் உத்தமருடைய பெயரை வைத்துக் கொண்டு நாங்கள் தப்புச் செய்தால் அது எங்களுக்குத் தான் பாவமாகும். ஆகவே அந்தப் பாவங்களிலிருந்து விடுபட்டு எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்வியைக் கொடுக்க வேண்டும் என்பதே என்னுடைய கருத்தாகும். நான் எப்போதுமே மதிக்கின்ற மதம் தான் இஸ்லாம் மதம். ஏனென்றால் ஈகை என்ற செயல் இருக்கின்றதே அதனை நீங்கள் எல்லோரும் செய்கின்றீர்கள். பெரிய பணக்காரர்களாக இருந்தாலும் சாதாரணமானவர்களாக இருந்தாலும் தமக்கு கிடைக்கின்ற வருமானத்தில் இரண்டரை விகிதத்தை ஏழை எளியவர்களுக்கு ஈகையாக கொடுத்து விடுகின்றீர்கள். பொது விடயங்களுக்கு செலவு செய்ய வேண்டியது என்பதும் கடப்பாடாக இருக்கிறது. எனவே இந்த இஸ்லாம் மார்க்கத்தை கடைப்பிடிக்கின்ற ஒவ்வொருவரும் இதனைச் செய்கின்றார்கள். ஆனால் நான் இந்த ஆசிரியரை வேண்டிக் கொள்கின்றேன். இரண்டரை விகிதம் மாணவர்களுக்கு கொடுத்து விட்டு ஏனைய முழுவதையும் நீங்கள் வைத்துக் கொள்ள வேண்டாம். நீங்கள் நூற்றுக் நூறு விகிதத்தை மாணவர்களுக்கான கல்வியைக் கொடுக்க வேண்டும். கற்ற கல்வி அனைத்தையும் தங்களுடைய மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும். இப்படியான சமூகம் இருந்தால் மட்டும்தான் நாங்கள் எதிர்காலத்தில் சிறந்து வாழ முடியும்.

பெரும்பாலான பாடசாலைகள் தமிழ் முஸ்லிம், கிறிஸ்தவ, சிங்களப் பாடசாலைகள் எனப் பிரிக்கப்பட்டுள்ளன. புதிய அரசாங்கத்தின் கல்விக் கொள்கை சமவுரிமை சமத்துவமான கல்வி முறை இருக்க வேண்டும் என்பது தான் எதிர்பார்ப்பாக இருக்கிறது. அதனால் தான் ஜனாதிபதியும் பிரதமரும் கூடுதலாகப் பாடசாலைகளுக்குச் செல்கின்றார்கள். இனங்களுக்கிடையே மதங்களைத் திருப்திப்படுத்தி மதங்களை ஒன்று சேர்த்து எதிர்காலத்தில் பிரச்சினை இல்லாமல் வாழ்வதற்குத் தான் அவர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே முதலில் மாணவர்கள் மத்தியில்தான் ஒற்றுமையை விதைக்க வேண்டும். அதற்குப் பின்னர்தான் பெரியவர்களிடமும் அரசியல்வாதிகளிடமும் சொல்ல வேண்டும். இவற்றைப்பிரிப்பது அரசியல்வாதிகள் தான். எதற்காக என்றால் அரசியல் இலாபத்திற்காகத்தான் பிரிக்கின்றார்கள். இந்தப் பிரிவினையை இல்லாமற் செய்து நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து செயற்படுவது கட்டாயமாகும் என்றார்.

இந்நிகழ்வில் மத்திய மாகாண சபை உறுப்பினர் எம். டி. எம் முத்தலிப் கண்டி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் அமீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மறுபிறப்பு நூல்வெளியீடு



(எம்.கே.முனாஸ்)

மன்னார் தமிழமுது நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் கவிஞர் வை.கஜேந்திரனின் மறுபிறப்பு நூல் வெளியீட்டு விழா அண்மையில் மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட தமிழ்ச்சங்கத்தின் அமைப்பாளர் தமிழறிஞர் தமிழருவி த. சிவகுமாரனின் தலைமையில் நடைபெற்ற இவ்வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினர்களாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கே.காதர் மஸ்தானின் பிரதிநிதி எம்.நளர் ஆசிரியர், மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டிமெல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிறப்பு அதிதிகளாக பேசாலை புனித பற்றிமா மகா வித்தியாலய அதிபர் அருட் சகோதரர் ஜே. ஸ்ரனிஸ்லெஸ் மன்னார் தமிழ்ச்சங்க தலைவர் சிவிஸ்ரீ தர்மகுமார்க் குருக்கள் நகரசபைச் செயலாளர் எக்ஸ். எல். றொனால்டோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

**முஸ்லிம் மாணவிகள் சிங்களத்தில்**

# தேசிய கீதம் இசைத்தமை இன ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாகும்

**தும்புளுவாவ விஹாரதிபதி ஹபுஓவிட குணசிறி தேரர்**

சுதந்திரவிழாவில் முஸ்லிம் மாணவிகள் சிங்களத்தில் தேசிய கீதம் இசைத்தமை சிங்கள முஸ்லிம் ஒற்றுமைக்கு சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகும் என தும்புளுவாவ விஹாரையின் பிரதம விஹாரதிபதி ஹபுஓவிட குணசிறி தேரர் தெரிவித்தார்.

கொடேகொட முஸ்லிம் வித்தியாலயத்தில் நடைபெற்ற சுதந்திரதின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் கூறியதாவது,

ஹெம்மாத்தகமை பிரதேசத்தில் சிங்கள மக்களும் முஸ்லிம்களும் நீண்டகாலமாக ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர். இன்று நாட்டின் 69 ஆவது சுதந்திரதினத்தைக்கொண்டாடுவதற்காக முஸ்லிம்களுடன் சிங்கள மக்களும் இணைந்து கொண்டுள்ளனர். பௌத்த மதகுருவான என்னையும் இவ்வைபவத்திற்கு அழைத்து கௌரவித்தனர். முஸ்லிம் மாணவிகளுக்கு தமிழ் மொழியில் தேசிய கீதத்தை இசைக்க முடிந்திருந்தாலும் சிங்கள மொழியில் இசைத்தமை மகிழ்ச்சியாக உள்ளது.

சிங்களவர்கள் முஸ்லிம்களின் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாகும். கொடேகொட பள்ளிவாசல் நிர்வாக சபையும் ஹெம்மாத்தகம பௌத்த இஸ்லாம் நட்புறவுச் சங்கமும் கொடேகொட வாலிபர் சங்கமும் இணைந்து இவ்விழாவை ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில் பள்ளிவாசல் தலைவர் ஏ.டபிள்யு.எம்.ஸரூக் பௌத்த இஸ்லாம் நட்புறவுச் சங்கத்தலைவர் ஓய்வு பெற்ற அதிபர் ஏ.ஸீ.எம் அஸ்ஹர் மௌலவி எம்.எஸ்.எம். லாபிர் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஆகியோரும் உரையாற்றினார்.

# கல்வெட்டை நொறுக்கிய மகேந்திரன் மீது விசாரணை

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

கல்முனை நகரில் எம்.எஸ்.காரியப்பர் வீதிக்குரிய பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டை இடித்து நொறுக்கியதாக டெலோ கட்சியின் உப தலைவரும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான ஹென்றி மகேந்திரன் மீது தொடரப்பட்ட வழக்கின் இரண்டாம் கட்ட விசாரணை இன்று வியாழக்கிழமை (16) கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

கல்முனை பிரதான நெடுஞ்சாலையில் ஐக்கிய சதுக்க சந்தியில் இருந்து சந்தாங்கேணி விளையாட்டு மைதான நுழைவாயிலைத் தொட்டு, பொதுச் சந்தை வரையான பாதைக்கு கல்முனை மாநகர சபையினால் கேட் முதலியார் எம்.எஸ்.காரியப்பரின் பெயர் சூட்டப்பட்டு, கடந்த 2015.08.09 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமத் ஆகியோரினால் திறந்து வைக்கும் பொருட்டு கல்முனை மாநகர சபையினால் கல்வெட்டு ஒன்று நிறுவப்பட்டது.

அதேவேளை இப்பெயர் சூட்டலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அன்றைய தினம் இடம்பெறவிருந்த நிகழ்வுக்கு முன்னதாக டெலோ அமைப்பின் உப தலைவரும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான ஹென்றி மகேந்திரன் தலைமையில் அவ்விடத்திற்கு ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று வருகை தந்ததுடன் அவரினால் அந்த கல்வெட்டு அடித்து நொறுக்கப்பட்டதாக அப்போதைய கல்முனை மாநகர முதல்வரான சட்டத்தரணி எம்.நிஸாம் காரியப்பரின் பிரத்தியேக செயலாளர் ரீ.எல்.எம்.பாறூக்கினால் கல்முனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதன் பேரில் கைது செய்யப்பட ஹென்றி மகேந்திரன் 75000 ரூபாவுடன் இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இச்சம்பவம் தொடர்பான வழக்கின் முதலாவது விசாரணை கடந்த மாதம் 24 ஆம் திகதி கல்முனை நீதவான் நீதிமன்ற நீதவான் ஐ.பயாஸ் ரஸ்ஸாக் முன்னிலையில் இடம்பெற்றபோது, பிரதிவாதி ஹென்றி மகேந்திரன் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தாவினால் முதலாவது சாட்சியான ரீ.எல். எம்.பாறூக் குறுக்கு விசாரணை செய்யப்பட்டிருந்தார்.

அவ்வழக்கின் விசாரணை நீதவானினால் இன்றைய தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சம்பவம் தொடர்பில் சாட்சியமளிக்க, நீதிமன்றில் ஆஜராகுமாறு முன்னாள் முதல்வர் நிஸாம் காரியப்பருக்கும் அழைப்பாணை அனுப்பப்பட்டிருக்கிறது.

# 35 மில்லியன் செலவில் இரு கைத்தொழில் வேலைத்திட்டம்



ஜனாதிபதியின் விசேட வேண்டுகோளுக்கமைவாக படுவாங்கரை பட்டிபளை கடுக்கா முனை கிராமத்தில் 15 மில்லியன் செலவில் மீன் வளர்ப்புத்திட்டமும் அதற்கான கட்டிடமும் அதேபோன்று தும்பங்கேனி எனும் கிராமத்தில் 20 மில்லியன் செலவில் மீன்வளர்ப்புத் திட்டமும் அதிற்கான கட்டடமும் நேற்று உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண அமைச்சர் கே.துரைராச சிங்கம் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வுகளில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமட் பிரதம அதிதியாக பங்கேற்று இவ் வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.

வைபவத்தில் கிழக்கு மாகாண ஆளுனர் ஒஸ்டின் பெனான்டோ பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் சந்திரதாச கலபதி மாகாண கல்வி அமைச்சர் தண்டாயுதபானி அதன் உறுப்பினர்களான கிருஷ்ணபிள்ளை மற்றும் எம்.நடராஜா உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.



அண்மையில் சம்மாந்துறை மல்கம்பிட்டி பள்ளிவாசல் மற்றும் அதனை சூழவுள்ள பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பு சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. இந் நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் ஏ. மன்சூர், பிரதேச சபையின் செயலாளர் ஏ. சலீம், நம்பிக்கையாளர் சபை தலைவர் எம்.கே.எம். முஸ்தபா மற்றும் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். இதன்போது எடுக்கப்பட்ட படங்கள். **(கியாஸ் ஏ. புஹாரி)**

# நிகழ்வுகள்

## வருடாந்த கூட்டம்

சனத்தொகை மற்றும் நிலைபெறு அபிவிருத்தி சம்பந்தமாக இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான முதலாவது வருடாந்தக் கூட்டம் இன்று மற்றும் ( நாளை 17) காலை 9.00 மணிக்கு நீர்கொழும்பு ஜெட்வின் பீஜ் ஹோட்டலில் சமூக வலுவூட்டல் மற்றும் நலநோம்புகை அமைச்சர் எஸ். பி. திஸாநாயக்க தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சமல் ராஜபக்ஷ, லக்ஷ்ஷ்மன் செனவிரத்ன,சரவணபவன், டக்ளஸ் தேவாநந்தா, டிலான் பெரேரா, லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, சுதர்சினி பிரணாந்து பிள்ளை, சந்ராணி பண்டார, நிரோஷன் பெரேரா, பாராளுமன்ற உறுப்பினர்கள் 30இற்கும் மேலானவர்கள் பங்குகொள்ளவுள்ளார்கள்.

## விளையாட்டுப்போட்டி

**(எம்.ரீ. ஆரிப் - அனுராதபுரம்)**

அனுராதபுரம் கல்வி வலயத்திற்குட்பட்ட கம்பிரிகஸ்வெவ மனாருல் உலூம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி இன்று (16) பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் ஜே.ஏ.அசாத் முஹமட் தலைமையில் நடைபெறவுள்ளது. சபா, அரபா, மர்வா ஆகிய இல்லங்களுக்கிடையே நடைபெறும் இந்த விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாக அனுராதபுரம் வலய கல்விப் பணிப்பாளர் டி.எம். குமுதுனி ஆரியவன்சவும், கௌரவ அதிதியாக வடமத்திய மாகாண தமிழ் மொழிப்பிரிவின் பணிப்பாளர் இ.பீர்முஹமட் உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## பாராளுமன்ற தேர்தல்

**(காலி பீ.எம்.சாகிர் ஹுஸைன்)**

2017ஆம் ஆண்டுக்கான காலி மல்ஹருஸ்ஸுல்ஹியா தேசிய பாடசாலை மாணவர் பாராளுமன்ற தேர்தல் இன்று (16)காலை 7.30மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இரண்டு பிரிவுகளாக நடைபெறும் இத்தேர்தல் 25 பேரை தெரிவு செய்வதற்காக 35 வேட்பாளர்கள் 6-9 பிரிவுகளிலும் 35 பேர்களை தெரிவு செய்வதற்காக 46 வேட்பாளர்கள் 10-13 பிரிவுகளிலும் போட்டியிடுவதற்காக களமிறங்கியுள்ளார்கள்.

இத்தேர்தல் சுமூகமாகவும் அமைதியாகவும் நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளதாக அதிபர் ஐ.எம்.எம்.யூஸுப் தெரிவித்தார்.

## நூல் வெளியீட்டு விழா

**(ஹஸ்பர் ஏ ஹலீம் கிண்ணியா)**

திருகோணமலை திருமறைகலா மன்ற இணைப்பாளர்.தேவி அருணாசலத்தின் "வரும் வசந்தகாலம்" சிறுகதை நூலின் வெளியீட்டு விழா திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் நீங்களும் எழுதலாம் ஆசிரியர் எஸ் .ஆர். தனபாலசிங்கம் தலைமையில் எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை,மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம், வடமாகாண சபை எதிர்க்கட்சி தலைவர்சி. தவராசா, திருகோணமலை பிரதேச செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ், திருகோணமலை வலயக்கல்வி பணிப்பாளர் ந.விஜேந்திரன்,கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் திருமதி. வில்வரட்ணம் சிவப்பிரியா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். வரவேற்புரையை சிரேஸ்ட கலாச்சார உத்தியோகஸ்தர் வி. குணபாலவும், மதிப்பீட்டுரையினை ஊடகவியலாளர் திருமலை நவமும், ஆசிரியை சௌ.சந்திரகலாவும் ஆற்றவுள்ளனர்.

## சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம்

**(கம்பளை எம்.எம். எம். ரம்ஸீன்)**



வெலிகல்ல பழைய எல்பிடிய கிராமத்தை சேர்ந்த முஹம்மத் அன்சார் முஹம்மத் அஸ்கர் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் வெலிகல்ல பழைய எல்பிடிய கிராமத்தின் முதலாவது சட்டத்தரணியான இவர் முஹம்மத் அன்சார் - ஹுசைமா தம்பதியினரின் புதல்வரும் பழைய எல்பிடிய அல்-அமான் வித்தியாலயம் மற்றும் கெலிஓயா கலுகமுவ முஸ்லிம் மத்திய கல்லூரி என்பவற்றின் பழைய மாணவருமாவார்.

# ஒழுக்க சீர்கேடுகளுக்
# துணைபோகும் மேற்குலகும்

-ரஸ்மின் MISc
(துணை ஆசிரியர் - 'அழைப்பு' இஸ்லாமிய சஞ்சிகை)



**விபச்சாரத்தின் வாயிலை திறந்துவிடும் காதல் தொடர்புகள்**

உலகியல் மாற்றத்தில் ஒழுக்க விழுமியங்களின் வீழ்ச்சி நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டிருப்பதை நாம் அன்றாட வாழ்க்கையில் காணக் கிடைக்கிறது.

இதன் முக்கிய பகுதியாக ஒழுக்க சீர்கேட்டை மக்கள் மத்தியில் பரப்ப வேண்டும் என்பதற்காகவே நாட்களும், வாரங்களும் பிரிக்கப்பட்டு அனாச்சாரங்கள் அதில் அரங்கேற்றப்படுகின்றன.

- **முத்தமிடுவோர் தினம்,**
- **நிர்வாணமாக இருப்போர் தினம்,**
- **இறுகக் கட்டியணைப்போர் தினம்,**
- **ஓரினச் சேர்க்கையாளர்கள் தினம்,**
- **பாலுணர்வைத் தூண்டுவோர் தினம்**

என்று நாளுக்கு நாள் தினங்களைப் பிரித்து வைத்து அதனைக் கொண்டாடி மகிழ்வதை ஓர் ஆரோக்கியமான செயல்பாடாக மேற்குலகு கருதுகின்றது.

கடந்த 2012 ஜனவரி மாதத்தில் நிர்வாணமாக இருப்போர் தினம் என்றொன்றை ரஷ்ய மக்கள் கொண்டாடியதும், ஆண்கள் பெண்கள் என்ற வேறுபாடின்றி அனைவரும் நிர்வாணமாக காட்சி தந்ததையும் மிகப் பெரிய சாதனையாக ஊடகங்கள் கொண்டாடின.

அதே ஜனவரி மாதத்தில் முழு உடம்பையும் காட்டிக் கொண்டு திரியும் சுமார் இருபத்தி ஐயாயிரம் பெண்களை ஓரிடத்தில் கூட்டி உலகிலேயே அதிகமான நிர்வாணிகள் ஒன்றிணைந்த இடம் என்ற உலக சாதனையை படைத்தமை ஒழுக்க விழுமியங்களை பேணிப் பாதுகாப்பவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டது.

இது வரைக்கும் பல நாடுகளிலும் ஒழுக்கச் சீர்கேட்டை ஆதரிக்கும் தறுதலைகள் முன்வைத்த கோரிக்கைகளில் ஒன்றுதான் பாலியல் கல்லூரிகள் திறக்கப்பட வேண்டும். அதில் ஆண் பெண் வித்தியாசமின்றி பாலியல் தொடர்பான செய்திகள் செயல்பாட்டுடன் விபரிக்கப்பட வேண்டும் என்பது.

பல நாடுகளும் இந்தக் கோரிக்கையை கண்டு கொண்டாலும், வெளிப்படையாக அது தொடர்பான முயற்சிகளில் ஈடுபடாமல் இருந்தன. ஆனால் கடந்த ஆண்டு இறுதியில் அமெரிக்காவில் பாலியல் தொடர்பான கற்கைகள் மற்றும் செயல்பாட்டு விளக்கம் கொடுக்கும் கல்லூரியை ஒரு பெண் ஆசிரியர் ஆரம்பித்துள்ளார்.

**தாய்ப் பாலில் ஐஸ் க்ரீம்**

குழந்தைக்காக தாயிடம் இருந்து கிடைக்கும் தாய் பாலை விற்பனைப் பொருளாக ஆக்கிய கொடுமையை தற்கால நவீன யுகத்தில் நாம் பார்க்கக் கிடைக்கிறது எவ்வளவு பெரிய அவலம்.

ஆம் தாய்ப் பால் மூலம் செய்யப்பட்ட ஐஸ் க்ரீம் ஆஸ்த்ரேலியாவில் விற்பனைக்கு வந்துள்ளது. வெட்கக் கேட்டின் உச்சத்திற்கே மேற்கத்தேயம் சென்று விட்டது.

**விபச்சாரத்திற்கு துணை போகும் பெற்றோர்கள்**

மேற்கு நாடுகளின் தற்போதைய நிலை எந்தளவுக்கு மோசமான கலாசாரத்தை தோற்றுவித்துள்ளது என்றால், ஒரு பெண் பிள்ளை சக மாணவர்களுடன் சுற்றுலா செல்கிறாள் என்றால் குறிப்பிட்ட பிள்ளையின் பெற்றோர் பிள்ளையின் கைப் பையில் (ஹேன் பேக்) கருத்தடை மாத்திரைகளை வைத்து அனுப்ப வேண்டும். இல்லாத பட்சத்தில் அரசாங்கம் பெற்றோர் மீது நடவடிக்கை எடுக்கும்.

நவீனம் என்ற பெயரில் ஒழுக்க நாகரீகம் கேள்விக் குறியாக்கப்படும் அவலம் நிகழ்வதை எத்தனை பெற்றோர்கள் உணர்கிறார்கள்?

**சீர்கேட்டுக்கு ஒரு தினமா?**

கலாசார சீர்கேட்டுக்கு தினங்களை உண்டாக்கிய சிலர் பெப்ரவரி 14ம் தேதியை காதலர்கள் தினம் என்று அழைக்கிறார்கள்.

கிறித்தவ மத போதகர் வேலன்டைன் என்பரின் நினைவாக ரோம பாரம்பரியத்தின் வாயிலாக உருவானது தான் இந்த வேலன்டைன் தினம். பிப்ரவரி 14 ஆம் தேதி கொண்டாடப்படும் இந்த நாளை வணிக மயமாக்குவதற்காகவே மேற்கத்திய நாடுகள் இதை காதலர் தினமாக அறிவித்துள்ளது.

எதற்காக பெப்ரவரி 14 தேர்வு செய்யப்பட்டது என்பதற்கு எந்த சரியான வரலாறும் இல்லாத இந்த நாள்,இன்றைக்கு பல பெண்களின் கற்பு பறிபோகும் நாளாக மாறிவிட்டது.

நமது இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல! மேற்கத்தியகலாசாரம் என்ற பெயரில் ஒழுக்கம் இங்கும் கேள்விக் குறியாக்கப் படுகின்றது.

இன்றைக்கு உள்ள மீடியாக்கள் காதலை ஊக்கப்படுத்தும் வண்ணம் தனியாக பல்வேறு நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்கும் அளவிற்கு காதல் சாதரண விஷயம் என்பதையும் தாண்டி 'அடப்பாவி உனக்கு காதலியே இல்லையா? நீயெல்லாம் வாழ்ந்தே பயனில்லை' என்று நண்பர்கள் பேசிக்கொள்ளும் அளவிற்கு முக்கியமான விஷயமாக மாறி விட்டது.

இதில் கவலைக்குரிய விஷயம் என்னவெனில் இஸ்லாமிய இளைஞர்களும், இளம் பெண்களும் இந்த காதல் எனும் சமூக சீர்கேட்டில் விழுந்து விடுகின்றனர்.

இதற்கெல்லாம் காரணம் காதல் என்ற பெயரில் நடைபெறும் அநாச்சாரங்கள் மற்றும் அசிங்கங்கள் பற்றிய விழிப்புணர்வோ இஸ்லாமிய ஒழுக்க வாழ்வைப் பற்றிய அறிவோ நம் பெற்றோர்களிடத்திலும், பிள்ளைகளிடத்திலும்,இல்லாமையே.

**மனிதத் தன்மையின் அடிப்படை வெட்கமே!**

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்கள் இறைத் தூதர்களின் சொற்களிலிருந்து அடைந்து கொண்ட (அறிவுரைகளில்) ஒன்று தான், "நீ வெட்கப்படவில்லை என்றால் விரும்பியதையெல்லாம் செய்து கொள்" என்பது.

அபூ மஸ்ஊத் உக்பா பின் அம்ர் (ரலி) அவர்கள், (புகாரி - 3483)

"வெட்க உணர்வு இல்லாதவர்கள் எதை வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள்" என்று நபியவர்கள் சொல்வதிலிருந்து வெட்கம் என்ற உணர்வு எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. அது மட்டுமன்றி வெட்கம் இஸ்லாமியனிடம் இருக்க வேண்டிய அடிப்படைப் பண்புகளிலும் ஒன்றாகும்.

"விபச்சாரத்தில் ஆதமுடைய மகனுக்குள்ள பங்கை இறைவன் எழுதியுள்ளான். அதை அவன் அடைந்தே தீருவான். கண் செய்யும் விபச்சாரம் பார்வையாகும். நாவு செய்யும் விபச்சாரம் பேச்சாகும். மனம் ஏங்குகின்றது. இச்சை கொள்கின்றது. பிறப்பு உறுப்பு இவை அனைத்தையும் உண்மையாக்குகின்றது அல்லது பொய்யாக்குகின்றது" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல்: புகாரி 6243

தவறான பார்வையையும், சிந்தனையையும்,பாலியல் தொடர்பான பேச்சுக்களையும் விபச்சாரத்தின் ஒரு பகுதி என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

எனவே காதல் என்ற பெயரில் நடந்து வரும் காமக் களியாட்டங்களுக்கு இஸ்லாத்தில் எள்ளளவும் அனுமதி இல்லை.

ஒருவர் ஒரு பெண்ணை மணம் முடிக்க விரும்பினால் அந்தப் பெண்ணின் பொறுப்பாளர்களிடம் போய் பேசி, மணம் முடித்துக் கொள்ள வேண்டும். இது தான் இஸ்லாம் கூறும் வழிமுறை.

திருமணத்திற்கு முன்பு பெண்ணைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

முகிரத் இப்னு ஷுஃபா (ரலி) நபி (ஸல்) அவர்களிடம் வந்து தனக்கு மணம் பேசி முடிக்கப்பட்ட செய்தியைக் கூறினார். நபி (ஸல்) அவர்கள், "நீ அந்தப் பெண்ணைப் பார்த்தாயா?" என்று கேட்டார்கள். அவர் இல்லை என்று கூறினார். உடனே நபி (ஸல்) அவர்கள், "பெண்ணை நீ போய் பார். அது உங்கள் இருவருக்கிடையில் நட்பு வளருவதற்குச் சிறந்ததாக இருக்கும்" என்று கூறினார்கள்.

(நூல்: நஸயீ 3183)

மேற்கூறிய அறிவுரைகளை பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு சிறுவயது முதல் கூறி காதல் எனும் சீர்கேட்டில் பிள்ளைகள் விழுந்து விடாமல் பாதுகாக்க வேண்டும்.

ஆனால் மாணவ, மாணவியர் எப்படிக் காதலிக்க வேண்டும் என்ற கேடுகெட்ட கலாச்சாரத்தை டி.வி.க்கள் கற்றுக் கொடுக்கின்ற போது. பெற்றோரும் சேர்ந்து கொண்டு தான் அதை பார்க்கின்றனர்.

விளைவு, பிள்ளைகள் பரீட்சையில் தோல்வியடைவது ஒருபுறமிருக்க யாருடனேனும் ஓடிப்போகும் போது பெற்றோர்கள் அவமானப்பட்டு தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கு சென்று விடுகின்றனர்.

**செல்போனும் பிள்ளைகளின் சீரழிவும்**

பெற்றோர் செய்கின்ற மற்றொரு பெரிய தவறு, தங்கள் பிள்ளைகளுக்கு செல்போன்கள் வாங்கிக் கொடுப்பதாகும்.

செல்போன் பிள்ளைகளின் ஒழுக்க வாழ்வை பாழாக்கிக் கொண்டிருக்கிறது. பல்வேறு முனைகளில் செல்போன்கள் நமது பிள்ளைகளை ஒழுக்கச் சீர்கேட்டிற்கும், சீரழிவிற்கும் இழுத்துச் செல்கின்றன.

செல்போன்களில் நடமாடும் பாலியல் வக்கிர, ஆபாச செயல்கள் இளைஞர் மற்றும் இளம் பெண்களிடையே இன்றைக்கு சர்வசாதாரமாக நடைபெற்று கொண்டிருக்கின்றது.

தங்கு தடையற்ற காதல் பேச்சுக்கள் இந்த செல்போன்களில் தான் நடைபெறுகின்றன. எந்த ஓர் ஆணும், பெண்ணும் நேரில் சந்திக்கும் போது,அவர்களது வெட்க உணர்வுகள் அவர்களிடமிருந்து வார்த்தைகள் வெளி வருவதைத் தடுத்து விடும். அத்துடன் சமுதாயத்தின் கழுகுப் பார்வைகள், சமூகக் கட்டுப்பாடுகள் பெரிய திரைகளாக நின்று, பெரும் தீமைகள் நடைபெறாமல் காக்கின்றன.

ஆனால் இந்த வெட்கத் தடைகளையும், சமூகத் தடைகளையும் செல்போன்கள் தகர்த்தெறிந்து, தங்கு தடையற்ற செக்ஸ் பேச்சுக்களைப் பரிமாற்றம் செய்வதற்குத் துணை புரிகின்றன.

ஆண், பெண் பிள்ளைகளுக்கு நாம் செல்போன்கள் வழங்கினால் நாமே அவர்களை விபச்சாரத்திற்கு ஊக்குவித்தவர்களாவோம். வாலிப வயது ஆண், பெண் இருபாலரும் செல்போன்களை செக்ஸ் போன்களாகத் தான் பயன்படுத்துகின்றனர்.

பிள்கைளுக்கு செல்போன் வாங்கி கொடுப்பதை நிறுத்தினால் பெப்வரி 14 உங்கள் பிள்ளையின் கற்பு பறிபோகும் நாளாக மாறாமல் தடுக்கலாம்.

இந்த காதல் என்ற சீர்கேட்டால் சமூகத்தின் ஒழுக்கம் எனும் கட்டமைப்பே சீர் குலைந்து விட்டது. இதன் காரணமாக தற்காலத்தில் திருமணத்திற்கு முன் பெண்களுக்கு கன்னி பரிசோதனை (virgin test) நடத்தபடுகின்றது. இந்த காதல் சமூகத்தில் அவ்வளவு ஒழுக்க சீர்கேட்டை கொண்டு வந்துள்ளது.

காதலினால் ஒழுக்கக் கேடான விஷயங்கள் ஒருபுறமிக்க இதையெல்லம் மிஞ்சும் அளவிற்கு இந்தக் காதல் என்ற சீர் கேட்டால் எத்தனை உயிர்கள் பறிபோகின்றது.

கடந்த 2009 ஆம் ஆண்டு இந்தியாவில் மாத்திரம் காதல் விவகாரத்தில் நடைபெற்ற கொலைகளின் எண்ணிக்கை 217

(தினமணி - தமிழ்நாடு பதிப்பு 8-5-2010).

என்றாவது அம்மா நேசிக்காததால் மகன் தற்கொலை என்ற செய்தியை கேள்வி பட்டுள்ளோமா? கிடையாது!

ஆனால் காதலி நேசிக்காததால் காதலன் தற்கொலை அல்லது காதலியின் முகத்தில் அசிட் ஊற்றினான் போன்ற செய்திகளை நிறைய கேள்விபட்டிருப்போம்.

மகள் அல்லது மகன் ஓடிப்போய்விட்டதால் பெற்றோர்கள் அவமானத்தில் தற்கொலை செய்கின்றனர்.

பிள்ளைகளை ஒழுக்கத்துடன் ஒழுங்காக வளர்த்திருந்தால் இந்த அவல நிலை பெற்றோர்களுக்கு ஏற்படுமா?

வீட்டில் காதலுக்கு சம்மதிக்காததால் காதல் ஜோடி தற்கொலை! இந்த செய்தியும் பத்திரிகைகளில் அதிகம் பார்த்திருப்பீர்கள்.

ஆரம்பத்திலேயே காதல் சீர்கேட்டை பிள்ளைகளுக்கு புரிய வைத்திருந்தால் பிள்ளைகளை பரிகொடுக்கும் அவல நிலை பெற்றோர்களுக்கு ஏற்படுமா?

தன் காதலியை காதலித்தவனை ஆத்திரத்தில் கொலை செய்த காதலன். அல்லது இன்னொருத்தனை காதலித்ததால் காதலியை கொன்ற காதலன். இந்த செய்தியை பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள்.

இதில் கள்ளக் காதல் வேறு! அதில் கள்ளக் காதலன் கொலை அல்லது கள்ளக் காதலி கொலை என்று உயிர் பலி இதை விட அதிகம் என்பது பத்திரிக்கை படிப்பவர்களுக்குத் தெரியும்.

இப்படி உயிர் கொல்லியாகவும், ஒழுக்கக் கேட்டை கட்டவிழ்த்து விடும் செயலாகவும் இருக்கும் இந்த காதலுக்கு ஒரு தினம் வைத்து உலகம் முழுவதும் கொண்டாடப்படுகின்றது.

இதற்கெல்லாம் காரணம் எவன் செத்தாலும் எங்களுக்கு கவலை இல்லை எங்களுக்கு பணம் தான் முக்கியம் என்று மீடியாக்கள் கொஞ்சம் கூட சமுதாய அக்கரை இல்லாமல் செயல்பட்டு இந்த காதலை ஊக்கப்படுத்திக் கொண்டிருப்பது தான்.

அடுத்தவன் பிள்ளை நாசமா போனா பரவாயில்லை உன் அக்கா தங்கை நாசமாகிவிடக்கூடாது என்று சுய நலத்தோடு யோசிக்கும் இளைஞர்களே சமுதாய அக்கறையோடு நடந்து கொள்ளுங்கள்!

சமுதாய அக்கறையுள்ள இளைஞர்களும், பிள்ளைகளும் ஒழுக்கத்துடன் இருக்க வேண்டும் என்று நினைக்கும் பெற்றோர்களும் இந்த பெப்ரவரி 14 ஐ புறக்கணித்தால் உயிர்ப் பலிகளும் சமூகச் சீர்கேடுகளும், அசிங்கங்களும் மற்றும் திருமணத்திற்கு முன்பே கற்பு பறிபோகும் நிலையும் ஏற்படாமல் நமது சமுதாயத்தை காப்பாற்றலாம்!

பெப்ரவரி 14 ஆம் தேதியும் டிசம்பர் 1 ஆம் தேதியும் நம்மை பொறுத்தவரை ஒன்று தான்.

எய்ட்ஸ் எனும் உயிர்க் கொல்லி நோய்க்காக டிசம்பர் 01 உலக எய்ட்ஸ் நாளாக அறிவிக்கப்பட்டு அதில் எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்யப்படுகின்றது இவற்றிக்கு (தனி நாள் ஒதுக்காமல் அனைத்து நேரங்களிலும் நன்மையை ஏவி தீமையை தடுக்க வேண்டும் என்பதே நமது நிலை).

அதே போன்று தான் பெப்ரவரி 14 ல் காதல் கொண்டாட்டங்கள் நடைபெறாமல் தடுக்க காதல் எனும் உயிர் கொல்லி பற்றி விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் செய்யப்பட வேண்டும். அன்று மட்டும் இல்லாமல் எல்லா நேரங்களிலும் இந்த வழிப்புணர்வு பிரச்சாரங்கள் மக்களிடையே செய்யப்பட வேண்டும்.

### கால அவகாசம் மறுப்பு; சசி நீதிமன்றில் சரண்

# அம்மா சமாதியில் சபதம் எம்.ஜி.ஆர். இல்லத்தில் தியானம்



- ★ அக்ரஹாரா சிறையில் பலத்த பாதுகாப்பு
- ★ துணை பொதுச் செயலாளராக தினகரன்
- ★ சசி - எடப்பாடி பழனிச்சாமி மீது ஆட்கடத்தல் உள்ளிட்ட 3 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு







(திருச்சி சாஹுல் அமீது)

சொத்துக்குவிப்பு வழக்கில் குற்றவாளியெ என அறிவிக்கப்பட்ட சசிகலாவுக்கு நீதிமன்றம் கால அவகாசம் வழங்க மறுத்துள்ளதையடுத்து அவர் நேற்று பெங்களூர் நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

சொத்து குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் 4 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ள குற்றவாளி சசிகலா சரணடைய கால அவகாசம் அளிக்க முடியாது என உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

நாடே பரபரப்பாக எதிர்பார்த்திருந்த சொத்து குவிப்பு மேல்முறையீட்டு வழக்கின் தீர்ப்பை நேற்றுமுன்தினம் உச்சநீதிமன்றம் வழங்கியது. அதில் குற்றம்சாட்டப்பட்டிருந்த மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கான 4 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் அபராதத்தை உறுதி செய்தது. ஆனால் ஜெயலலிதா உயிரோடு இல்லாத காரணத்தால் அவர் வழக்கிலிருந்து விடுவிக்கப்படுவதாக அறிவித்தது.

இதனையடுத்து மற்ற மூவரும் உடனடியாக பெங்களூர் நீதிமன்றத்தில் சரணடைய வேண்டும் என உத்தரவிட்டது. ஆனால், கூவத்தூரிலிருந்து நேற்றுமுன்தினம் இரவு போயஸ் தோட்ட இல்லத்திற்கு வந்தார். இந்நிலையில் சரணடைய கால அவகாசம் கேட்டு உச்சநீதிமன்றத்தில் சசிகலா தரப்பு வாய்மொழியாக கோரப்பட்டது.

இதனால் கடும் அதிருப்தி அடைந்த உச்சநீதிமன்றம், சசியின் கோரிக்கையை நிராகரித்ததுடன், உடனடியாக சரணடைய உத்தரவிட்டுள்ளது. மேலும் நேற்று வழங்கப்பட்ட தீர்ப்பில் ஒரு சிறு வார்த்தையை கூட மாற்றம் செய்ய முடியாது என ஒரே வார்த்தையில் நீதிபதிகள் கண்டிப்புடன் தெரிவித்தனர். இந்நிலையில் சரணடையாத பட்சத்தில் சசிகலா கைது செய்யப்படுவார் என கர்நாடக அரசு வழக்கறிஞர் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து நேற்று 5 மணிக்குள் சரணடைவதாக புறப்பட்ட சசிகலா சென்னை மெரினா கடற்கரையிலுள்ள மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் நினைவிடத்தில் கண்ணீர் அஞ்சலி செலுத்திய பின்னர் 'தாய் மேல் ஆணை.. என்று கூறி சபதமேற்றுகொண்டுள்ளார். இதனையடுத்து அங்கிருந்து கிளம்பிய அவர் ராமாபுரத்திலுள்ள எம்.ஜி.ஆர் இல்லத்துக்குச் சென்று அவரது உருவப்படத்துக்கு முன் அமர்ந்து சிறிது நேரம் தியானத்தில் ஆழ்ந்திருந்த அவர் அஞ்சலி மரியாதை செலுத்திய பின்னர் அங்கிருந்து வெளிக்கிளம்பினார்.

இந்நிலையில் சொத்துகுவிப்பு வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ள அ.தி.மு.க பொதுச் செயலாளர் சசிகலா மற்றும் அமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மதுரை தெற்கு தொகுதி அ.தி.மு.க எம்.எல்.ஏ.,சரவணன் கொடுத்த முறைப்பாட்டின் பேரில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆட்கடத்தல் உட்பட 3 பிரிவுகளின் கீழ் கூவத்தூர் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழகம் மட்டுமல்லாது கடந்த 10 நாட்களாக நாடே உற்று நோக்கி கொண்டிருக்கிறது தமிழகத்தின் முதல்வராக யார் வருவார்கள் என்று. சசிக்கு எதிராக போர்க் கொடி தூக்கிய முதலமைச்சர் ஓ.பன்னீர்



அக்ரஹாரா சிறை வளாகம்

செல்வத்திற்கு சில சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ஆனால் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு அவருக்கு கிடைத்துவிடுமோ என்ற அச்சத்தில் கடந்த ஒரு வாரமாக அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கூவத்தூர் 'கோல்டன் பே ரிசார்ட்டில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இதற்கு காரணம் சசிகலா, எடப்பாடி பழனிச்சாமி மற்றும் 3 பேர். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என மதுரை தெற்கு தொகுதி எம்.எல்.ஏ., சரவணன், கூவத்தூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். மேலும் சில நாட்களுக்கு முன் பன்னீர்செல்வம் இல்லம் சென்று ஆதரவளித்த அவர், கூவத்தூரிலிருந்து மாறுவேடத்தில் தப்பி வந்ததாக கூறி பரபரப்பை ஏற்படுத்தினார். இந்நிலையில் அவர் அளித்துள்ள முறைப்பாட்டின் அடிப்படையில் சசி மற்றும் பழனிச்சாமி மீது இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

எடப்பாடி பழனிச்சாமி, ஆளுநரிடம் ஆதரவு எம்.எல்.ஏ.,க்கள் கடிதம் அளித்து ஆட்சியமைக்க உரிமை கோரியுள்ள நிலையில் அவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**துணை பொதுச் செயலாளராக தினகரன்**

அ.தி.மு.கவின் துணை பொதுச் செயலாளராக தினகரனை சசிகலா நியமித்துள்ளார்.

இந் நிலையில், கட்சியிலிருந்து ஜெயலலிதாவால் நீக்கப்பட்ட ஒருவரை மீண்டும் கட்சியில் சேர்த்ததுடன் ஒரே நாளிலேயே அவரை துணை பொதுச் செயலாளராகவும் நியமித்ததற்கு எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

தினகரனை கட்சியில் அனைத்து பொறுப்புகளிலிருந்தும் கடந்த 2011ஆம் ஆண்டு ஜெயலலிதா நீக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

**அக்ரஹாரா சிறையில் பலத்த பாதுகாப்பு**

சசிகலா சரணடைவதை முன்னிட்டு பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

துணை ஆணையர் போராலிங்கய்யா தலைமையில் 3 ஆய்வாளர்கள், 5 உதவி ஆய்வாளர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டதுடன், 120 ரிசர்வ்பொலிஸாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மேலும் சசிகலா சரணடைய சிறைக்கு செல்லும் வழியில் 3 இடங்களில் தடுப்புகள் அமைக்கப்பட்டு தீவிர சோதனை மேற்கொள்ளப்பட்டது. நீதிபதி அஷ்வத்த நாராயணா முன்பு சசிகலா சரணடைந்தமை குறிப்பிடத்தக்கது.



முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஜெயலலிதாவின் அண்ணன் மகள் ஜெ.தீபா ஆதரவளித்துள்ளதையடுத்து சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள ஜெயலலிதாவின் சமாதியில் அஞ்சலி செலுத்தியபோது..... (திருச்சி சாஹுல் அமீது)

# 104 செயற்கைக்கோள்களுடன் விண்ணில் பாய்ந்த PSLV - C37





104 செயற்கைக்கோள்களுடன் பிஎஸ்எல்வி -சி37 ரொக்கெட் ஸ்ரீஹரிகோட்டா முதலாவது ஏவுதளத்திலிருந்து வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) ஜி.எஸ்.எல்.வி, பி.எஸ்.எல்.வி. ரொக்கெட் மூலம் செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தி வருகிறது. மேலும் வர்த்தக ரீதியாகவும் ஆன்ட்ரிக்ஸ் நிறுவனம் மூலம் வெளிநாட்டு செயற்கைக்கோள்களையும் விண்ணில் செலுத்தி வருகிறது. பூமியை கண்காணிப்பதற்காக, 714 கிலோ எடை கொண்ட இந்தியாவின் கார்டோசாட்-2 செயற்கைக்கோளை பிஎஸ்எல்வி சி37 ரொக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது.

மேலும் கார்டோசாட்-2 செயற்கைக் கோள்களுடன் இந்தியாவின் ஐ.என்.எஸ்-1ஏ, ஐ.என்.எஸ்-1பி என 2 நானோ வகை செயற்கைக்கோள்களும், அமெரிக்கா, இஸ்ரேல், கஸகஸ்தான், நெதர்லாந்து மற்றும் அரபு நாடுகளை சேர்ந்த 101 வெளிநாட்டு செயற்கைக்கோள்களும் அனுப்பப்பட்டுள்ளன.

104 செயற்கைக்கோள்களும் ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள சதீஷ்த வான் விண்வெளி மையத்தின் முதலாவது ஏவுதளத்திலிருந்து வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டன. பி.எஸ்.எல்.வி -சி37 ரொக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது. ரஷ்யா ஒரே ரொக்கெட் மூலம் 37 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தியதே இதுவரை உலக சாதனையாக இருந்தது. தற்போது இஸ்ரோ பி.எஸ்.எல்.வி -சி37 ரொக்கெட் மூலம் 104 செயற்கைக்கோள்களை அனுப்பி உலக சாதனை படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## உலகச் செய்திகள்

### தென் சீனக் கடலில்...

# மிதக்கும் அணு உலைகள் அமைக்க சீனா திட்டம்



தென் சீனக் கடலிலுள்ள தீவுகளில் மின்சாரத் தேவைக்காக சுமார் 20 மிதக்கும் அணு உலைகள் அமைக்க சீன அரசு முடிவெடுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தென் சீனக் கடல் பகுதியின் பெரும் பகுதியை சொந்தம் கொண்டாடி வரும் சீனா, அங்கு செயற்கைத் தீவுகளை அமைத்து கடற்படை தளங்களை அமைத்து வருகின்றது. சீனாவின் இந்த நடவடிக்கைக்கு அண்டை நாடுகளான வியட்நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா, தாய்வான் ஆகிய நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. மேலும், சர்வதேச நாடுகள் மத்தியில் இந்த விவகாரத்தை கொண்டு செல்லும் முயற்சியில் அந்நாடுகள் ஈடுபட்டுவருகின்றன.

தென்சீனக் கடலிலுள்ள சில தீவுகள் மற்றும் சீன அரசு அமைத்து வரும் செயற்கைத் தீவுகள் ஆகியவற்றின் மின்சாரத் தேவைகளுக்காக, கடலில் சுமார் 20 மிதக்கும் அணு உலைகள் அமைக்க சீன அரசு திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுதொடர்பாக, சீன பாதுகாப்பு அமைச்சக அறிவியல், தொழில்நுட்ப நிறுவனத்தின், இணை இயக்குநர் வாங் யேய்ரன் தெரிவிக்கையில்,

"இயற்கைச் சீற்றங்களில், மிதக்கும் அணு உலைகள் சிறிய அளவிலான பாதிப்பை மட்டுமே சந்திக்கும். ஏதேனும், அவசரமான சூழ்நிலை ஏற்பட்டால் கூட அணு உலைகளை எளிதாக கையாளலாம். பராமரிப்பு செய்வதும் எளிது. தென் சீனக் கடலில் 23 அணு உலைகள் படிப்படியாக அமைக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே, தென் சீனக் கடற்பகுதி சர்ச்சைக்குரிய பகுதியாக இருந்து வரும் நிலையில், சீனாவின் இந்த நடவடிக்கை மேற்கண்ட நாடுகளிடையே மிகுந்த கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால், உலக நாடுகள் மீண்டும் சீனாவுக்கு கண்டனம் தெரிவிக்க தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வட கொரிய ஜனாதிபதியின் சகோதரர் மலேசியாவில் படுகொலை



வட கொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன்னின் சகோதரர் மலேசியாவில் படுகொலை செய்யப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

உலக நாடுகளின் தடை மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் கண்டனத்துக்கு உள்ளாகி வரும் வட கொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன், அணு ஆயுதங்களையும், கண்டம்விட்டு கண்டம் பாயும் நவீனரக ஏவுகணைகளையும் அவ்வப்போது தொடர்ந்து பரிசோதித்து வருகிறார்.

இந்நிலையில், கிம் ஜோங் உன்னின் ஒன்றுவிட்ட சகோதரரான (தந்தையின் சகோதரர் மகன்) கிம் ஜோங் நாம் மலேசியாவில் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என தென்கொரிய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

# டிரம்ப்பின் பிரித்தானிய விஜயம்: 20 இலட்சம் பேர் கடும் எதிர்ப்பு

### கையெழுத்து இயக்கம் நிராகரிப்பு



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்பின் பிரித்தானிய விஜயத்தை எதிர்த்து சுமார் 20 இலட்சம் பேர் பங்கேற்ற கையெழுத்தின் கருத்தை பிரித்தானிய பிரதமர் தெரசா மே நிராகரித்துள்ளார்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள டொனால்ட் டிரம்ப்பின் அழைப்பையேற்று கடந்த 27ஆம் திகதி சந்தித்த பிரித்தானிய பிரதமர் தெரசா மே அரசு முறை பயணமாக பிரித்தானியாவுக்கு வருமாறு டிரம்ப்புக்கு அழைப்பு விடுத்தார்.

இந்த ஆண்டுக்குள் பிரித்தானியாவுக்கு டிரம்ப் வருவார் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் அவர் தங்கள் நாட்டுக்கு வரக்கூடாது என பிரித்தானியாவிலுள்ள மக்களில் ஒருபிரிவினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். தங்களது கோரிக்கையை அரசுக்கு தெரிவிக்கும் வகையில் மாபெரும் கையெழுத்து இயக்கமும் நடத்தப்பட்டது.

இதில் பங்கேற்ற 18 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் டிரம்ப்பின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து கையொப்பமிட்டுள்ள நிலையில் இந்த இயக்கத்தின் கருத்தை பிரித்தானிய பிரதமர் தெரசா மே நிராகரித்துள்ளார்.தேவைப்பட்டால், பாராளுமன்றத்தை கூட்டி இதுதொடர்பாக விவாதம் நடத்த தயார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த மாதத்துக்குள் பிரித்தானிய பாராளுமன்றத்தில் இதுதொடர்பான விவாதம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆண் வேடத்தில் கால்பந்தாட்ட போட்டி பார்த்த ஈரானிய பெண்கள் வெளியேற்றம்



ஈரானில் ஆண் வேடத்தில் கால்பந்தாட்டப் போட்டி பார்த்த பெண்கள் வெளியேற்றப்பட்டனர்.

முஸ்லிம் நாடான ஈரானில் கடந்த 1979ஆம் ஆண்டிலிருந்து மைதானத்துக்கு சென்று விளையாட்டுப் போட்டியைப்பார்க்க பெண்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தலைநகர் தெஹ்ரானில் அஷாடி மைதானத்தில் கால்பந்தாட்டப் போட்டி நடந்தது.

அதைத் தொடர்ந்து 8 இளம் பெண்கள் ஆண்கள் உடை அணிந்து மாறு வேடத்தில் சென்றனர். விளையாட்டு மைதான வாசலில் சென்றபோது அவர்களை பாதுகாவலர் அடையாளம் கண்டு கொண்டார். அதை தொடர்ந்து அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர். பின்னர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாஅத் தென்னாவ கிளையினரால் நடாத்தப்பட்ட இரத்ததான முகாம் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்ற போது, பெரும்பான்மை இன மக்களும் இதில் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர். இதன் போது எடுத்த படங்கள்
(படங்கள் கல்நேவ நிருபர்)

# சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை

பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை என்று பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சரும், அமைச்சரவை துணைப் பேச்சாளருமான கஜந்த கருணாதிலக தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பினார். இதற்கு அமைச்சர் கயந்த கருணாதிலக பதிலளித்தார்.

சமூக வலைத்தளங்களை ஒழுங்குறுத்துவதற்கான நடைமுறை உலக நாடுகளில் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. இவ்வாறான சமூக வலைத்தளங்களை பொதுமக்கள் பயன்படுத்துவது தொடர்பில் அவற்றை தெளிவுபடுத்துவதற்கு நாம் முயற்சிக்கின்றோம் . ஆனால் இதனை கட்டுப்படுத்துவதற்கோ நிறுத்துவதற்கோ நாம் தீர்மானிக்கவில்லை என்று குறிப்பிட்டார்.

# கல்விமான்கள் நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் சேவை செய்ய முன்வரவேண்டும் - ஜனாதிபதி

சமூகப் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் சிறந்த சேவைகளை வழங்க கல்விமான்கள் முன்வரவேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கல்விமான்கள் தமது துறைகளுடன் மாத்திரம் சமூகத்திலிருந்து தனிமைப்பட்டுவிடக்கூடாது எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, சமூகத்தின் பெரும்பாலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கல்விமான்கள் குரல்கொடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். நேற்று (15) கேகாலை வித்தியாலயத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி, கல்விமான்கள் தமது அறிவை சமூகத்தின் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்தி, சமூகத்தின் நன்மைக்காகச் செயற்பட வேண்டும். இன்று இலவசக் கல்வியின் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்கின்ற காலம்.

உலகின் பாராட்டைப் பெற்றுள்ள எமது நாட்டின் இலவசக் கல்வி துறையையும் இலவச சுகாதார துறையையும் மேலும் பலப்படுத்துவதற்கு அரசாங்கம் தனது பொறுப்புக்களை முழுமையாக நிறைவேற்றும் எனத் தெரிவித்தார்.

அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, கபீர் ஹாசீம், இராஜாங்க அமைச்சர் சம்பிக பிரேமதாச, பிரதி அமைச்சர் துஷ்மந்த மித்திரபால, முதலமைச்சர் மஹிபால ஹேரத் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் முன்னாள் கடற்படைத்தளபதி தயா சந்தகிரி, முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் சரத் மாயாதுன்ன, பாடசாலை அதிபர் ஜீ. ஏ. எம். எஸ். சரத்சந்திர உள்ளிட்ட ஆசிரியர்கள், பெற்றார், பழைய மாணவர்கள் பெருமளவில் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## கிழக்கு மாகாண...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பஷீர்சேகுதாவூத், மத்திய அரசின் செயற்பாடுகளின் காரணமாக முஸ்லிம் காங்கிரஸ் பல நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கட்சியின் முன்னாள் செயலாளர் ஹஸன் அலி கட்சிக்காக முழுமையாக தன்னை அர்ப்பணித்த ஒருவர். கட்சிக்காக இதயத்தால் வாழ்ந்த ஒருவர். அவரைப் புறந்தள்ளியது அவர் மீது கிழக்கு மாகாணம் முழுவதும் அனுதாப அலையை உருவாக்கியுள்ளது என்றும் பசீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

## கொழும்பு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தில் டி.எஸ். சேனாநாயக்க பாடசாலை மாணவர்கள் 3 பேர், இரண்டு ஆனந்தா கல்லூரி மாணவர்கள், ஒரு நாலந்தா கல்லூரி மாணவன் என 6 பேர் காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

மேலும், இதனால் இலங்கை போக்குவரத்துசபைக்கு சொந்தமான பஸ் ஒன்றும் பாடசாலை சேவையில் ஈடுபடும் வேனும் தாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தினை அடுத்து மருதானையில் வைத்து 10 மாணவர்களையும் பொரளையில் வைத்து 5 மாணவர்களையும் கைது செய்துள்ள பொலிஸார் இம்மோதல் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கண்டி ...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நேற்று (15) காலை இடம்பெற்ற வாகன விபத்தில் 25 பேர் காயமடைந்த நிலையில் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

குறித்த விபத்தில் மூவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதோடு, அவர்கள் அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் இவ்வாறு காயமடைந்தவர்கள் வாகன விபத்துச் சம்பவத்தின் போது அருகில் சென்றவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் குறித்த விபத்தில் தொடர்புபட்ட இரு பஸ் சாரதிகளையும் கண்டி போக்குவரத்து பொலிஸார் கைது செய்தனர்.

கண்டிக்கு அருகாமையிலுள்ள பிரதேசங்களான கடுகண்ணாவ மற்றும் யகலத்தன்ன ஆகிய பிரதேசங்களிலிருந்து கண்டியை நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் போக்குவரத்து பஸ்கள் இரண்டுமே இவ்வாறு கண்டி கெட்டம்ப என்ற பிரதேசத்தில் மோதிக்கொண்டன.

பஸ்கள் இரண்டும் ஒன்றுக்கொன்று முந்திக்கொண்டு செல்ல முற்பட்ட வேளையிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை கண்டி பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி உவிந்த சிறி தலைமையில் மேற்கொண்டு வருகின்றனது.

## பொலிஸ்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பல பொலிஸ் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்காமையே மேற்படி நிலைமைக்கு கரணம் என முஸ்லிம் கவுன்சிலின் தலைவர் என்.எம். அமீன் கையொப்பமிட்டு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் பி.எச். மணதுங்கவுக்கு அனுப்பியுள்ள குறித்த முறைப்பாட்டு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த முறைப்பாட்டின் பிரதிகள் சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க, பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல் பழிவாங்களில் பாதிக்கப்பட்டோருக்கு சலுகைகள்

அரசியல் பழிவாங்கல் காரணமாக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தவர்களுக்கு சலுகைகள் வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

2015.04.17 ஆம் திகதி 9 இன் கீழ் 2015 இலக்கமுடைய அரச நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப அரசியல் பழிவாங்களினால் பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற மொத்த மேன்முறையீடுகளை அடிப்படையாக வைத்தே அரசு இந்நடவடிக்கையை எடுக்கவுள்ளது.

அதற்கிணங்க மொத்தமாக கிடைக்கப்பெற்றுள்ள 31,666 மேன்முறையீடுகளில் 23,093 மேன்முறையீடுகள் தொடர்பான சிபார்சுகளிற்கு 3 கட்டங்களின் கீழ் அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டது.

எஞ்சிய 8,573 மேன்முறையீடுகளில் 6 அமைச்சுகளுக்கு உரித்தான 3,440 மேன்முறையீடுகள் தொடர்பான சிபார்சுகளை உரிய நிர்வாக அதிகாரிகளின் ஊடாக செயற்படுத்துவது தொடர்பில் அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் கௌரவ ரஞ்சித் மத்துமபண்டாரவினால் கொண்டுவரப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துகே அனுமதி கிடைத்துள்ளது.

## கேப்பாப்பிலவு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

விடுவிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் தான் இவ்வாறு போராட்டங்கள் இடம்பெறுகின்றன எனவும் அவர் விசனம் வெளியிட்டார்.

அமைச்சரவையின் முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு, நேற்றைய தினம் அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதன்போது, முல்லைத்தீவு கேப்பாபிலவில் படையினர் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு மக்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றமை குறித்தும் இதுவிடயத்தில் அரசு இதுவரை எந்தவொரு உறுதியான தீர்மானங்களையும் எடுக்காமல் இருப்பது தொடர்பிலும் கேள்வி கேட்கப்பட்டது. இதற்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அந்தக் காணி கொடுக்கப்படும் என்று மக்களுக்கே தெரியும். ஆனால், அதனை உடனே வழங்குவது தொடர்பில் தான் பிரச்சினையுள்ளது. கடந்த காலத்தில் காணிகள் எதுவும் கொடுக்கப்படாது இருந்தபோது எவரும் போராடவில்லை. தற்போது வேகம் குறைவு என போராடுகிறார்கள். எப்படியும் அந்தக் காணிகளை விடுவிக்க அரசு நிச்சயமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும். எனினும், இவற்றை ஒரே இரவில் செய்து முடிக்க முடியாது. இதுவரைக்கும் நாம் பல காணிகளை விடுவித்துள்ளோம். அதேபோல இதனையும் விடுவிப்போம் என்றார்.

இதேவேளை அந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டிருந்த இராணுவ பேச்சாளர் பிரிக்கேடியர் ரொஷான் செனவிரட்ன குறித்த கேள்விக்கு பதிலளிக்கும் போது,

குறித்த பிரதேசம் வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமானதாகும். 2009 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை எந்த பிரச்சினையும் இருந்ததில்லை. இப்போதுதான் பிரச்சினை எழுந்துள்ளது. எவ்வாறாயினும் தற்போது விமானப் படை மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. இந்த கலந்துரையாடலின் பின்னர் தீர்வு கிடைக்கும் என கருதுகின்றோம் என தெரிவித்தார்.

அதேநேரம், யுத்தத்திற்கு முன்னர் அந்த பிரதேசம் மக்களுடையதாகத் தான் இருந்தது. இப்போது எவ்வாறு வனப் பாதுகாப்பு திணைக்களத்திற்கு உரித்தாக மாற்றமடைந்தது? என கேட்ட போது பதிலளித்த அமைச்சர் ராஜித சேனாரட்ன,

ஒருவேளை மக்கள் அங்கு அனுமதியின்றி குடியேறியிருக்கலாம் அல்லவா. அவர்கள் குடியேறினார்கள் என்பதற்காக வனப் பாதுகாப்பு பகுதியில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. ஒன்று வனப்பகுதியை விட்டு மக்களை வேறு இடத்துக்கு குடியமர்த்த வேண்டும். இல்லையேல், வனப்பகுதியை குறைத்து மக்களைக் குடியேற்ற வேண்டும். இவை தான் சரியான முறையாகும் என்றார்.

## மாகாண...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அங்கீகாரத்துக்குச் சமர்ப்பித்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான அதிகாரங்களைப் பெற்றுக் கொடுக்கும்.

மாகாண முதலமைச்சர்கள் அனைவரும் இதற்கான இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர். மாகாண சபைகளின் இந்த செயற்பாடு மாகாண சபைகளின் முதலாவது புரட்சிகரமான செயற்பாடாகவும் விளங்கும் என மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய தெரிவித்தார்.

மேல் மாகாண முதலமைச்சில் நேற்று (18) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் (UDA) உள்ளூராட்சி மன்றங்களிடமிருந்து மீளப்பெறப்பட்டுள்ள அதிகாரங்களை திரும்பவும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்குவதற்கு பாரிய நகர அபிவிருத்தி மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் எனவும் மேல் மாகாண முதலமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

உள்ளூராட்சி மன்றங்களிடமிருந்த பல்வேறு அதிகாரங்களை மீளப்பெறும் நகரஅபிவிருத்தி அதிகாரசபையின் செயற்பாடு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் நடவடிக்கையன்றி அதிகாரசபையின் செற்றிட்டம் எனத் தெரியவருகின்றது. எமது நியதிச் சட்டம் தயாராகவுள்ளது. சபை அங்கீகாரம் பெறுவது மாத்திரமே தேவையாகியுள்ளது. சிக்கலான நிலையொன்று ஏற்படாதிருக்க அமைச்சர் செயற்படுவார் என நான் எதிர்பார்க்கிறேன். வட மாகாண முதலமைச்சர் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்த போதிலும் மாகாண சபைகள் சமஷ்டி முறைக்குச் செல்வதை அனுமதிக்க முடியாது. சர்வதேச நீதிபதிகளின்றி தேசிய நீதித்துறையின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடிய ஆற்றல் அரசுக்கு உள்ளது எனவும் முதலமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் அமைச்சர் கிரியெல்ல ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அவரது சேர்ட் பொக்கட்டில் இருப்பது போன்று கருத்து தெரிவிக்கின்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஐக்கிய தேசியக் கட்சியின் பரம்பரைச் சொத்தல்ல. ஐ.தே.கட்சி அமைச்சர்களின் ஊழலுக்கு நாம் ஒரு போதும் துணைபோக மாட்டோம். தேவையான நேரத்தில் எமக்கு வெளியேற முடியும். நாட்டின் சட்டம், பொருளாதாரத்தை வழி நடத்தும் பொறுப்பை கையேற்குமாறு ஜனாதிபதிக்கு நெருக்குதல்கள் அதிகரித்துள்ளன. இதனை ஜனாதிபதி செய்தல் வேண்டும்.

## பலஸ்தீனர்களை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கலந்து கொண்டதையிட்டு முஸ்லிம் முற்போக்கு முன்னணி தனது விசனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது என முன்னாள் அமைச்சரும் முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபருமான ஏ.எச்.எம். அஸ்வர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில், இஸ்லாத்தின் விரோதியாக, முதல் ஆசானாக, கணிக்கப்படுகின்ற சியோனிசவாதி மோசே தயானுடைய நடவடிக்கைகளை முழு உலக முஸ்லிம்களும் எதிர்க்கும் வேளையில் அவருடைய இஸ்லாமிய விரோத செயற்பாடுகளை அமைச்சர் ரவூப் ஹக்கீம் அறியாமலிருப்பது சமுதாயத்தை மிகவும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. அவர் இலங்கைக்கு வரக்கூடாது என்று இலங்கை பலஸ்தீன நட்புறவு சங்கமும் பூரண அறிக்கையை வெளியிட்டுள்ளது. சர்வதேச முஸ்லிம் விரோதியான சியோனிசவாதியினுடைய கூட்டத்தில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கலந்து கொண்டதையிட்டு சமுதாயம் தமது வியப்பினைத் தெரிவிக்கின்றது.

அதேவேளை, இலங்கையில் எந்த விதமான கட்டட நிர்மாணத்திற்கும் அவரது பங்களிப்பை பெறக்கூடாது, அவர் இந்த நாட்டுக்கு வருவதற்கும் இடமளிக்கக் கூடாது என்பதுதான் இந்த நாட்டு மக்களுடைய ஏகோபித்த குரலாக ஒலிக்கின்ற நிலையில், அமைச்சர் ரவூப் ஹக்கீம் இதில் கலந்து கொண்டதையிட்டு முஸ்லிம் முற்போக்கு முன்னணி தன்னுடைய ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றது - என்றும் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## எண்ணெய்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் விஞ்ஞான அமைச்சரான ஆர்த்தர் சினோடினொஸ் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளது.

நான்கு நாட்கள் உத்தியோகபூர் விஜயத்தை மேற்கொண்டு ஆஸ்திரேலியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நேற்றைய தினம் ஆஸ்திரேலிய வர்த்தக, புதிய உற்பத்திகள் மற்றும் விஞ்ஞான அமைச்சரான ஆர்த்தர் சினோடினொஸை சந்தித்து விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

கத்மண்டு, பாராளுமன்றில் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது இலங்கைத் தரப்பினரால் முன்வைக்கப்பட்ட இந்த யோசனையை அடுத்தே, மேற்குறித்த விடயத்துக்கு தேவையான ஒத்துழைப்புக்கள் அனைத்தும் வழங்கப்படும் என்று ஆஸ்திரேலிய அரசினால் குறிப்பிடப்பட்டது.

## உயர்கல்வி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பதிவாளர் ஆகியோர் வெளிநாட்டு பயணமொன்றில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர்கள் நாடு திரும்பியதும் சைடமுக்கு மாணவர்களை உள்வாங்குவதா? இல்லையா? என்பது குறித்து உயர் கல்வியமைச்சுடன் கலந்துரையாடி தீர்மானிக்கவுள்ளதாகவும் டாக்டர் நெவில் பெர்னேன்டோவின் ஊடக செயலாளர் தெரிவித்தார்.

சைடம் நிறுவனத்திற்கு மருத்துவ மாணவர்கள் உள்வாங்கிக்கொள்வதை 6 மாதங்களுக்கு நிறுத்தப்பட்டுள்ளதா? என்று கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சைடம் மருத்துவ கற்கையை மருத்துவ சபையில் பதியாவிட்டால் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்குள்ளாகவேண்டிவரும் என்றும் அநீதியிழைக்கப்பட்ட சைடம் மாணவர்கள் மீண்டும் நீதிமன்றம் செல்ல நேரிடும் என்றும் சைடமின் ஸ்தாபகர் டாக்டர் நெவில் பெர்னாண்டோ தெரிவித்திருந்தார்.

டாக்டர் நெவில் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளதாவது,

உயர் கல்வியமைச்டன் கலந்துரையாடி தீர்மானமொன்றிற்கு வராதவரையில் மாணவர்களை உள்வாங்குவதை நிறுத்தப்போவதில்லை. சைடம் பேராசிரியர்கள் அதிக கொடுப்பனவுகளைப் பெற்றே போதிக்கின்றனர். மாணவர்களை உள்வாங்காது அவர்களுக்கு ஊதியம் வழங்க முடியாது. நாம் அரச போதானா வைத்திய சாலையில் ஒரு மாணவருக்கு 50ஆயிரம் ரூபா செலுத்தியே பயிற்சி பெற்றோம். பணத்தைப் பெற்று பயிற்சி வழங்கிய பின்னர் அங்கீகாரம் வழங்க முடியாதென்பது மாணவர்களுக்கு இழைக்கும் அநீதியாகும். அடுத்தகட்ட நடவடிக்கைகள் உயர் கல்வியமைச்சருடன் கலந்துரையாடிய பின்னரே தீர்மானிப்போம்.

## நாட்டுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

5000 கோடி ருபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனவே, இதுவிடயம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவனத்தில் எடுத்து உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஒருங்கிணைந்த எதிரணி உறுப்பினரான மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

பொரளையில் அமைந்துள்ள என்.எம். பெரேரா மத்திய நிலையத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டத்தின் ஆட்சி தொடர்பில் ஆய்வு செய்யும் சர்வதேச அமைப்பொன்று நடத்திய கருத்துக்கணிப்பில், சட்டவாட்சி செய்யும் நாடுகளில் 2014 ஆம் ஆண்டில் 54 ஆவது இடத்திலிருந்த இலங்கை, புதிய அரசின் ஆட்சியில் 66 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது மஹிந்த அரசில் ஜனநாயகம்,

சட்டவாட்சி இல்லையென இந்த கூறியவர்களின் நிலைமைத் தான் தற்போது இவ்வாறு மோசமடைந்துள்ளது. மோசடி மற்றும் ஊழல் தொடர்பில் ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் மேற்கொண்ட கருத்துக் கணிப்பிலும் இலங்கை 12 நிலைகள் பின்தங்கியுள்ளது. இதுதான் இந்த நல்லாட்சியின் சின்னமாகும். நல்லாட்சி எனக் கூறினாலும் இவ்வரசில் ஜனநாயகமோ சட்டவாட்சியோ இல்லை என்பதை சர்வதேசமே தற்போது உணர்ந்துவிட்டது.

அத்தோடு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட முக்கிய அமைச்சர்களான மலிக் சமரவிக்ரம, தலதா அதுகோரல, கபிர் ஹசிம் ஆகியோருக்கு எதிராக நாம் இதுவரை எட்டு குற்றச்சாட்டுகளை முனவைத்துள்ளோம்.

மூன்று மாதங்களும் 15 நாட்களும் கடந்துள்ள போதிலும் இந்த விவகாரம் தொடர்பில் அடிப்படை விசாரணைக் கூட நடத்தப்படவில்லை. இதுபோன்ற சில முக்கியஸ்தர்களால் நடத்தப்பட்ட மோசடியால் மட்டும் அரசுக்கு 5000 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனினும், இந்த துஷ்பிரயோகங்கள் குறித்தெல்லாம் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காது குருடனைப் போலத் தான் அரசு இருக்கிறது.

எனவே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்கு மக்கள் வழங்கிய ஆணையை தக்கவைத்துக்கொள்ள வேண்டுமாயின் அரசுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டகளை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்றார்.

## சைடமுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கண்டி, குளியாப்பிட்டி மற்றும் காலி ஆகிய பகுதிகளிலிருந்து கொழும்பு நோக்கியே இந்த வாகனப் பேரணி நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது.

சில பகுதிகளில் இருந்து இன்று(16) மற்றும் நாளை(17) ஆகிய நாட்களில் வாகனப் பேரணியுடன் மக்களைத் தெளிவுபடுத்தும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவுள்ளதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்தது.

இதேவேளை, எதிர்வரும் 17 ஆம் திகதி குறித்த 5 மாவட்டங்களிலிருந்தும் வாகனப் பேரணி கொழும்பிற்கு வருகை தரவுள்ளதோடு. மக்களுக்கு தெளிவுப்படுத்தும் நடவடிக்கையும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# Sports
விளையாட்டுச் செய்திகள்



## சூதாட்ட சர்ச்சை: பாக். வீரர் நசீர் கைதாகி விடுதலை!

கடந்த 9ஆம் திகதி டுபாயில் ஆரம்பமான 2ஆவது பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகள் குறித்த விசாரணைகளின் அடிப்படையில் பாகிஸ்தான் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் நசீர் ஜம்ஷீட்டிற்கு தற்காலிக போட்டித்தடை விதிக்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்திருந்த நிலையில், சர்வதேச கிரிக்கெட் பேரவையின் பங்களிப்புடன் பிரித்தானியாவின் சர்வதேச ஊழல் மோசடி தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் பிரித்தானியாவில் வைத்து நசீர் ஜம்ஷீட்டுடன், அவருடைய நண்பரான யூசுப் என்பவரும் கடந்த திங்களன்று கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில், இவ்விருவரும் தற்போது பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக பிரித்தானிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனினும், தொடர்ந்து விசாரணைகளை மேற்கொள்ளும் நோக்கில் குறித்த நபர்களுக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை பிணை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முன்னதாக இஸ்லாமாபாத் யுனைடெட் அணி வீரர்களான சர்ஜீல் கான் மற்றும் காலித் லத்தீப் ஆகியோரும் இதே குற்றச்சாட்டில் இடைநீக்கம் செய்யப்பட்டு பாகிஸ்தானுக்கு திருப்பி அனுப்பிவைப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவர்களின் வெளியேற்றத்திற்கும் நசீர் ஜம்ஷித்தின் போட்டித் தடைக்கும் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாக கருதப்படுகின்றது. ஆனால், என்ன காரணத்திற்காக நசீருக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்பது குறித்து இன்னும் உறுதியாகத் தெரிவிக்கப்படவில்லை. குறித்த தொடரில் இஸ்லாமாபாத் யுனைடெட் அணியில் விளையாட ஒப்பந்தமான வேகப்பந்துவீச்சாளரான மொஹமட் இர்பான், தற்போது முறைகேடு தொடர்பான விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார் எனவும் தெரிய வருகின்றது. இதுவரை பாகிஸ்தான் சுப்பர் லீக் டி20 போட்டியில் சூதாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 3 பாகிஸ்தான் வீரர்களுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபையால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## ஐ.பி.எல். ஏலத்தில் 21 இலங்கை வீரர்கள்
### சந்திமாலும் விண்ணப்பம்

பீ.எப்.எம் றிஷாட்

10ஆவது ஐ.பி.எல். 20 கிரிக்கெட் போட்டி இந்தியாவில் ஏப்ரல் 6ஆம் திகதி தொடங்குகிறது. இந்த போட்டிக்கான வீரர்கள் ஏலம் பெங்களூருவில் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது. இம்முறை ஐ.பி.எல். ஏலத்தில் பங்கேற்க 799 வீரர்கள் பதிவு செய்து இருந்தனர். இதில் எந்தெந்த வீரர்களை ஏலத்துக்கு தகுதி உடையவர்கள் என்று ஆராயப்பட்டது. அதன்படி இறுதி ஏலப்பட்டியலில் 351 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். இதில் 122 வெளிநாட்டு வீரர்கள் அடங்குவர்.

இதன்படி ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கான வீரர்கள் ஏலத்தில் இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மெத்தியூஸிற்கு அடிப்படை விலை ரூ.2 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (இலங்கை பெறுமதி நாலரை கோடி) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் புனே வொரியெர்ஸ் மற்றும் டெல்லி டெயார் டெவில்ஸ் அணிகளுக்காக விளையாடியுள்ள மெத்யூஸ், தென்னாபிரிக்காவுடன் அண்மையில் இடம்பெற்ற டி20 போட்டியின் போது உபாதைக்குள்ளானார். எனவே மெத்யூஸின் உபாதை பூரண குணமடையாத நிலையில், அவர் இம்முறை ஐ.பி.எல். போட்டித் தொடரில் பங்கேற்பாரா என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது. இந்நிலையில் இம்முறை ஐ.பி.எல். ஏலத்தில் பங்கேற்க 21 இலங்கை வீரர்கள் விண்ணப்பித்துள்ளனர். எனினும், அண்மைக்காலமாக மோசமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திவருகின்ற இலங்கை அணியின் உப தலைவர் தினேஷ் சந்திமாலும் ஐ.பி.எல். ஏலத்தில் பங்கேற்க விண்ணப்பித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.ஆனால் கடந்த காலங்களிலும் சந்திமால் இவ்வாறு ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்க ஏலத்தில் இடம்பெற்றிருந்த போதிலும், எந்தவொரு அணியும் அவரை ஏலத்தில் எடுக்கவில்லை.

இதேவேளை, இம்முறை ஐ.பி.எல். ஏலத்தில் இலங்கையிலிருந்து அஞ்சலோ மெத்யூஸ்,தினேஷ் சந்திமால், லக்ஷான் சந்தகென், திஸர பெரேரா, நிரோஷன் திக்வெல்ல, குசல் மெண்டிஸ், குசல் ஜனித் பெரேரா, அகில தனஞ்சய, அசேல குணரத்ன, குசல் மெண்டிஸ், லஹிரு குமார, சுரங்க லக்மால், ஜீவன் மெண்டிஸ், சீக்குகே பிரசன்ன, துஷ்மந்த சமீர, தனஞ்சய டி சில்வா, தில்ஷில த சில்வா, அஞ்சலோ பெரேரா, தசுன் சானக, ரமேஷ் மெண்டிஸ், மலிந்த புஷ்பகுமார மற்றும் பர்விஸ் மஹ்ரூப் ஆகியோர் விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும், இம்முறை போட்டியில் ஐ.பி.எல். அணிகள் வீரர்களை தேர்வு செய்ய மொத்தம் ரூ.143.33 கோடியை செலவிட முடியும். ஒவ்வொரு அணியிலும் அதிகபட்சமாக 9 வெளிநாட்டு வீரர்கள் உட்பட 27 பேர் இடம் பெறலாம். இந்த பருவத்துக்கான ஐ.பி.எல். தொடரில் மொத்தம் 28 வெளிநாட்டுக்காரர்கள் உட்பட 76 வீரர்கள் ஏலத்தில் எடுக்கப்படுகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



## யூசுப் பதானுக்கு அனுமதி மறுப்பு

அடுத்த மாதம் 8ஆம் திகதி முதல் நடைபெறவுள்ள 2ஆவது ஹொங் கொங் டி20 லீக் தொடரில் பங்கேற்கவிருந்த இந்திய வீரர் யூசுப் பதானுக்கு அப்போட்டியில் பங்கேற்க இந்திய கிரிக்கெட் சபையினால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்திய அணியில் இடம்பிடித்த போது பிரபலமானதை விட ஐ.பி.எல். தொடரின்மூலம் பிரபலமானவர் யூசுப் பதான். இவர் தற்போது கொல்கத்தா அணிக்காக விளையாடி வருகிறார்.2012ஆம் ஆண்டுக்குப் பிறகு யூசுப் பதான் இந்திய அணியில் இடம்பெறவில்லை என்பதுடன், தற்போது இந்திய வீரர்களுக்கான ஒப்பந்தத்திலும் அவருக்கு இடம் வழங்கப்படவில்லை.எனினும், ஐ.பி.எல். தொடரில் மட்டுமே இடம்பிடித்து வருகிறார்.

இந்நிலையில் ஹொங் கொங் டி20 லீக் தொடரில் கவ்லூரன் கேன்டன்ஸ் அணியில் விளையாடுவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார்.இதற்காக ஆரம்பத்தில் இந்திய கிரிக்கெட் சபையின் அனுமதியைப் பெற்றுக்கொண்ட யூசுப் பதானுக்கு தற்போது அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் வெளிநாட்டு கிரிக்கெட் சபைகளால் ஒழுங்கு செய்யப்படுகின்ற டி20 போட்டிகளில் பங்குபற்றுவதற்கு இந்திய வீரர்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.அதே கொள்கையை தொடர்ந்து நடைமுறைப்படுத்தும் நோக்கில் இவ்வனுமதி மறுக்கப்பட்டதாக பிசிசிஐயின் உயர்அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.





பாலமுனை இப்னு ஸீனா கனிஷ்ட வித்தியாலயத்தின் பாடசாலை மட்ட இல்ல விளையாட்டுப் போட்டி பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் பாடசாலை அதிபர் எஸ்.எம்.சாகிர் ஹுஸைனின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிதிகளாகக் கலந்து கொண்ட கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம்.நசீர், அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.காசிம், ஆசிரிய ஆலோசகர் எம்.ஐ.அன்சார், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ.அன்சில், மின்ஹாஜ் மகாவித்தியாலய அதிபர் கே.எல்.உபைதுல்லா ஆகியோர் வெற்றிக் கிண்ணங்களை வழங்கி வைப்பதைப் படங்களில் காணலாம்.(படங்கள் ஐ.ஏ.ஸிறாஜ் பாலமுனை)

## 2016 - 2017 உள்ளூர் கிரிக்கெட் போட்டிகள் புதுப்பொலிவுடன் கொழும்பில் அங்குரார்ப்பணம்



பீ.எப்.எம் றிஷாட்

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 2016 மற்றும் 2017ஆம் ஆண்டுக்கான 3 நாள், ஒருநாள் மற்றும் டி20 ஆகிய உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுமுன்தினம் இரவு இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபாலவின் தலைமையில் கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்றது.

இலங்கையில் உள்ள 23 முதற்தர கழகங்கள் பங்குபற்றும் இவ்வருடத்துக்கான போட்டிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளதுடன், 460 முதற்தர கழகங்களைச் சேர்ந்த இளம் வீரர்கள் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் திலங்க சுமதிபால கருத்து வெளியிடுகையில்,சர்வதேச மட்டத்தில் இலங்கை கிரிக்கெட் கடந்த காலங்களில் பெற்றுக்கொண்ட அனைத்து வெற்றிகளுக்கும் இலங்கையில் உள்ள கிரிக்கெட் கழகங்களின் பங்களிப்பே முக்கிய காரணமாக இருந்தது.எனவே தற்போது 4 நாள் போட்டிகள் நிறைவடைந்துள்ள நிலையில், ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளையும் சிறப்பாக நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் ஆரம்பித்துள்ளது.கடந்த காலங்களைப் போன்று இம்முறையும் உள்ளூர் கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டித் தொடரை நடத்துவதற்கு 300 மில்லியன் ரூபாய் பணத்தை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் ஒதுக்கியுள்ளதுடன், அவை அனைத்து கிரிக்கெட் கழகங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றது. இதன்படி 15,17, 19,21 மற்றும் 23 வயதிற்குட்பட்ட, மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் திறமைகளை வெளிப்படுத்துகின்ற வீரர்களுக்கு, இலங்கையின் அனைத்து பகுதிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இன, மத, மொழி வேறுபாடின்றி தேசிய அணியில் விளையாடும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதே இப்போட்டித் தொடரின் நோக்கமாகும். மேலும் உலக கிரிக்கெட் நாடுகளில் இலங்கையைப் போன்று திறமையான வீரர்கள் எங்கும் இருக்க மாட்டார்கள்.எனவே அவ்வாறான திறமைகளை வெளிப்படுத்தும் வீரர்களுக்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அனைத்து பங்களிப்பினையும் செய்துகொடுக்கவுள்ளது. இதற்காக பயிற்சி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதோடு மட்டுமல்லாது, வீரர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்குத் தேவையான அத்திவாரத்தையும் இதன்மூலம் ஏற்படுத்திக்கொடுக்கவுள்ளோம் எனவும் தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிர்வாகத்தை கையில் எடுத்து ஒரு வருடம் நிறைவடைய முன்னர் கிரிக்கெட் நிறுவனத்தில் காணப்பட்ட நிதி நெருக்கடியை குறைத்து, கிரிக்கெட்டிற்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.இதேவேளை, இலங்கையின் கிரிக்கெட் கலாசாரத்தை முழு உலகிற்கும் எடுத்துச் செல்லும் நோக்கில்,எமது உள்ளூர் வீரர்களுக்கு அதிகளவான அனுபவத்தைப் பெற்றுக்கொடுப்பதற்காக சர்வதேச தரத்திலான போட்டித் தொடரொன்றை விரைவில் நடத்துவதற்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியாவின் ஐ.பி.எல், பாகிஸ்தானில் பி.எஸ்.எல், பங்களாதேஷில் பி.பி.எல், அவுஸ்திரேலியாவில் பிக்பேஷ், மேற்கிந்திய தீவுகளில் சி.பி.எல் போன்ற போட்டிகளைப் போன்று போட்டித் தொடரொன்றை நடத்த எதிர்பார்த்துள்ளோம் எனவும் தெரிவித்தார்.

## சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்டம்: நாகுர் மீராவின் அபாரம் கலம்போ எவ்.சிக்கு வெற்றி



பீ.எப்.எம் றிஷாட்

இரண்டாவது தடவையாக பிற்போடப்பட்ட டயலொக் சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்டப் போட்டிகளின் ஐந்தாவது வாரப் போட்டிகளின் இறுதிப் போட்டியில் கடற்படை அணியை 3க்கு 1 என்ற கோல்கள் அடிப்படையில் வீழ்த்தி கலம்போ எவ்.சி அணி மற்றுமொரு வெற்றியைப் பதிவு செய்தது.

களனிய கால்பந்தாட்ட மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இப்போட்டியில் கலம்போ எவ்.சி வீரர் நாகுர் மீராவின் அபார கோல்களால் அவ்வணி வெற்றியைப் பதிவு செய்து புள்ளிகள் பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தை தக்கவைத்துக்கொண்டது.போட்டியின் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய கலம்போ எப்.சி அணி, 20ஆவது நிமிடத்தில் நாகுர் மீராவின் கோலுடன் முன்னிலை பெற்றது.அதனையடுத்து, போட்டியின் 23ஆவது நிமிடத்தில் கலம் போ எவ்.சி சார்பாக டேவிட் ஓசாஜி மற்றுமொரு கோலைப் பெற்றுக்கொள்ள கலம்போ எவ்.சி அணி 2 கோல்களால் முன்னிலை பெற்றது.எனினும் போட்டியின் முதல் பாதியில் கோல் பெற்றுக்கொள்வதற்கான பல வாய்ப்புக்களை கடற்படை அணியினர் நழுவவிட்டனர். எனினும்,போட்டியின் 40ஆவது நிமிடம் கிடைக்க பெற்ற வாய்ப்பை சரியாக பயன்படுத்திகொண்ட கலம்போ எவ்.சி வீரர் நாகுர் மீரா தமக்கான அடுத்த கோலைப் பெற்றுக்கொடுத்தார்.இதன்படி முதல்பாதியில் 3க்கு 0 என அவ்வணி முன்னிலை பெற்றது. முதல் பாதியின் இறுதியில் வெளிக்காட்டிய சிறப்பான ஆட்டத்தை கலம்போ எவ்.சி அணி இரண்டாவது பாதியிலும் வெளிப்படுத்தினாலும், கடற்படையினரின் சிறப்பான ஆட்டத்தால் அவர்களால் எந்தவொரு கோல்களையும் பெற்றுக்கொள்ள முடியாமல் போனது. எனினும், தொடர்ந்து போராடிய கடற்படையினர் சார்பாக முன்கள வீரர் சதுரங்க சன்ஜீவ போட்டியின் 60ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றைப் பெற்றுக்கொடுத்தார்.

## போல்டுக்கு லோரஸ் விருது



இந்த ஆண்டுக்கான லோரஸ் விளையாட்டு அமைப்பின் சிறந்த வீரர் விருதை ஜமைக்காவின் உசைன் போல்ட் வென்றார். சிறந்த வீராங்கனைக்கான விருது அமெரிக்க ஜிம்னாஸ்டிக்ஸ் நட்சத்திரம் சிமோனாவுக்கு தரப்பட்டது.

ஆண்டு முழுவதும் சிறப்பாக செயல்படும் விளையாட்டு நட்சத்திரங்களுக்கு, லோரஸ் விளையாட்டு அமைப்பு சார்பில் விருது வழங்கப்படுகிறது. இது விளையாட்டின் ஒஸ்கார் என அழைக்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான விருது பட்டியலில் ரியோ (2016) ஒலிம்பிக்கில் 3 தங்கம் (100, 200, 4★100 மீ.,) வென்ற ஜமைக்கா தடகள வீரர் போல்ட், போர்த்துக்கல் கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோ, பிரிட்டன் டென்னிஸ் வீரர் முர்ரே இடையே போட்டி காணப்பட்டது.

இந்நிலையில், மொனாகோவில் நடைபெற்ற விருது விழாவில் இந்த ஆண்டுக்கான சிறந்த வீரர் விருதை போல்ட் வென்றதாக அறிவிக்கப்பட்டது. இதன் மூலம், 2009, 2010, 2013ஆம் ஆண்டுக்குப்பின் மீண்டும் கைப்பற்றினார். அதிக முறை (4) வென்ற வீரர்கள் பட்டியலில் ரோஜர் பெடரருடன் (சுவிட்சர்லாந்து, டென்னிஸ்) முதலிடத்தையும் பகிர்ந்து கொண்டார்.

சிறந்த வீராங்கனை விருதை அமெரிக்க ஜிம்னாஸ்டிக்ஸ் நட்சத்திரமான சிமோன் பைல்ஸ் வென்றார். கடந்த ரியோ ஒலிம்பிக்கில் அசத்திய இவர் 4 தங்கம், ஒரு வெண்கலம் கைப்பற்றினார். ஓய்வுக்குப்பின் மீண்டும் போட்டியில் பங்கேற்று அசத்திய நட்சத்திரங்களுக்கான விருதை அமெரிக்க நீச்சல் வீரர் பெல்ப்ஸ் வென்றார். ரியோ ஒலிம்பிக்கில் இவர் 5 தங்கம், ஒரு வெள்ளி கைப்பற்றி இருந்தார்.சிறந்த அணிகளுக்கான விருதை அமெரிக்க கூடைப்பந்து அணியான சிகாகோ கப்ஸ் வென்றது.

## மிஸ்பாவுக்கு புதிய நிபந்தனை

பாகிஸ்தான் அணியில் மிஸ்பா உல்-ஹக் தொடர்ந்து விளையாட விரும்பினால், தலைவராகவே தொடரலாம் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஷகாரியார் கான் அளித்த ஒரு பேட்டியில், பாகிஸ்தான் டெஸ்ட் அணியின் தலைவர் மிஸ்பா உல்-ஹக்கை டுபாயில் சந்தித்து நீண்ட நேரம் பேசினேன். அப்போது தனது எதிர்காலம் குறித்து முடிவு செய்ய 10 முதல் 15 நாட்கள் வரை அவகாசம் கேட்டுள்ளார். 2010ஆம் ஆண்டு முதல் பாகிஸ்தான் அணியின் தலைவராக மிஸ்பா உல்-ஹக் இருந்து வருகிறார். அந்த பணியை அவர் நன்றாக செய்துள்ளார். அவர் தொடர்ந்து விளையாட விரும்பினால், தலைவராகவே தொடரலாம். அவர் ஓய்வு பெற முடிவு செய்தால், மூன்று வடிவிலான கிரிக்கெட்டுக்கும் ஒரே தலைவரை நியமிப்பதில் முன்னுரிமை கொடுப்போம் என்றார்.பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவரின் இந்தக்கருத்தினை அடுத்து, பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் அனைத்து வகைப் போட்டிகளினதும் தலைவராக சர்பிராஸ் அஹமட் நியமிக்கப்படுவதற்கான சாத்தியம் இருப்பதாக கிரிக்கெட் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.இதேவேளை, தற்போது நடைபெற்றுவருகின்ற பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் குவாட்டா கிளெடியேட்டர்ஸ் அணியின் தலைவராகச் செயற்பட்டு வருகின்ற சர்பிராஸுக்கு அணித்தலைமையினை வழங்க வேண்டும் பாகிஸ்தான் தெரிவுக் குழுவின் தலைவர் இன்சமாம் உல் ஹக் மற்றும் அவ்வணியின் பயிற்றுனர் மிக்கி ஆதர் ஆகியோர் ஆதரவு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மேற்கிந்திய தீவுகளுக்கு அடுத்த மாதம் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணி, 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இதன்பிறகு தான் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவது குறித்து அறிவிக்கவுள்ளதாக மிஸ்பா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 16TH FEBRUARY 2017